


Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்



மலர்: 05, இதழ்: 216 விசுவாவசு வருடம், சித்திரை மாதம் 11ஆம் திகதி வியாழக்கிழமை
(24.04.2025) ஹிஜ்ரி 1446, ஷவ்வால் - 25, 0115 886187- விலை ரூ.40 பக்கங்கள் 12




பக்கம் 04

## யாருக்காக போராடுகிறார் இளையராஜா..?



## ஜம்மு காஷ்மீரில் சுற்றுலா பயணிகள் மீதான பயங்கரவாதத் தாக்குதலில் 28 பேர் பலி

பக்கம் 10





## ஐ.பி.எல். சாதனை படைத்த ராகுல்

பக்கம் 12



# டான் பிரியசாத் சுட்டுக்கொலை!

## வீட்டுக்குள் புகுந்து துப்பாக்கிதாரிகள் கைவரிசை

## விசாரணைக்காக விசேட பொலிஸ் குழுக்கள்

» 02 பக்கம்

## சட்டத்தை விட தோட்டாக்கள் மேலோங்கிவிட்டன

### சஜித் காட்டம்

‘‘நாடெங்கும் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் நடக்கின்றன. இந்த ஆட்சியில் சட்டத்தை விட தோட்டாக்களே மேலோங்கி காணப்படுகின்றன. நாட்டில் பயங்கரமான சூழ்நிலை உருவாகி கொலைக் கலாசாரம் தலைதூக்கியுள்ளது....



» 02 பக்கம்

## பொதுப் பாதுகாப்பு பேரவலத்தில்

### அரச நிர்வாகம் குறித்து சாணக்கியன் கவலை



» 02 பக்கம்

## தேசபந்துவின் செயற்பாடுகளை ஆராயும் கூட்டம் பாராளுமன்றில்



பொலிஸ்மா அதிபர் ரி.எம்.டபிள்யூ. தேசபந்து தென்னக்கோன் தனது பதவித் தத்துவங்களை துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் விசாரணை செய்து அதன் வெளிப்படுத்தல்களை அறிக்கையிடுவதற்கான விசாரணைக் குழு முதல் தடவையாகப் பாராளுமன்றத்தில் கூடியது.

பொலிஸ்மா அதிபர் ரி.எம்.டபிள்யூ. தேசபந்து தென்னக்கோன் தனது பதவித் தத்துவங்களைப் பாரதூரமான வகையில் துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் விசாரணை செய்து அதன் வெளிப்படுத்தல்களை அறிக்கையிடுவதற்கான விசாரணைக் குழு நேற்று (23)...

» 02 பக்கம்

## ஈஸ்டர் அறிக்கையை ஆராயும் குழுவில் ஷானி



» 02 பக்கம்

## உஷ்



டான் பிரியசாத் துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தின் பின்னணியில் தனிப்பட்ட காரணங்கள் இருப்பதாகக் கூறப்பட்டாலும் அதற்கப்பால் அரசியல் காரணங்கள் இருக்கலாமெனச் சொல்லப்படுகிறது.

டான் பிரியசாத் பல வழக்குகள் சம்பந்தமான ஆதாரங்களைக் கொண்டிருந்தவர் என்றும் அவரைக் கொலை செய்தால் அவற்றை அப்படியே மூடிவிடலாம் என்று யாரும் கருதினார்களா என்ற சந்தேகமும் விசாரணையாளர்களுக்கு எழுந்துள்ளதாம்.

அதனால் இந்தக் கொலை தொடர்பில் அரசியல் கண்ணோட்டத்திலும் விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாம். கஞ்சிப்பான இம்ரானின் அணியே யாராவது ஒருவரின் ஒப்பந்தத்துக்கமைய இந்தக் கொலையை செய்திருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறதாம்.

## போப் பிரான்ஸிஸுக்கு அஞ்சலி செலுத்த வத்திக்கானில் திரண்ட மக்கள் கூட்டம்

### இறுதிச்சடங்கு சனிக்கிழமை நடைபெறும்



» 02 பக்கம்

## கமெண்ட் கந்தர்...



செத்தவரும் லேசுப்பட்ட ஆளில்லை பாருங்கோ?

## மாத்தறை சிறையில் கலகம்

### அங்குனுகொலபெலஸ்ஸவுக்கு மாற்றப்பட்ட 506 கைதிகள்

மாத்தறை சிறைச்சாலையில் நேற்று முன்தினம் (22) இரவு ஏற்பட்ட அமைதியின்மை காரணமாக சிறைச்சாலையின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன், இந்த நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டிருந்தாலும் ஒருசில கைதிகளின் செயற்பாட்டால் சிறைச்சாலை சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

» 02 பக்கம்

## நான்கு மாதங்களில் 37 துப்பாக்கிச்சூடு

### 26 பேர் பலி



» 02 பக்கம்



# 3,00,000 பேர் கண்டியை நோக்கிப் படையெடுப்பு

ஸ்ரீ தலதா மாளிகை வழிபாட்டுக்கு வருகைதரும் பக்தர்களின் எண்ணிக்கை நேற்றுடன் மூன்று இலட்சத்தைக் கடந்துள்ளதால் எதிர்வரும் இரு நாட்களுக்கு வழிபாட்டுக்காக கண்டிக்கு வரவேண்டாமென்று பொலிஸார் விசேட அறிவிப்பை விடுத்துள்ளனர்.

மேலும், பொலிஸ் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

ஸ்ரீ தலதா மாளிகை வழிபாடு கடந்த 18ஆம் திகதி ஆரம்பித்து நாளை 25ஆம் திகதி வரை இடம்பெறுகிறது. தலதா வழிபாடு தினமான நேற்றைய தினம் வரை மூன்று இலட்சம் பக்தர்கள் வழிபாடுகளுக்காக கண்டி நகரில் வரிசையில் காத்திருக்கின்றனர். அதன் காரணமாக இன்றும் (24) நாளையும் (25) இடம்பெறவேண்டிய வழிபாடுகளுக்கு போதுமான எண்ணிக்கையில் பக்தர்கள் தற்போதும் வரிசையில் காத்திருப்பதால் எதிர்வரும் இரு நாட்களுக்கு புதிய பக்தர்கள் வருகைதந்தால் அவர்களுக்கு வழிபடுவதற்கான வாய்ப்புக் கிடைக்காது. அதன்காரணமாக எதிர்வரும் இரு தினங்களுக்கு தலதா வழிபாட்டுக்கு வருகை தருவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

# தீர்வை வரிக்கு அமெரிக்காவிடம் இருந்து சாதக சமிக்ஞை

## விரைவில் கூட்டறிக்கை வெளியாகுமென ஜனாதிபதி அறிவிப்பு

அமெரிக்காவினால் விதிக்கப்பட்டுள்ள தீர்வை வரி தொடர்பில் நிதி பிரதி அமைச்சர் உள்ளிட்ட விசேட பிரிதிநிதிகள் அமெரிக்காவுக்குச் சென்று பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்கள். அந்தக் கலந்துரையாடல் மிகவும் சாதகமிக்கதாக அமைந்திருந்ததாக அவர்கள் தகவல் வழங்கியுள்ளார்கள். அதனால் இருத்தரப்புக்கும் இடையில் இணக்கத்தை ஏற்படுத்திக்கொண்டு ஐக்கிய அமெரிக்காவும் இலங்கையும் இணைந்து கூட்டறிக்கையொன்றை வெளியிடவும் தயாராக இருப்பதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

இரத்தினபுரியில் நேற்று (23) இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் வருமானம் அதிகரித்துள்ளது. ஆனால் ஐக்கிய அமெரிக்காவில் அவசர நிலைமை ஏற்பட்டுள்ளது. அந்த மாற்றங்கள் எமது நாட்டின் ஆடைத் தொழிற்றுறை உள்ளிட்ட சில ஏற்றுமதித் துறைகளில் தாக்கத்தை ஏற்படுத்துக்கூடிய எச்சரிக்கை நிலைமை நிலவுகிறது.

இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கு நாங்கள் முயற்சித்து வருகிறோம். நேற்று முன்தினம் (22) எமது நிதி பிரதி அமைச்சர் உள்ளிட்ட விசேட பிரதிநிதிகள் அமெரிக்காவுக்குச் சென்று பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்கள். அந்தக் கலந்துரையாடல் மிகவும் சாதகமிக்கதாக அமைந்திருந்ததாக அவர்கள் எனக்கு அறிவித்திருந்தார்கள். அதனால் இருத்தரப்புக்கும் இடையில் இணக்கத்தை ஏற்படுத்திக்கொண்டு ஐக்கிய அமெரிக்காவும் இலங்கையும் இணைந்து கூட்டறிக்கையொன்றை வெளியிடவும் தயாராக இருக்கிறோம்.

பிரச்சினைகளிலிருந்து விடுபடவே முயற்சிக்கிறோம். அதேபோன்று எமது பொருளாதார கட்டியெழுப்பவும் முழு முயற்சி செய்து வருகிறோம். ஒருசில நாடுகள் எடுக்கும் பொருளாதார தீர்மானங்கள் எமது நாட்டின் பொருளாதாரம் முழுமையாக வங்குரோத்தடைவதற்கு காரணமாக அமையுமாக இருந்தால், ஏதாவதொரு நாட்டில் இடம்பெறும் யுத்தம் எமது நாட்டின் பொருளாதாரத்தை வீழ்ச்சிக்கு கொண்டுச் செல்லுமென்றால் அது சுயாதீனமிக்க பொருளாதாரமாக அமையாது. பாதிப்பை தவிர்க்க முடியாது என்றாலும் பாதிப்பு ஏற்படாமல் தவிர்க்க முடியும்.

# தவறுக்கு வருந்துகிறோம்

“தமிழன்” நாளிதழின் நேற்றைய (23) பத்திரிகையின் முதல் பக்கத்தில் “கெஹேலிய மீது உயர்நீதிமன்ற விசாரணை” என்ற தலைப்பில் வெளியான செய்தியில், மேல்நீதிமன்றம் என்று பிரசுரமாக வேண்டிய இடத்தில் தவறுதலாக உயர்நீதிமன்றம் என்று பிரசுரமாகியுள்ளது.

அதாவது, “தரமற்ற இம்யூனோகுளோபுலின் தடுப்பூசியை கொள்வனவு செய்தமை தொடர்பில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட சந்தேகநபர்களுக்கு எதிரான வழக்கை விசாரணை செய்வதற்காக மேல் நீதிமன்ற மூன்று நீதிபதிகள் குழாமை நியமிக்குமாறு சட்டமா அதிபர் பிரதம நீதியரசரிடம் கோரியுள்ளார் என்று கொள்ளப்பட வேண்டும். தவறுக்கு வருந்துகிறோம்.

-ஆசிரியர்-

## நான்கு மாதங்களில்

நடப்பாண்டின் ஆரம்பத்திலிருந்து நேற்று வரையான நான்குமாத காலப்பகுதியில் 37 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதுடன் 26 பேர் உயரிழந்துள்ளனர்.

இந்த 37 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களில் 23 சம்பவங்கள் திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் குழு உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் ஏனைய 14 சம்பவங்களும் தனிப்பட்ட பிரச்சினைகளுக்காக இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனவரி மாதத்தில் ஆரம்பமாகிய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் ஏப்ரல் மாதம் வரை கல்கிசை, மன்னார், காலி, கொட்டாஞ்சேனை, கட்டானை, வெல்லம்பிட்டிய, ஹிக்கடுவ, எல்பிட்டிய, சீதுவ, தெவிநுவர, மன்னம்பிட்டி, புதுக்கடை, கம்பஹா, ஹவுங்கல, கட்டுநாயக்க, மினுவாங்கொடை உள்ளிட்ட முக்கிய பகுதிகளில் இந்தச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

உயிரிழந்தவர்களில் பொதுமக்கள், பாதாளக் குழுக்களைச் சேர்ந்தவர்கள், முன்னாள் சிறை அதிகாரியொருவர், சமூக செயற்பாட்டாளர் ஆகியோர் உள்ளடங்குகின்றனர்.

## தேசபந்துவின்..

பாராளுமன்றத்தில் முதல் தடவையாகக் கூடிக் கலந்துரையாடியது.

இந்தக் குழுவுக்கு உயர்நீதிமன்ற நீதியரசர் பி.பி.சூரசேன தலைமை தாங்குவதுடன், நீதிபதி டபிள்யூ.எம்.என்.பி இத்தவல மற்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் எம்.ஈ.டபிள்யூ. எம் லலித் ஏக்கநாயக்க ஆகியோர் ஏனைய உறுப்பினர்களாவர். இக்குழு மீண்டும் 25ஆம் திகதி கூடவுள்ளது.

2002ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் 05ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 3 (ஈ) மற்றும் 3(உ) பிரிவுகளுக்கு அமைய துர்நடத்தை மற்றும் பதவியின் தத்துவங்களைப் பாரதூரமான வகையில் துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் பொலிஸ்மா அதிபர் ரி.எம்.டபிள்யூ. தேசபந்து தென்னக்கோனை அப்பதவியிலிருந்து நீக்குவதற்கு குறித்த சட்டத்தின் 5வது பிரிவுக்கு அமைய விசாரணைக் குழு அமைக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் கடந்த 08ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

## ஈஸ்டர் அறிக்கையை...

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அறிக்கை தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட பொலிஸ் குழுவின் உறுப்பினராக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகர தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரியவால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, இந்த விசாரணை அறிக்கையை ஆய்வு செய்வதற்காக சிரேஷ்ட பிரிதிப் பொலிஸ் மா அதிபர் அசங்க கரவிட்டவின் தலைமைத்துவத்தில் நால்வர் அடங்கிய இந்தக் குழு அங்கத்தவர்களின் எண்ணிக்கை ஐந்தாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் 67,000 பக்கங்களைக் கொண்ட அறிக்கையை ஆய்வு செய்வதற்காக மேலும் சில உப குழுக்களும் நியமிக்கப்பட்டுள்ளன. குறுகிய காலத்தில் இது தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்து அந்த விசாரணைகளின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட நபர்களுக்கெதிராக அடுத்தகட்ட சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனப் பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

## பொதுப் பாதுகாப்பு...

டான் பிரியசாத்தின் படுகொலை இலங்கையில் தற்போதைய பொதுப் பாதுகாப்பு நிலை குறித்து கடுமையான கவலைகளை எழுப்புகிறது. பாதாள உலக நடவடிக்கைகளை அடக்குவதற்கான முயற்சிகள் நடந்து வருவதாக அரசாங்கத்தின் உறுதிமொழிகள் மீதான பொதுமக்களின் நம்பிக்கை, இதுபோன்ற சம்பவங்கள் தொடர்ந்து நிகழும்போது ஆழமாகக் குறைமதிப்புக்கு உட்படுத்தப்படுவதாக இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

அவர் தனது எக்ஸ் பக்கத்தில் பதிவொன்றை இட்டு நாட்டின் பாதுகாப்புக் குறித்து கேள்வியெழுப்பியே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அந்தப் பதிவில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது,

டான் பிரியசாத்தின் படுகொலை இலங்கையில் தற்போதைய பொதுப் பாதுகாப்பு நிலை குறித்து கடுமையான கவலைகளை எழுப்புகிறது. நான் அவரது செயல்களைத் தொடர்ந்து எதிர்த்து வந்துள்ளேன். பல ஆண்டுகளுக்கு முன்பு பொரளையில் நடந்த முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வின்போது அவரால் உடல் ரீதியான வன்முறை அச்சுறுத்தல்களுக்கு ஆளானேன்.

அவரது அரசியல் சார்பு எதுவாக இருந்தாலும் சமீபத்திய மாதங்களில் நாடு முழுவதும் காணப்படும் வன்முறை அதிகரித்துவரும் ஒரு வடிவத்தின் ஒரு பகுதியாக அவரது கொலை உள்ளது. இந்தச் சூழலில், பாதாள உலக நடவடிக்கைகளை அடக்குவதற்கான முயற்சிகள் நடந்து வருவதாக அரசாங்கத்தின் உறுதிமொழிகள் மீதான பொதுமக்களின் நம்பிக்கை, இதுபோன்ற சம்பவங்கள் தொடர்ந்து நிகழும்போது ஆழமாக குறைமதிப்புக்கு உட்படுத்தப்படுகிறது'' - என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## மாத்தறை...

நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக மாத்தறை, காலி மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களிலிருந்து மேலதிக பொலிஸ் குழுக்களும் விசேட அதிரடிப்படையினரும் அழைக்கப்பட்டுள்ளனர். அதனைத் தொடர்ந்து பொலிஸ் அதிகாரிகள் சிறைச்சாலைக்குள் கண்ணீர்ப்புகைப் பிரயோகமும் மேற்கொண்டுள்ளனர். கலக நிலைமையின் காரணமாக 25 பெண் கைதிகள் பாதுகாப்பு நலன்கருதி அங்குனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளதுடன் இந்தச் சம்பவத்தால் சிறைச்சாலையின் களஞ்சியம் உள்ளிட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளமையால் அவற்றைப் புனரமைக்கும் வரையில் கைதிகளின் பாதுகாப்புக்காக மாத்தறை சிறைச்சாலையிலிருந்து 506 கைதிகளையும் ஒரு வாரத்துக்கு அங்குனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலைக்கு இடமாற்றம் செய்வதற்கு சிறைச்சாலைத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. இந்தச் சம்பவத்தால் பொலிஸார் மூவர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, நேற்று முன்தினம் (22) இரவு மாத்தறை சிறைச்சாலைக் கைதிகளில் இரு தரப்புகளுக்கிடையில் ஏற்பட்ட முறுகல் நிலை காரணமாகவே அந்தச் சிறைச்சாலையில் அமைதியின்மை ஏற்பட்டுள்ளதுடன் நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக சிறைச்சாலை அதிகாரிகள் ஆகாயத்தை நோக்கித் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர். இந்நிலையில், யாருக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக சிறைச்சாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாத்தறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை வேறு சிறைச்சாலைகளுக்கு அழைத்துச் செல்ல முயற்சித்தபோதே இவ்வாறு அமைதியின்மை ஏற்பட்டுள்ளது.

மாத்தறை சிறைச்சாலையிலுள்ள கைதிகள் சிலரை அங்குனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலைக்கு இடமாற்றம் செய்ய நேற்று முன்தினம் இரவு 7.00 மணியளவில் சிறைச்சாலை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருந்தனர். அந்தச் சந்தர்ப்பத்தில் சிறைச்சாலைக் கைதிகளுக்கும் அதிகாரிகளுக்குமிடையில் அமைதியின்மை ஏற்பட்டுள்ளது. அதனால் முரணான செயற்பாடுகளும் இடம்பெற்றுள்ளன. அதன் பின்னர் கைதிகள் அவர்கள் இருந்த வாட்களிலிருந்து வெளியேறியுள்ளனர். இந்தச் சம்பவம் இடம்பெற்றவுடன் தேவையான அதிகாரிகளை அனுப்பி சிறைச்சாலையின் பாதுகாப்பை உறுதிப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்திருந்தனர். நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து கைதிகளின் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதேபோல், கைதிகளின் உறவினர்கள் அச்சமடைய வேண்டிய அவசியமில்லை. எந்தவொரு கைதிக்கும் காயமோ, சிக்கலோ இல்லை. அதற்கு இடமளிக்கவும் மாட்டோம். அதிகாரிகளுக்கும் எந்தவொரு பாதிப்பும் ஏற்படவில்லை. சிறைச்சாலைக்குள் சிக்கல் நிலை இருக்கிறது. இருந்தபோதும், சிறைச்சாலையைச் சூழ பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## டான் பிரியசாத்...

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வேட்பாளர் டான் பிரியசாத்தின் கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர்களைக் கைதுசெய்வதற்காக விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதற்காக சில பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

கொலன்னாவ, சாலமுல்ல பகுதியிலுள்ள வீட்டில் இருந்தபோது நேற்றுமுன்தினம் இரவு அவர் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

எனினும், சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

39 வயதான டான் பிரியசாத் வெல்லம்பிட்டிய,மீதொட்டமுல்ல பகுதியைச் சேர்ந்தவராவார்.

மோட்டார் சைக்கிளில் வருகைதந்த 2 சந்தேகநபர்கள் கைத்துப்பாக்கியால் துப்பாக்கிச்சூட்டை நடத்தியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

டான் பிரியசாத்தின் உடல் நேற்று பிற்பகல் அவரது குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

### மூவர் கைது

டான் பிரியசாத் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்தோடு, இந்தக் கொலையை ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பலைச் சேர்ந்த கஞ்சிபாணி இம்ரானின் பிரிவினர் செய்திருக்கலாமென்றும் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இந்தத் துப்பாக்கிச்சூடு ஒரு விருந்தின்போது இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் நடத்திய முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இத்துப்பாக்கிச்சூடானது பிஸ்டல் ரகத் துப்பாக்கியைப் பயன்படுத்தி நடத்தப்பட்டுள்ளதுடன், துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த டான் பிரியசாத், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அவரது தோள்பட்டையில் இரண்டு துப்பாக்கிச் சூட்டுக் காயங்களும் மார்பில் இரண்டு துப்பாக்கிச் சூட்டுக்காயங்களும் இருந்ததாக வைத்தியசாலைப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

### இருவருக்கு பயணத்தடை

இதற்கிடையில் ,வெல்லம்பிட்டி பகுதியில் டான் பிரியசாத் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் சந்தேகநபர்கள் எனக் கருதப்படும் இருவருக்கு கொழும்பு மேலதிக நீதவான் நீதிமன்றம் வெளிநாட்டுப் பயணத்தடை விதித்துள்ளது.

பந்துல பியால் என்பவரும் அவரது மகனான மாதவ சுதர்சனவும் வெளிநாடு செல்வதற்கு நீதிமன்றம் தடை விதித்துள்ளது. இவர்கள் இருவரும் வெல்லம்பிட்டியவைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சந்தேகநபர்களுக்கும் கொலை செய்யப்பட்ட நபருக்குமிடையில் நீண்டகாலமாகக் காணப்பட்ட தகராறே இந்தக் கொலைக்கு காரணமாகவிருக்கலாம் என்ற தகவல் விசாரணைகளின்போது தெரிய வந்துள்ளதாகப் பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர். இதனடிப்படையில் சந்தேகநபர்கள் நாட்டிலிருந்து தப்பியோடுவதைத் தடுக்கவேண்டுமெனப் பொலிஸார் நீதிமன்றத்தில் வேண்டுகோள் விடுத்தனர். அதேசமயம், லக்சத செவன வீடமைப்புத் திட்டத்தில் சம்பவம் இடம்பெற்றவேளை காணப்பட்ட நபர்களிடம் வாக்குமூலத்தைப் பெற்றுக்கொண்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்

## சட்டத்தை விட ...

இந்த வருடம் ஆரம்ப காலப்பகுதிக்குள் மட்டும் அதிகளவில் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இதனால் உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. அச்சமின்றி வீடுகளுக்குள் நுழைந்து துப்பாக்கிச்சூடு நடத்தும் நிலை இன்று காணப்படுகின்றது. வீதிகளில் சுதந்திரமாக நடமாடக்கூட முடியாத நிலைமைக்கு நாடு வந்துள்ளது. வர்த்தகர்கள், தொழில் வல்லுநர்கள் மற்றும் அரசியல்வாதிகள் என சகலருக்கும் துப்பாக்கிச்சூடு நடத்தும் நிலைக்கு நாடு தள்ளப்பட்டுள்ளது'' - என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

புலத்சிங்கள பிரதேசத்தில் நேற்று (23) இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

''நாட்டு மக்கள் சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் வாழ்வதற்கும் தமது அன்றாட வாழ்க்கையைப் பாதுகாப்பான முறையில் கழிக்கவும் ஏற்ற சூழலை உருவாக்கித் தரவேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். தற்போதைய அரசாங்கத்துக்கு இரு தேர்தல்களிலும் பெரும் மக்கள் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. முறைமையில் மாற்றத்தை மக்கள் எதிர்பார்த்தனர். இன்று நாட்டில் பயங்கரமான சூழ்நிலை உருவாகி, கொலைக் கலாசாரம் தலைதூக்கியுள்ளது. இந்த வருடம் ஆரம்பகாலப் பகுதிக்குள் மட்டும் அதிகளவில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இதனால் உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. அச்சமின்றி வீடுகளுக்குள் நுழைந்து துப்பாக்கிச் சூடு நடத்தும் நிலை இன்று காணப்படுகின்றது. வீதிகளில் சுதந்திரமாக நடமாடக்கூட முடியாத நிலையை நாடு எட்டியுள்ளது. வர்த்தகர்கள், தொழில் வல்லுநர்கள் மற்றும் அரசியல்வாதிகள் என சகலருக்கும் துப்பாக்கிச்சூடு நடத்தும் நிலைக்கு நாடு தற்போது வந்துள்ளது.

இது தொடர்பில் பாராளுமன்ற சபை அமர்வுகளிலும் வெளியிலும் கேள்வியெழுப்பினால், இது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் அல்ல என அரசாங்கம் தெரிவித்து வருகிறது. நாட்டில் கொலைக் கலாசாரம் தலைதூக்கி வருகின்ற நிலையில், அதனைத் தடுக்க முடியாமல் அரசாங்கம் மௌனம் காத்துவரும்போது, தேசிய பாதுகாப்புக்கு பாதிப்பில்லையென எவ்வாறு கூறுவது என்பதில் பிரச்சினைகள் காணப்படுகின்றன. இந்த அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அங்கத்தவர்கள் தேசிய பாதுகாப்பு தொடர்பில் டியூஷன் வகுப்புகளை நடத்துவதற்கு கூட முயற்சித்தனர். இருந்தபோதிலும், தற்போதைய ஆட்சியாளர்கள் தேசிய பாதுகாப்பு தொடர்பில் டியூஷன் போகவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. சட்டத்தை விட தற்போது தோட்டா, வாள், கத்தி, வெடிகுண்டு என்பன வென்றுள்ளன.

இவ்வாறு ஒரு நாட்டை நிர்வகிக்க முடியாது. சட்டம் மற்றும் ஒழுங்குப் பிரச்சினையை அரசாங்கமே பொறுப்பேற்று அதற்கு பொறுப்புக்கூற வேண்டும். குழந்தைகள், பெண்கள், தாய்மார்கள் என குடிமக்களுக்கு நாட்டில் பாதுகாப்பு இல்லை. அச்சத்தோடு தமது நாளாந்த நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டிய நிலைக்கு குடிமக்கள் தள்ளப்பட்டுள்ளனர். தினந்தோறும் அச்சத்தோடு பொழுதைக் கழித்து விட முடியாது. இதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நீதிமன்றங்களுக்குள்ளும் கொலைகள் இடம்பெற்றுவரும் நாட்டில் நாம் வாழ்ந்து வருகிறோம். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களை அரசாங்கத்தால் இன்னும் கூட கண்டுபிடிக்க முடியாதுபோயுள்ளது. நாடு எங்கே சென்று கொண்டிருக்கிறது? சட்டம், ஒழுங்கை சரியான முறையில் பேணவேண்டும். அரசாங்கம் இதில் கூடிய கவனம் செலுத்த வேண்டும். இதனை சாதாரணமாகக் கடந்துவிட முடியாது. இந்தப் போக்கு சரியான போக்கல்ல. மறுபுறம், மக்கள் அரசாங்கத்தின் மீது வைத்திருந்த நம்பிக்கையிலிருந்து இப்போது விலகிச் செல்கின்றனர்.

விகாரைகள், வணக்க ஸ்தலங்கள், பாடசாலைகள், பொலிஸ் நிலையங்கள் ஊடாக சிவில் பாதுகாப்புக் குழுக்கள் அமைந்து காணப்பட்டன. இன்று இவை இல்லை. இன்று இந்த ஆளுந்தரப்பினரிடம் வெறும் வாய்ப்பேச்சும் ஆணவப் பெருமிதமுமே காணப்படுகின்றன. மக்களிடம் பொய் சொல்லி, 24 மணி நேரமும் மக்களை ஏமாற்றி பொய்யான அரசியலைச் செய்யும் நிலையே காணப்படுகின்றது. இந்தப் பொய், ஏமாற்று மற்றும் செயல் இல்லாத வெறும் வாய்ப்பேச்சுகளை வைத்து முன்னெடுத்து வரும் அரசியல் கலாசாரத்துக்கு முடிவுகட்ட வேண்டும். இந்த அரசியலால் நாட்டுக்கோ மக்களுக்கோ நன்மை பயக்காது'' - எனச் சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய மக்கள் சக்தியால் முன்வைக்கப்பட்ட கொள்கை அறிக்கையின் பிரகாரம், தோட்டச் சமூகத்துக்கும் வேலையற்ற இளைஞர்களுக்கும் விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாத தரிசுக் காணிகளை வழங்கி, அவர்களை சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களாக மாற்றுவோம் என வாக்குறுதி வழங்கியிருந்தோம். ஐக்கிய மக்கள் சக்தி இவ்வாறான முற்போக்கு யோசனைகளை முன்வைத்திருந்தபோதிலும் இந்த அரசாங்கத்தினது பொய் அரசியலை நம்பி வாக்களித்து தெளிவான அதிகாரத்தை மக்கள் பெற்றுக் கொடுத்தனர். என்றாலும், துரதிர்ஷ்டமாக இன்று இந்த மக்கள் கைவிடப்பட்டுள்ளனர். முன்னைய அரசாங்கங்கள் கூறிய பொய்களோடு சேர்த்து தற்போது புதிய வகையான பொய்களையும் இந்த அரசாங்கம் நாளுக்கு நாள் கூறி வருகின்றது - என்றார்.

## போப் பிரான்ஸிஸுக்கு...

மறைந்த பாப்பரசர் பிரான்ஸிஸின் புகழுடல் பொதுமக்கள் அஞ்சலிக்காக இன்று புனித பீட்டர்ஸ் சதுக்கத்தில் வைக்கப்படவுள்ளது . இறுதிச் சடங்கு சனிக்கிழமை நடைபெறுமென வத்திக்கான் நிர்வாகம் அறிவித்துள்ளது.

உலகம் முழுவதுமுள்ள கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் மதத் தலைவரான போப் பிரான்ஸிஸ் தனது 88ஆவது வயதில் காலமானார். கடந்த சில ஆண்டுகளாகவே உடல்நலமின்றி இருந்த அவர், அவ்வப்போது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

எனினும், தேவாலயப் பணிகளை அவர் தொடர்ந்து செய்து வந்தார். கடந்த ஞாயிற்றுக்கிழமை ஈஸ்டர் பண்டிகையை முன்னிட்டு கத்தோலிக்க கிறிஸ்தவர்களுக்கு அவர் ஆசி வழங்கினார்.

இந்நிலையில், மறுநாளான திங்கட்கிழமை காலையில் உள்ளூர் நேரப்படி காலை 7.35 மணிக்கு காலமானார். பெருமூளை பக்கவாதம், கோமா, இதயம் செயலிழப்பு என அடுத்தடுத்த பாதிப்புகளால் அவரது உயிர் பிரிந்ததாக வத்திக்கான் தெரிவித்தது.

இறப்புக்கான காரணம் குறித்த மருத்துவ அறிக்கையில் இரண்டாம் வகை நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், சுவாசக் கோளாறு, நிமோனியா உள்ளிட்ட நீண்டகால உடல்நலப் பிரச்சினைகளும் விவரிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், திறந்த சவப்பெட்டியில் போப் பிரான்ஸிஸின் உடல் வைக்கப்பட்டிருக்கும் முதல் புகைப்படம் மற்றும் வீடியோவை வத்திக்கான் நேற்றுமுன்தினம் வெளியிட்டது. அதில், மறைந்த பாப்பரசரின் உடல் சிவப்பு நிற வழிபாட்டு அங்கி அணிவிக்கப்பட்டு தலையில் மிட்ரே என்ற தலைப்பாகை மற்றும் கைகளில் ஜெபமாலையுடன் வைக்கப்பட்டிருப்பது தெரிகிறது.

வத்திக்கானில் அவர் வசித்த காசா செண்டா மார்ட்டா இல்லத்தின் தனிப்பட்ட தேவாலயத்தில் இந்தப் படம் எடுக்கப்பட்டுள்ளது. போப் பிரான்ஸிஸ், ஆர்ஜென்ரீனாவின் பியூனஸ் அயர்ஸ் நகரில் பிறந்தவர். லத்தீன் அமெக்காவில் இருந்து தேர்வு செய்யப்பட்ட முதல் போப் என்ற பெருமைக்குரியவர். கடந்த 2013 மார்ச் மாதம் அவரது பதவிக் காலம் தொடங்கியது. 10 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட அவரது பதவிக் காலம் கருணை, பணிவு, சீர்திருத்தம், ஏழைகள் மீதான உலகளாவிய கவனம் உள்ளிட்ட சிறப்புகளைக் கொண்டிருந்தது.

போப்பாண்டவர் மறையும்போது அவரது உடலை வத்திக்கானில் உள்ள புனித பீட்டர்ஸ் பேராலயத்தில் நல்லடக்கம் செய்வது பாரம்rிய வழக்கமாகும். ஆனால், போப் பிரான்ஸிஸ் தனது உடலை ரோமில் உள்ள புனித மேரி மேஜர் பேராலயத்தில் அடக்கம் செய்யவேண்டுமென இறுதி சாசனத்தில் கேட்டுக்கொண்டுள்ளார். மேலும், தனது கல்லறை எளிய முறையில் எவ்வித அலங்காரமுமின்றி அமைக்கப்பட வேண்டுமென அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்நிலையில், போப் பிரான்ஸிஸின் உடல் அவரது இல்லத்திலிருந்து பொதுமக்களின் அஞ்சலிக்காக செயின்ட் பீட்டர்ஸ் சதுக்கத்துக்கு நேற்று எடுத்துச் செல்லப்பட்டது. அங்கு எதிர்வரும் சனிக்கிழமை காலை 10 மணிக்கு இறுதிச் சடங்கு தொடங்கவுள்ளது.

இதில் உலகம் முழுவதிலுமிருந்து கார்டினல்கள், பேராயர்கள், ஆயர்கள் மற்றும் பாதிரியார்கள் கலந்து கொள்கின்றனர். மேலும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் முதல் உக்ரைன் ஜனாதிபதி செலன்ஸ்கி வரை பல்வேறு நாடுகளின் தலைவர்களும் கலந்துகொள்கின்றனர். இதையடுத்து போப் பிரான்ஸிஸின் உடல் ரோம் நகரில் உள்ள புனித மேரி பேராலயத்துக்கு கொண்டு செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படவுள்ளது.

நூற்றுக்கும் மேற்பட்ட ஆண்டுகளில் வத்திக்கான் நகருக்கு வெளியில் அடக்கம் செய்யப்படும் முதல் போப் என்ற பெருமையை பிரான்ஸிஸ் பெறுவார். போப் பிரான்ஸிஸின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் அவர் பிறந்த ஆர்ஜென்ரீனாவில் ஒரு வாரத்துக்கு துக்கம் அனுஷ்டிக்கப்படுகிறது.

இதேவேளை, கொழும்பு பேராயர் கர்தினால் மால்கம் ரஞ்சித் வத்திக்கானுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

நேற்று (23) காலை 9.30 மணிக்கு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து கர்தினால் வத்திக்கானுக்குப் புறப்பட்டுள்ளார்.

அதாவது, மறைந்த பரிசுத்த பாப்பரசர் பிரான்ஸிஸின் இறுதிச் சடங்குகளில் பங்கேற்பதற்காகவே அவர் இந்தப் பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

மேலும், பாப்பரசர் பிரான்ஸிஸின் இறுதிச் சடங்கு ஏப்ரல் 26ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தினசரி பலாபலன்கள்

**விசுவாவசு வருடம் சித்திரை மாதம் 11ஆம் நாள் வியாழக்கிழமை**

**மேஷம்** தொழில் வியாபாரத்தில் அதிக இலாபங்களைப் பெறுவீர்கள். எதிர்பாராத தன வரவால் மகிழ்ச்சி அடைவீர்கள்.

**ரிஷபம்** தொழில் மூலமாக பதவி உயர்வுகள், சம்பள உயர்வுகள் அமையும். புதிய பதவிகள் வந்து சேரும்.

**மிதுனம்** பூர்வீக சொத்துக்களால் வில்லங்கம் ஏற்படும். தந்தைக்கும் உங்களுக் குமிடையிலான உறவு பாதிக்கப்படும்.

**கடகம்** திட்டமிட்ட காரியங்கள் அனைத்தும் மந்த நிலையை அடையும். வாய்ப் பேச்சால் வீண் பிரச்சினைகள்.

**சிம்மம்** கூட்டுத் தொழில், வியாபாரத்தில் நல்ல இலாபம் உண்டு. நீண்ட நாள் உங்கள் மனக்குறை தீரும்.

**கன்னி** நினைத்த காரியத்தில் வெற்றி கிட்டும். நோய், கடன், எதிரி இவை எதுவுமே இன்று உங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தாது.

**துலாம்** மனதை ஒரு நிலையில் வைத்துக் கொள்ளுங்கள். புத்திரர்களால் தொல்லையும் கவலையும் தோன்றும்.

**விருச்சிகம்** எதிர்பாராத சில விபத்துகளில் சிக்கலாம். வீடு, வாகனம் வாங்குவதும் விற்பதும் இன்றைய நாளில் கூடாது.

**தனுசு** நெருங்கிய நண்பர்களின் உதவிகள் கிடைக்கும். மன உறுதியுடன் அனைத்தையும் வெற்றி கொள்வீர்கள்.

**மகரம்** குதர்க்கமான பேச்சால் அவமானம், அபகீர்த்தி ஏற்படும். உங்களால் குடும்பத்தில் குழப்ப நிலைகள் உருவாகலாம்.

**கும்பம்** குடும்பத்தில் மங்கள காரியங்கள் நடைபெற்று மகிழ்ச்சி பிறக்கும். நோயிலிருந்து விடுதலை அடைவீர்கள்.

**மீனம்** தேவையற்றவர்களின் நட்பால் தொல்லைகள் உருவாகும். உணவு, உறக்கம் தேடிப் போனாலும் கிடைக்காது.

**திதி:** ஏகாதசி பி.ப.2.32 வரை பின் துவாதசி
**நட்சத்திரம்:** சதயம் மு.ப.10.49 வரை பின் பூரட்டாதி
**பிறை:** தேய்பிறை
**யோகம்:** மரணயோகம் முழுவதும்
**வார சூலை:** தெற்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது
**நல்ல நேரம்:** காலை- 8.58 – 11.58 மணி வரை மாலை- 3.58 – 5.58 மணிவரை

**ராகு காலம்:** 1.28 – 2.58 மணிவரை
**எமகண்டம்:** 5.58 - 7.28 மணிவரை
**குளிகை:** 8.58 - 10.28 மணிவரை
**சந்திராஷ்டமம்:** கடக-சிங்க ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும் (பின்னிரவு 3.25 மணிவரை கடக ராசியினருக்கு)

**அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்**

**இன்று முற்பகல் 10.49 மணிவரை**
அஸ்வினி, கார்த்திகை, மிருகசீரிடம், புனர்பூசம், பூசம், மகம், உத்திரம், சித்திரை, விசாகம், அனுஷம், மூலம், உத்திராடம், அவிட்டம், பூரட்டாதி, உத்திரட்டாதி

**இன்று முற்பகல் 10.49 மணிக்குமேல்**
பரணி, ரோஹிணி, திருவாதிரை, பூசம், ஆயிலியம், பூரம், அஸ்தம், சுவாதி, அனுஷம், கேட்டை, பூராடம், திருவோணம், சதயம், உத்திரட்டாதி, ரேவதி

**போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கும், தொழில், வியாபார இலாபங்கள், கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும்.**

**விசேட தினம்:** ஏகாதசி விரதம், சத்திய சாய்பாபா சமாதி தினம்

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**



(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325 078-6759739

# நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட மின்தடை; காரணத்தை வெளியிட்டது நிபுணர் குழு



நாடளாவிய ரீதியில் பெப்ரவரி 09ஆம் திகதி ஏற்பட்ட மின்தடைக்கான காரணத்தை கண்டறிய நியமிக்கப்பட்ட நிபுணர்குழு அதன் விசாரணை அறிக்கையை வெளியிட்டுள்ளது.

சூரிய மின்சக்தியினூடாக தேசிய கட்டமைப்புக்கு விநியோகிக்கப்படும் மின் கொள்ளளவில் இருந்த பற்றாக்குறையின் காரணமாக தேசிய கட்டமைப்பின் நிலைத்தன்மை குறைவடைந்தமையே பெப்ரவரி மாதம் 09ஆம் திகதி நாடு முழுவதும் மின் துண்டிப்புக்கான காரணம் என நிபுணர்கள் குழு அறிவித்துள்ளது.

இதுதொடர்பான அறிக்கையை வெளியிட்டு அந்தக்குழு இதனை அறிவித்துள்ளது.

மேலும் அந்த அறிக்கையில்,

அந்த நேரத்தில் சூரிய ஒளிமின்னழுத்த (PV) மின்சாரத்தின் அதிக பங்களிப்பால் ஏற்பட்ட குறைந்த கட்டமைப்பு நிலைத்தன்மை, குறைந்த அமைப்பு செயலற்ற தன்மை கொண்ட தொழில்நுட்ப சிக்கல் என்பனவே இந்த மின்வெட்டுக்கான அடிப்படை காரணமாகும். அன்றைய தினம், மின்சாரத் தேவையில் அரை பங்குக்கு மேற்பட்டவற்றை சூரியசக்தி பெற்றுக்கொடுத்துள்ளதாக மின்சார சபை அறிவித்துள்ளது.

பாணந்துறை கிரிட் துணை மின்நிலையத்தில் ஏற்பட்ட சிக்கலின் காரணமாக மின்வெட்டு ஆரம்பமாகியுள்ளதுடன், இதனால் முழு மின்சார வலையமைப்பிலும் திடீர் மின்னழுத்த வீழ்ச்சி ஏற்பட்டது.

அதிக அளவு சூரிய மின் உற்பத்தியுடன், பாரம்பரிய மின் உற்பத்தி நிலையங்களால் வழங்கப்படும் மின் இணைப்பு, இடையூறிலிருந்து ஏற்படும் அதிர்ச்சியை உறிஞ்சுவதற்கு போதுமான செயற்பாட்டுத் தன்மையை கொண்டிருக்கவில்லை. இந்த நிலைமை விரைவாக மின்சார உற்பத்திக்கும் தேவைக்கும் இடையில் கடுமையான ஏற்றத்தாழ்வுக்கு வழிவகுத்துள்ளது. இது மின் விநியோகத்தில் தொடர்ச்சியான பின்னடைவையும் ஏற்படுத்தியுள்ளது. இறுதியில் நாடு முழுவதும் முழுமையான மின் தடையை ஏற்படுத்தியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, பொதுவாக பாரம்பரிய மின் நிலையங்கள் மந்த மின்னழுத்தத்தின் வழங்குவதன் மூலம் நிலைத்தன்மையைப் பராமரிக்கின்றபோதும், அதிக சூரிய மின் உற்பத்தி பங்கின் காரணமாக மிகக் குறைவாகவே இயங்குவதாக விசாரணைகளில் எடுத்துக்காட்டியது. எதிர்கால மின் தடைகளைத் தடுக்கவும் மின் கட்ட நம்பகத்தன்மையை அதிகரிக்கவும் நீண்டகால மின் உற்பத்தி விரிவாக்கத் திட்டம் மற்றும் நீண்டகால பரிமாற்றத் திட்டத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள நடவடிக்கைகளை அவசரமாக செயற்படுத்த அந்தக் குழு பரிந்துரைத்துள்ளது.

இந்த நடவடிக்கைகளில் மின்களத்தின் (பெட்டரி) ஆற்றல், சேமிப்பு அமைப்புகள், ஒத்திசைவான மின்தேக்கிகள் மற்றும் ஒத்திசைவான மின்தேக்கிகளாக செயற்பட வழக்கமான மின்பிறப்பாக்கிகளை மாற்றியமைத்தல் போன்ற விடயங்கள் அந்த பரிந்துரைகளில் அடங்குகின்றன.

மேலும், முன்னெச்சரிக்கை முகாமைத்துவத்தை விரிவுபடுத்தவும் எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெறாமல் தடுக்க கட்டமைப்பின் கட்டுப்பாட்டு அமைப்புகளில் நிகழ்நேர மந்தநிலை குறிகாட்டிகளைச் சேர்க்கவும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

# ஐக்கிய அரபு அமீரகம் - இலங்கை கூட்டு வர்த்தக பேரவையை நிறுவ புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து




ஐக்கிய அரபு அமீரகம் -இலங்கை கூட்டு வர்த்தக பேரவையை நிறுவுதல் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடப்பட்டது.

இலங்கையில் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டுள்ள ஐக்கிய அரபு அமீரகத்தின் பிரதி பிரதமர் மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சருமான ஷேய்க் அப்துல்லா பின் சயித் அல் நஹ்யான் மற்றும் வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் இடையேயான சந்திப்பொன்று இடம்பெற்றது.

இரு நாடுகளின் நீண்டகால உறவை மேலும் பலப்படுத்துதல் தொடர்பாக வினைத்திறனான இருதரப்புக் கலந்துரையாடல் இதன்போது இடம்பெற்றதுடன், வர்த்தக முதலீடு, சுற்றுலா, எரிசக்தி மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்தில் தொழில் வாய்ப்புகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

அது தவிர, ஐக்கிய அரபு அமீரகத்தில் வர்த்தக மற்றும் கைத்தொழில் சபை சம்மேளனம் மற்றும் இலங்கை தேசிய வர்த்தக சபையுடன் ஐக்கிய அரபு அமீரகம் - இலங்கை ஒருங்கிணைந்த வர்த்தக கௌன்சிலை உருவாக்குவது குறித்து முக்கியமான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

# வெள்ள நீரில் மூழ்கிய நுவரெலியா உடப்புசல்லாவ வீதி





*(நானுஓயா நிருபர்)*

நுவரெலியாவில் நேற்று (23) பிற்பகல் பெய்த பலத்த மழை காரணமாக நுவரெலியா உடப்புசல்லாவ பிரதான வீதியில் கந்தபளை கோர்ட்லோட்ஜ் சந்தியில் புதிய வீதி முழுவதுமாக நீரில் மூழ்கியதால் போக்குவரத்து தடைப்பட்டதுடன் தாழ்நிலங்கள் வெள்ள நீரில் மூழ்கின.

சுமார் ஒரு மணித்தியாலம் வரை பெய்த கடும் மழை காரணமாக வெள்ள நீர் பெருக்கெடுத்ததாக குறித்த பகுதியில் வசிக்கும் மக்கள் தெரிவித்தனர்.

குறிப்பாக, நுவரெலியா கந்தபளை பிரதேசத்தில் பெய்த கடும் மழை காரணமாக விவசாயம் செய்யும் தாழ் நிலங்களில் தேங்கி நிற்கும் வெள்ள நீரினால் அறுவடைக்கு தயாரான மரக்கறிகளும் அழிவடைந்துள்ளன.

எனவே, நுவரெலியா உடப்புசல்லாவ பிரதான வீதியை பயன்படுத்தும் வாகன சாரதிகள் மிகவும் அவதானமாக வாகனங்களை செலுத்துமாறு போக்குவரத்து பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா முன்னாள் ஜனாதிபதி மஹிந்த சந்திப்பு



இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ வசித்து வரும் விஜேராம இல்லத்தில் நேற்று முன்தினம் (22) இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையே நிலவும் பரஸ்பர புரிதலின் அடிப்படையில், பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடலில் ஈடுபட்டதாக மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இச்சந்தர்ப்பத்தில், உலகளாவிய முன்னேற்றங்களின் பின்னணியில் இந்தியா-இலங்கை இடையேயான பல்தரப்பட்ட மற்றும் பரந்துபட்ட கூட்டாண்மை குறித்த கருத்துகளைப் பரிமாறிக் கொண்டதாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இந்திய – இலங்கை உறவுகளில் சமீபத்திய முன்னேற்றங்கள் தொடர்பில் உயர்ஸ்தானிகர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு விளக்கியதாகவும் உயர்ஸ்தானிகராலயம் விடுத்துள்ள அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளது.

இச்சந்திப்பின்போது, பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

# தபால் மூல வாக்களிப்புக்காக மட்டக்களப்பில் 11,554 பேர் தகுதி

## மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் சுபியான்

**(மட்டக்களப்பு செய்தியாளர்)**



உள்ளூராட்சி தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்புக்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் 11ஆயிரத்து 554 பேர் தகுதி பெற்றுள்ளனர். இதுவரை 134 தேர்தல் முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் சட்டத்தரணி எம்.பி.எம்.சுபியான் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று (23) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 12 உள்ளூராட்சி சபைகளில் இருந்து பட்டியல் வேட்பாளர்களுடன் சேர்த்து 274 பேர் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

அனைத்து அரசு அலுவலகங்கள், பொலிஸ் நிலையங்களில் தபால்மூல வாக்களிப்பு இன்று (24) இடம்பெறவுள்ளதுடன், ஆறாயிரத்துக்கு மேற்பட்ட அரச ஊழியர்கள் தேர்தல் கடமைகளுக்காக அமர்த்தப்பட்டுள்ளனர்.

மாவட்டத்தில் 447 வாக்களிப்பு நிலையங்களில் கிடைக்கப் பெறுகின்ற வாக்குகள், 144 வட்டார தேர்தல் வாக்கு என்னும் நிலையங்களுக்கு கொண்டுவரப்பட்டு வாக்குகள் என்னும் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

தபால் மூல வாக்கு எண்ணும் பணிகளுடன் இணைந்ததாக இறுதி தேர்தல் முடிவு வட்டார தேர்தல் எண்ணும் நிலையத்தில் இருந்து வெளியிடப்படும் என அவர் இதன்போது தெரிவித்தார்.

# தபாலில் வந்த 15 கோடி ரூபா பெறுமதியான குஷ் - ஹஷிஷ் போதைப்பொருட்கள் மீட்பு



சர்வதேச விரைவு தபால் சேவை மூலம் சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட சுமார் 15 கோடி ரூபா பெறுமதியான போதைப்பொருட்கள் கொழும்பு மத்திய தபால் நிலைய மதிப்பீட்டுப் பிரிவில் பணிபுரியும் சுங்க அதிகாரிகள் குழுவால் நேற்று (23) பறிமுதல் செய்யப்பட்டது.

இதில் 12 கிலோகிராம் 677 கிராம் குஷ் மற்றும் 01 கிலோகிராம் 852 கிராம் ஹஷிஷ் போதைப்பொருட்கள் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் நீர்கொழும்பு, கட்டான, கதிர்காமம், கணேமுல்ல, மாலபே மற்றும் கொழும்பு ஆகிய பகுதிகளில் உள்ள பல முகவரிகளுக்கு அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் ஸ்பெயினிலிருந்து அனுப்பப்பட்ட சந்தேகத்துக்கிடமான 14 பார்சல்களை சுங்க அதிகாரிகள் ஸ்கேன் செய்ததில், 12 பார்சல்களில் போதைப்பொருட்கள் பதுக்கி வைக்கப்பட்டிருந்தமை தெரியவந்துள்ளது.

கைப்பற்றப்பட்ட போதைப்பொருள் மேலதிக விசாரணைகளுக்காக கொழும்பு பொலிஸ் போதைப்பொருள் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

# கம்பஹாவில் ரயில் தடம்புரள்வு




கம்பஹா ரயில் நிலையம் அருகே ரயில் தடம் புரண்டதால், பிரதான ரயில் சேவையில் தாமதங்கள் ஏற்பட்டன.

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து நேற்று (23) மாலை 4.25 மணியளவில் புறப்பட்ட மீரிகம நோக்கிச் செல்லும் ரயில் கம்பஹா ரயில் நிலையம் அருகே தடம் புரண்டது.

இந்த சூழ்நிலை காரணமாக பிரதான பாதையில் இயக்கப்படும் அனைத்து ரயில்களும் ஒரே பாதையில் பயணித்தன. இதனால் ரயில் போக்குவரத்தில் தாமதங்கள் ஏற்பட்டதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்தது.

# 2000 கறவை பசுக்களை காப்பீடு செய்யும் திட்டம்

கால்நடைத் துறையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு பொருளாதார ஸ்திரத்தன்மையை உருவாக்குவதற்காக, மில்கோ நிறுவனத்துக்கு பால் வழங்கும் விவசாயிகளின் கறவை மாடுகளை காப்பீடு செய்யும் திட்டம் தொடர்பாக, மில்கோ நிறுவனத்துக்கும் கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி சபைக்கும் இடையே அண்மையில் பல சுற்று பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன.

அதன்படி, இந்தத் திட்டத்தை பல கட்டங்களாக செயற்படுத்த எதிர்பார்த்துள்ளதுடன், முதல் சுற்றில், 2000 கறவை மாடுகளுக்கு காப்பீடு வழங்கப்படவுள்ளன.

இது தொடர்பாக மே மாத இறுதிக்குள் இரு தரப்பினருக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட திட்டமிடப்பட்டுள்ளதாகவும் கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி சபை தெரிவித்துள்ளது.

# தலைக்கவசத்தால் தாக்கி பாடசாலை மாணவன் பலி

## சக பாடசாலை மாணவர்கள் 11 பேர் கைது

தலைக்கவசத்தால் தாக்கப்பட்டு பாடசாலை மாணவர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக 11 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வெலிகெதர காவல் பிரிவுக்குட்பட்ட ஆரபொல கந்த பகுதியில் நேற்று முன்தினம் (22) இரவு சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாவத்தகம பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழு குறித்த சந்தேகநபர்களைக் கைதுசெய்துள்ளனர்.

பொலிஸாரின் கூற்றுப்படி, சந்தேக நபர்கள் 15 முதல் 18 வயதுக்குட்பட்டவர்கள் என்பதுடன், ஆரபொல கந்த மற்றும் அம்பகோட்ட பகுதிகளைச் சேர்ந்த உயிரிழந்த மாணவனின் சக பாடசாலை மாணவர்களாவர்.

வெலிகெதர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹெவன்பொல பகுதியில் கடந்த 16ஆம் திகதி இந்தச் சம்பவம் நடந்தது. அங்கு தனிப்பட்ட தகராறு காரணமாக சிறுவர்கள் குழுவொன்று மற்றொரு சிறுவனை குத்தியும் உதைத்தும் தலைக்கவசங்களைப் பயன்படுத்தியும் தாக்கியதாகக் கூறப்படுகிறது.

பலத்த காயமடைந்த பாதிக்கப்பட்டவர் குருநாகல் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு நேற்று முன்தினம் (22) உயிரிழந்தார். இறந்தவர் ஹெவன்பொல, சாகரெலிய வட்டத்தைச் சேர்ந்த 16 வயதுடையவராவார்.

சடலம் குருநாகல் போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. மாவத்தகம மற்றும் வெலிகெதர பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2025 ஏப்ரல் 24 ஆம் திகதி, வியாழக்கிழமை

# ஈஸ்டர் தினத் தாக்குதலை தடுக்க தவறியோருக்கு தண்டனையென்ன?

5 வருடங்களாக ஈஸ்டர் தினத் தாக்குதல் குறித்த விசாரணைகள் முறையாக நடக்கவில்லை. அவை மூடிமறைக்கப்பட்டன. உண்மையான குற்றவாளிகளைத் தப்பிக்கச் செய்யும் வழிவகைகள் ஏற்படுத்தப்பட்டன. நாங்கள் 6 மாதங்களில் அவற்றை ஆரம்பித்தோம். சந்தேகத்துக்கிடமான 6 சம்பவங்கள் தொடர்பான விடயத்தில் 2 சம்பவங்கள் தொடர்பான உண்மைகள் வெளிவந்துள்ளன. வவுணதீவுக்கு அங்கியொன்றைக் கொண்டு சென்றது யார்? சிம் அட்டையின் ஹிமி இலக்கம் எவ்.பி.ஐயினால் வழங்கப்பட்டது. அது யாருடையது என்பதைக் கண்டறிந்துள்ளோம். எத்தனை காலம் சென்றாலும் நீதி நிலைநாட்டப்படும். அனைவரும் சட்டத்தின் முன் சமம் என்பதை நாங்கள் உறுதிப்படுத்துவோம்.

இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்திருக்கிறார்.நேற்றுமுன்தினம் கம்பஹாவில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோது ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் இடம்பெற்ற நாள் முதலே கடந்த ஆறு ஆண்டுகளாக அந்த விவகாரம் இலங்கையின் அரசியலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது.

அந்தக் குண்டுவெடிப்பின் பின்னர் இந்த ஆறு ஆண்டுகளில் நான்காவது ஜனாதிபதி பதவிக்கு வந்துவிட்டார். மூன்றாவது அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்துவிட்டது.

ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகிய மூவரின் கீழும் இருந்த முன்னைய இரண்டு அரசாங்கங்களின் காலத்திலும் இந்தக் குண்டுத் தாக்குதல் விசாரணைகள் நேர்மையான - நீதியான - சரியான - உருப்படியான - வழியில் நடைபெறவில்லையென இப்போது குற்றஞ்சுமத்தப்படுகின்றது.

அதனால், கடந்த ஐந்தரை ஆண்டுகளில் இந்தக் கொடூர தாக்குதல் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் ஒழுங்காக நடைபெறவில்லையென்றும் தாம் ஆட்சிக்கு வந்த இந்த ஆறு மாத காலத்துக்குள் இவ்விடயத்தில் விசாரணைகள் ஆக்கபூர்வமான திசையில் பெரும் முன்னேற்றம் கண்டிருக்கின்றன என்றும் தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க சுட்டிக்காட்டுகிறார்.

ஈஸ்டர் தின தொடர்க் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான தீர்க்கப்படாத ஆறு மர்மங்களில் இரண்டு இப்போது தீர்க்கப்பட்டுள்ளன எனவும் மீதமுள்ள நான்கு விடயங்கள் தொடர்பிலும் விரைவில் உண்மைகள் வெளிவருமென்றும் ஜனாதிபதி மேலும் கூறுகிறார்.

வவுணதீவில் இரண்டு பொலிஸார் கொல்லப்பட்டமை தொடர்பான விசாரணையைத் தவறாக வழிநடத்துவதற்காக அந்த விடயத்தை ஒட்டி ஜாக்கெட் ஒன்றை உள்நுழைத்தமைக்குக் காரணமான நபர் அடையாளம் காணப்பட்டுள்ளாரெனவும் சில முக்கிய விடயங்களுடன் தொடர்புபட்ட மொபைல் போனின் உரிமையாளர் கண்டுபிடிக்கப்பட்டமையையும் அவர் உறுதிப்படுத்தியிருக்கின்றார்.

“இவை தீர்க்கப்பட வேண்டிய இரண்டு முக்கியமான பிரச்சினைகள். இப்போது அவற்றை நாங்கள் தீர்த்துவிட்டோம்” - என்று குறிப்பிட்டு அவற்றை பெரிய முன்னேற்றமென்று அவர் சிலாகிக்கின்றார்.

தாக்குதல்களுக்குப் பின்னால் உள்ள உண்மையான சூத்திரதாரிகளை மறைக்கவே ஐந்தரை ஆண்டு காலம் விசாரணைகளைப் பயன்படுத்தினர் என முந்தைய நிர்வாகங்களை ஜனாதிபதி திசாநாயக்க குற்றஞ்சாட்டினார். உண்மையை வெளிக்கொணர்வதற்கும் நீதி வழங்குவதற்கும் தனது அரசாங்கம் முழுமையாக உறுதிபூண்டுள்ளதென்று உறுதியளித்தார்.

அவர் இப்போது கூறுகின்ற விடயங்கள் உண்மையானால் இன்னும் இரண்டு பணிகளை அவர் செய்து முடிக்க வேண்டும்.

ஒன்று - இந்த ஈஸ்டர் தினக் குண்டுத் தாக்குதல்களின் சூத்திரதாரிகள் உட்பட அனைவரையும் சட்டத்தின் முன் நிறுத்தி, உண்மைகளை வெளிப்படுத்தி, பொறுப்புக்கூறலை நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்ய வேண்டும்.

அடுத்தது - இந்த விசாரணைகள் இவ்வளவு காலமும் திட்டமிட்டு வேண்டுமென்றே தவறாக வழிநடத்தப்பட்டு திசைதிருப்பப்பட்டமை மிகப்பெரிய குற்றம். அந்தக் குற்றத்தை இழைத்தவர்களையும் அடையாளம் கண்டு, அம்பலப்படுத்தி, சட்டத்தின் முன் நிறுத்துவது அவரது பொறுப்பாகும்.

அதை அவரும் அவரது அரசுத் தரப்பினரும் செய்வார்களா என்பதுதான் இப்போது உள்ள கேள்வி.

இந்தச் சம்பவம் நடப்பதற்கு முன்னரே இந்திய புலனாய்வுத்துறை எச்சரிக்கை விடுத்திருந்து அதை இலங்கை உயர்மட்டப் பாதுகாப்பு பிரமுகர்கள் அப்போதைய இலங்கை அரசியல் தலைவர்களுக்கு அறிவித்திருந்தபோதும் அது கண்டுகொள்ளப்படவில்லை. சம்பவம் நடந்தபின்னர்கூட அப்போதைய ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன சிங்கப்பூரில் தங்கியிருந்ததுடன் கொழும்புக்கு உடனடியாகத் திரும்பவில்லை. நேற்றுமுன்தினம் சவூதிக்குச் சென்றிருந்த இந்தியப் பிரதமர் மோடி, காஷ்மீரில் நடந்த தாக்குதல் சம்பவத்தையடுத்து உடனடியாகத் தனது பயணத்தை இடைநிறுத்தி இந்தியா திரும்பியிருந்தார். ஆனால், எந்தவித கவலையும் இல்லாதவர்போல மைத்ரி 2 நாட்கள் கழிந்த நிலையில் சிங்கப்பூரிலிருந்து இலங்கை திரும்பியிருந்தார். இலங்கைக்கு வருவதற்குத் தேவையான விமானங்கள் இருந்தபோதும் அவர் உடனடியாக வராமல் காலம்தாழ்த்தியமை தொடர்பில் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் கூட கடந்த காலங்களில் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

சம்பவம் நடக்கும் முன்னரே தெரியுமென்பது ஒருபக்கமிருக்க, அப்படித் தெரிந்தும் நடந்த பின்னர் காண்பித்த அசிரத்தை தொடர்பிலும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்தச் சம்பவத்தின் சூத்திரதாரிகள் அடையாளம் காணப்பட்டால் அவர்களுக்கு வழங்கப்படும் தண்டனையில் எந்தக் குறையுமில்லாத தண்டனை இந்தப் பொறுப்புத் துறந்த நபர்களுக்கு வழங்கப்பட வேண்டும். ஜனாதிபதி அநுரகுமார வெறுமனே வாயில் வடைசுடாமல் இவற்றையும் கவனத்திற்கொள்தல் வேண்டும்.

# யாருக்காக போராடுகிறார் இளையராஜா..?



பழைய படங்களில் பிரபலமடைந்த பாடல்களின் ஓரிரு வரிகளை தற்போது வெளியாகும் படங்களில் ஆங்காங்கே முக்கிய காட்சிகளில் இசைத்து திரைக்காட்சிகளுக்கு சுவையூட்டும் நிகழ்வுகள் சமீபகாலமாக நடந்து வருகின்றன. இதில் இசையமைப்பாளர் இளையராஜாவின் பாடல்களைப் பயன்படுத்துவது அவ்வப்போது சர்ச்சைகளை உருவாக்கி வருகிறது.

மலையாளத்தில் வெற்றிகரமாக ஓடிய ‘மஞ்சுமல் பாய்ஸ்’ திரைப்படத்தில் இளையராஜாவின் ‘கண்மணி அன்போடு, காதலன் நான் எழுதும் கடிதமே’ பாடலை இணைத்திருந்ததை எதிர்த்து தயாரிப்புக் குழுவுக்கு இளையராஜா நோட்டீஸ் அனுப்பியிருந்தார். அதேபோல, தற்போது நடிகர் அஜித் நடித்து வெளியாகியுள்ள, ‘குட், பேட், அக்லி’ படக்குழுவுக்கும் ரூ.5 கோடி கேட்டு வக்கீல் நோட்டீஸ் அனுப்பியுள்ளார்.

இந்த விவகாரம் ஏற்கனவே விவாதிக்கப்பட்டிருந்தாலும் தற்போது அஜித் படத்தின் மூலம் மீண்டும் விவாதத்துக்கு வந்துள்ளது. சமீபத்தில் நடந்த சினிமா நிகழ்ச்சியொன்றில் பேசிய இசையமைப்பாளர் கங்கை அமரன், “அன்னக்கிளி உன்னைத்தேடுதே உள்ளிட்ட சில பாடல்கள் கோடிக் கணக்கில் விற்பனையாகியும் எங்களுக்கு ஒரு பைசா கூட வரவில்லை. அதனால், அதன்பிறகு இசைக்கப்பட்ட பாடல் உரிமைகளை நாங்கள் வைத்துக் கொண்டோம்.

ஏழு கோடி ரூபா கொடுத்து ஓர் இசையமைப்பாளரை நியமிக்கிறீர்கள். அவரது பாட்டு ஹிட் ஆகவில்லை. எங்கள் பாட்டை எடுத்துப் போடுகிறீர்கள். அதற்கு ரசிகர்கள் கைதட்டுகிறார்கள்; விசிலடிக்கிறார்கள்; ஆட்டமாடுகின்றனர். அதற்கு எங்களுக்கு கூலி வரவேண்டாமா?’’- என்று கேள்வியெழுப்பியுள்ளார். அவரது கேள்வியில் நியாயம் இருப்பதாகவே தெரிகிறது.

ஓர் இசைக்கலைஞரின் படைப்பை அவரது அனுமதியில்லாமல் பயன்படுத்துவது நியாயமற்றது. காப்புரிமையைத் தாண்டி அனுமதிக்கப்பட்ட பாடல்களைப் பயன்படுத்துவதற்கும் அனுமதி பெறாமல் மற்றவரின் படைப்பைப் பயன்படுத்துவதற்கும் வேறுபாடு உண்டு. திரையில் வரும் ஒரு காட்சிக்கும் காலகட்டத்துக்கும் பழைய பாடல் ஒன்று வலுச்சேர்க்குமென்றால் அதை இயல்பாகப் பயன்படுத்த நினைப்பதில் தவறில்லை.

ஆனால், அந்தப் பாடலுக்கு யார் உரிமை வைத்திருக்கிறார்களோ அவர்களிடம் அனுமதி கேட்டுப் பெற்று, அவர்கள் கேட்கும் தொகையைச் செலுத்திவிட்டு பயன்படுத்த வேண்டுமென்பதுதான் நியாயம். கோடிகளைக் கொட்டி கோடிகளை அள்ள நினைக்கும் இன்றைய பிரமாண்டமான சினிமா வியாபாரத்தில் பணம் கொடுக்காமல் அறிவுத்திருட்டு நடத்துவது துளியும் ஏற்றுக்கொள்ள முடியாதது.

இளையராஜா நடத்தும் போராட்டம் அவருக்கானது மட்டுமல்ல. வலுவான சட்ட முன்னுதாரணத்தை வகுத்துக் கொடுத்து தனக்குப் பின்வரும் எளிய இசையமைப்பாளர்களின் உரிமையை நிலைநாட்டவும் சேர்த்தே தான் போராடுகிறார்.

அவர் எத்தனையோ புதிய புதிய இயக்குநர்களுக்கு பணமே வாங்காமல் இசையமைத்துக் கொடுத்து அந்தப் படங்களும் பாடல்களும் பெருவெற்றி பெற்றுள்ளதை அந்த இயக்குநர்களே வாக்குமூலமாக அளித்துள்ளனர். அப்படிப்பட்ட இசையமைப்பாளரை பணத்தாசையால் செயற்படுகிறார் என்று சொன்னால், அது சொல்பவர்களின் அறியாமையைத் தான் வெளிப்படுத்தும்.

**நன்றி - இந்து**

# அருள்மிகு வட்டகொட தெப்பக்குளத்தம்மன் தெப்பத்தேர் பவனி









மலையகப் பிரதேசங்களைப் பொறுத்தவரை மலையகத் தமிழர்களே பெருமளவில் காணப்படுகின்றனர். இவர்களின் வாழ்வியல் முறைகள் இந்திய தமிழ்நாட்டு கலை, கலாசாரம், பண்பாடு என்பனவற்றைத் தழுவியதாகக் காணப்படுகின்றன. அந்த வகையில், வழிபாட்டு முறைகளை எடுத்துக் கொண்டோமேயானால் சிறு தெய்வ வழிபாட்டு முறைகள் அதிகளவில் காணப்படுகின்றன. இவ்வழிபாட்டில் குல தெய்வ வழிபாடு, ஊர் தெய்வ வழிபாடு என்பன காணப்படுகின்றன. அத்துடன், மாரியம்மன் வழிபாடு சிறப்பு இடத்தைப் பிடிக்கின்றது. சமூக மாற்றத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் சமய வழிபாட்டு முறைகள் முக்கிய இடத்தைப் பிடிக்கின்றன. இறைவழிபாட்டினால் மனிதனில் மாற்றத்தை ஏற்படுத்த முடியுமென்ற நம்பிக்கை காலம் காலமாகக் கூறி வரும் மரபாகும்.

பண்டைய காலம் தொட்டே பஞ்சபூதங்களைத் தெய்வமாக நினைத்து வழிபடும் மரபு காணப்படுகிறது. மரத்துக்கு உயிருண்டு என்று நம்பி வழிபட்ட மனிதன் பின்பு மரத்தில் தெய்வம் உறைகிறது என மரத்தை வழிபட ஆரம்பித்தான். எனவே, தெய்வத்துக்கும் இயற்கைக்குமிடையில் நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது. பிள்ளையார் ஆலமரம், அரச மரத்தடியில் இருப்பதாகவும் அம்மன் வேப்பமரத்தடியில் இருப்பதாகவும் புத்தர் அரசமரத்தடியில் இருப்பதாகவும் நம்புவது ஐதீகம். அதனடிப்படையில் ஐம்பூதங்களுக்குரிய தெய்வமாக பெண் தெய்வ வழிபாடு மேற்கொள்ளப்படுகிறது. நிலத்துக்குரிய தெய்வமாக பூமாதேவி கொள்ளப்படுகிறாள்.

அதனடிப்படையில் நோக்கும் போது வட்டகொட தெப்பக்குளத்தம்மன் குளிர்ந்த நீரின் மேல் வீற்றிருந்து அருள்பாலிக்கின்றாள். இயற்கை வனப்புமிக்க இப்பிரதேசத்தின் அம்பாளுக்கு ஒவ்வொரு வருடமும் கோடை காலத்தில் அதாவது பங்குனி, சித்திரை மாதங்களில் திருவிழா இடம்பெறுகின்றது. ஊர் மக்கள் இணைந்து செய்யும் இவ்விழாக்காலத்தில் தெப்பத்தேர் பவனியானது இடம்பெறுகிறது. மலையகத்தில் இவ்வாலயத்தில் மட்டுமே சிறப்பம்சமாக விளங்குகிறது. இதனைக் காண மலையகத்தின் பல பகுதிகளிலிருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் வருகின்றனர். இதற்காக விசேடமாக ஒவ்வொரு வருடமும் காட்டு மூங்கில் கொண்டு தெப்பம் அமைக்கப்படுகின்றது. இத்தெப்பம் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்படுகின்றது. அபிஷேக ஆராதனைகளுக்குப் பின்பு மலர்களால் அலங்கரிக்கப்பட்ட தெப்பக்குளத்தம்மன் தெப்பத்தில் ஏற்றப்பட்டு இரவு முழுவதும் குளத்தில் பவனி வருவாள். இக்காட்சியைக் காணக் கண்கோடி வேண்டும். வார்த்தைகளால் சொல்ல முடியாத அளவில் அம்மன் கம்பீரத்தோற்றத்தில் சிம்மவாஹினியாக பக்தர்களுக்கு காட்சி தருவாள்.

இந்த சக்தி வாய்ந்த அம்மன் வழிபாட்டில் ஆன்மீகமும் மருத்துவமும் இணைந்து காணப்படுகின்றன. அதாவது, கோடைகாலங்களிலும் மலையகத்தின் பெரும்பகுதிகளில் சின்னம்மை, கண் வலி, வயிற்றுளைவு போன்ற நோய்கள் ஏற்படுகின்றன. இக்காலங்களில் அம்மன் நோய் தீர்க்கும் சக்தியாக எழுந்தருளுகிறார். மாரியம்மனை நினைத்து தரப்படும் தீர்த்தத்தில் மஞ்சளும் வேப்பிலையும் கலந்துள்ளதால் இதனைப் பருகும் பக்தர்களுக்கு நோயெதிர்ப்பு சக்தி அதிகரிக்கின்றது. இதனால் இவ்வகை நோயினால் ஏற்படும் பாதிப்பு குறைவாகக் காணப்படுகின்றது. அத்துடன்,கோடைகாலத்தில் மழைநீர் வேண்டி இந்த அம்மனுக்கு ஊற்றுநீர் எடுத்து பிரதேச பெண்களால் அபிஷேகம் செய்யப்படுகின்றது. இதனால் மழை பெய்யும் என்பது ஐதீகம். அது மட்டுமன்றி, அபிஷேகம் செய்யப்பட்ட பின்பு மழை பெய்துள்ளமையும் குறிப்பிடத்தக்க வேண்டியதாகும்.

மாரியம்மன் பிரசாதம் என நோயாளிக்கு வழங்கப்படும் போது இறை நம்பிக்கையின் பின் அடிப்படையில் நோயாளிக்கு சுகமாகின்றது. எனவே, சர்வரோக நிவாரணியாகவும் இந்த அம்மன் அருள்பாலிக்கின்றார். அத்துடன், இந்த ஆலயக் கட்டமைப்பால் சூழலியல் அமைப்பு, உயிர்ப்பல்வகைமை என்பன பாதுகாக்கப்படுகின்றமையும் குறிப்பிடப்பட வேண்டியவையாகும்.

**தவமணிதேவி**

## இன்றைய நாளில்...

- 1955 – இந்தோனேஷியாவின் பண்டுங் நகரில் ஆசியா மற்றும் ஆபிரிக்காவைச் சேர்ந்த 29 அணிசேரா நாடுகளின் உச்சி மாநாடு முடிவுற்றது. இதன்போது குடியேற்றவாதம், இனவாதம் மற்றும் பனிப்போர் ஆகியவற்றைக் கண்டிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- 1964 – இலங்கையில் ‘சிங்களம் மட்டும்’ சட்டத்துக்கெதிராக செல்லையா கோடீஸ்வரன் என்பவர் தொடுத்த வழக்கில் இச்சட்டம் அரசியலமைப்புக்கு முரணானதென மாவட்ட நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- 1967 – சோயூஸ்-1 விண்கலத்தில் பயணித்த ரஷ்ய வீரர் விளாடிமிர் கொமரோவ், அவரது வான்குடை திறக்கமுடியாமையால் உயிரிழந்தார். இவரே விண்வெளிப் பயணமொன்றில் உயிரிழந்த முதல் வீரர்.
- 1990 – டிஸ்கவரி விண்ணோடம் ஹபிள் விண்வெளித் தொலைநோக்கியை விண்ணுக்குக் கொண்டு சென்றது.
- 1993 – இந்தியாவில் பஞ்சாயத்து இராச்சியம் அமைக்கப்பட்டது.
- 2007 – பலாலி இராணுவத்தளம் மீது தமிழீழ விடுதலைப் புலிகளின் விமானங்கள் தாக்குதல் நடத்தின.

## நக்கல் நமசிவாயம்

அரசாங்கம் பலமாக இருக்கிற மாதிரி இருக்குது.. அதுக்கு காரணம் எதிர்க்கட்சி பலவீனமா இருக்கிறது தான் பாருங்கோ...



# பொதுப் போக்குவரத்து சாரதிகளின் தொழில்முறைத் திறனை அதிகரிக்க ஒரு மாதத்துக்குள் முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தல்

பொதுப் போக்குவரத்தில் ஈடுபட்டுள்ள சாரதிகளின் தொழிலை தரப்படுத்துவதற்கான முன்மொழிவுகளை ஒரு மாதத்துக்குள் சமர்ப்பிக்குமாறு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பஸ் பயணிகளின் பாதுகாப்பு உள்ளிட்ட பொதுப் போக்குவரத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குத் தற்பொழுது காணப்படும் சட்டக்கட்டமைப்பை மேலும் பலப்படுத்துவது குறித்து போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவால் அமைக்கப்பட்ட போக்குவரத்துத் துறை தொடர்பான சட்டக் கட்டமைப்பை வலுப்படுத்துதல் மற்றும் போக்குவரத்துத் துறையை நேர்மறையான திசையில் வழிநடத்துதல் என்ற உபகுழுவில் ஆராயப்பட்டது.

இந்த உபகுழு அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி லக்மாலி ஹேமச்சந்திர தலைமையில் அண்மையில் கூடியபோதே இவ்விடயம் பற்றிக் கவனம் செலுத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அலுவல்கள் அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள நிறுவனங்கள் சிலவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் கலந்துகொண்டதுடன், பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்தும் பயணிகளின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கான சட்டக் கட்டமைப்பை





வலுப்படுத்துவது தொடர்பான கருத்துகளையும் அவர்கள் குழுவிடம் முன்வைத்தனர்.

பொதுப் போக்குவரத்தில் ஈடுபட்டுள்ள பஸ்களுக்குத் தகுதிச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளும் நடைமுறையை ஒழுங்குமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தைக் குழு வலியுறுத்தியது.

மோட்டார் வாகனச் சட்டத்தின் 29ஆவது பிரிவின்படி பஸ்கள், லொறிகள் மற்றும் அம்பியூலன்ஸ்களுக்கு இந்தத் தகுதிச் சான்றிதழ் வழங்கப்படுவதாகவும், மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் அனுமதியின்றி மாகாண சபைகளில் பதிவுசெய்யப்பட்ட கராஜ்களால் இந்தத் தகுதிச் சான்றிதழ்கள் வழங்கப்படுவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். தகுதிச் சான்றிதழ்களை வழங்கும் கராஜ்களின் தரம் மற்றும் நம்பகத்தன்மையில் சிக்கல்கள் இருப்பதால், இவற்றை ஒழுங்குமுறைப்படுத்தவேண்டியதன் அவசியத்தை உபகுழுவின் தலைவர் வலியுறுத்தினார்.

மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தின் 19ஆவது பிரிவின் கீழான நிர்மாணக் கட்டளைகளை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது. அதன்படி, புதிய பஸ்களை இறக்குமதி செய்வதிலும் ஏற்கனவே உள்ள பஸ்களில் பயணிகளின் பாதுகாப்புக்காக இருக்கைகளுக்கு இடையில் பொருத்தமான இடைவெளி, தேவையற்ற உபகரணங்களை அகற்றுதல் மற்றும் ஆசனப்பட்டிகளை அணிவது போன்ற விடயங்கள் குறித்தும் நீண்டநேரம் கலந்துரையாடப்பட்டது.

அதன்படி, தொடர்புடைய தரவுகள் மற்றும் தகவல்களின் அடிப்படையில், பொதுப் போக்குவரத்தில் பயணிகளின் பாதுகாப்பு தொடர்பாக செயற்படுத்த வேண்டிய நடவடிக்கைகள் குறித்த முன்மொழிவுகளுடன் கூடிய அறிக்கையைத் தயாரித்து, இரண்டு மாதங்களுக்குள் போக்குவரத்து அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் சமர்ப்பிக்குமாறும் உபகுழுவின் தலைவர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கினார்.

பொதுப் போக்குவரத்தில் ஈடுபட்டுள்ள சாரதிகளின் தொழில்முறைத் திறனை அதிகரிக்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது. சாரதிகளின் தொழிலை தரப்படுத்துவதற்கான முன்மொழிவுகளை ஒரு மாதத்துக்குள் குழுவிடம் சமர்ப்பிக்குமாறு உபகுழுவின் தலைவர் தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவின் அதிகாரிகளுக்கு அறிவித்தார்.

அத்துடன், கடந்த மூன்று மாதங்களில் இடம்பெற்ற வீதி விபத்துகள் குறித்த தரவுகளை உடனடியாக குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் குழு கேட்டுக்கொண்டது. தரவுகளின் அடிப்படையில் எதிர்கால பரிந்துரைகளை வகுப்பதன் முக்கியத்துவத்தை உப குழுவின் தலைவர் வலியுறுத்தினார்.

பஸ் சாரதிகள் போதைப்பொருள் பயன்படுத்துவதற்கு எதிரான சட்டத்தை அமுல்படுத்துவதற்குத் தேவையான சட்ட விதிகளை வலுப்படுத்துவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது. மோட்டார் வாகனச் சட்டத்தின்கீழ் இது தொடர்பான விதிமுறைகள் தயாரிக்கப்பட்டு, தற்போது இறுதிக் கட்டத்தில் இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த விதிமுறைகள் உடனடியாக அமுல்படுத்தப்பட வேண்டும் என்றும், சாரதிகளின் உடலில் போதைப் பொருள் இருப்பதைக் கண்டறிதல் உள்ளிட்ட தொழில்நுட்ப வழிமுறைகள் முறையாக உருவாக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

இந்த உபகுழு, போக்குவரத்துத் துறையுடன் தொடர்புடைய குறுகிய மற்றும் நீண்ட கால அடிப்படையில் செயற்படுத்தக்கூடிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளில் ஏற்படும் மாற்றங்களை முதன்மையாக ஆராய்ந்து, பின்னர் தேவையான பரிந்துரைகளைக்கொண்ட அறிக்கையைத் தயாரிக்கும்.

இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சுகத் வசந்த த சில்வாவும் பங்கேற்றார்.

# வெலிக்கடை பொலிஸ் தடுப்புக்காவலில் உயிரிழந்த இளைஞனின் சடலம் தோண்டியெடுப்பு

வெலிக்கடை பொலிஸ் தடுப்புக்காவலில் இருந்தபோது உயிரிழந்த 26 வயதுடைய நிமேஷ் சத்சர என்ற இளைஞனின் உடல், பதுளை நீதவான் நுஜித் டி சில்வா மற்றும் இதற்காக நியமிக்கப்பட்ட 3 பேர் கொண்ட மருத்துவக் குழுவின் முன்னிலையில் பிரேத பரிசோதனைக்காக நேற்று (23) தோண்டியெடுக்கப்பட்டது.

உடலை தோண்டி எடுக்கும் பணி காலை 9.30 மணியளவில் தொடங்கி சுமார் இரண்டரை மணி நேரம் கழித்து 11.40 மணியளவில் நிறைவடைந்தது.



இளைஞனின் உடலை தோண்டி எடுத்து பிரேத பரிசோதனை நடத்த நடவடிக்கை எடுக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் கெமிந்த பெரேரா கடந்த 9ஆம் திகதி கொழும்பு தலைமை சட்ட மருத்துவ அதிகாரிக்குப் பிறப்பித்த உத்தரவின்பேரில் 3 பேர் கொண்ட மருத்துவக் குழு நியமிக்கப்பட்டுள்ளதாக விசாரணை அதிகாரிகள் நீதிமன்றத்துக்குத் தெரிவித்தனர்.

தலைமை தடயவியல் மருத்துவர் பிரியந்த அமரரத்ன, மூத்த சிறப்பு தடயவியல் மருத்துவர் பி.ஆர்.ருவன்புர மற்றும் ஊவா-வெல்லஸ்ஸ பல்கலைக்கழக மூத்த பேராசிரியர் நிபுணர் வைத்தியர் முதித விதானபத்திரண ஆகியோர் நிபுணர் தடயவியல் மருத்துவக் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர்.

இளைஞனின் மரணம் தொடர்பாக சட்ட மருத்துவ அதிகாரி நடத்திய பிரேத பரிசோதனை திருப்திகரமாக இல்லாததால், உடலை தோண்டி எடுத்து பிரேத பரிசோதனை நடத்த 3 பேர் கொண்ட நிபுணர் மருத்துவக் குழுவை நியமிக்க உத்தரவிடக் கோரி, பாதிக்கப்பட்ட தரப்பினர் சார்பாக முன்னிலையான சட்டத்தரணிகள் மனுத் தாக்கல் செய்திருந்தனர்.

குறித்த மனு உள்ளிட்ட முந்தைய விசாரணையின்போது முன்வைக்கப்பட்ட உண்மைகளைப் பரிசீலித்த பின்னர் நீதவான் உடலை தோண்டி எடுக்குமாறு உத்தரவு பிறப்பித்திருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பான ஆரம்ப விசாரணைகள் கொழும்பு குற்றப்பிரிவால் நடத்தப்பட்டன. ஆனால், பதில் பொலிஸ் மா அதிபரின் அறிவுறுத்தலின்பேரில், விசாரணை ஏப்ரல் 04ஆம் திகதி முதல் குற்றப் புலனாய்வுத் துறைக்கு மாற்றப்பட்டது.

**3 பேர் கொண்ட மருத்துவக் குழுவின் முன்னிலையில் பிரேத பரிசோதனை**

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, நாவல பகுதியிலுள்ள ஒரு வீட்டுக்குள் நுழைந்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டில் கடந்த முதலாம் திகதி கைதுசெய்யப்பட்ட குறித்த இளைஞன் பொலிஸ் காவலில் இருந்தபோது ஒழுங்கீனமாக நடந்துகொண்டதாக முல்லேரியாவிலுள்ள தேசிய மனநல மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து, மறுநாள் 02ஆம் திகதி அதிகாலையில் சந்தேகநபரான இளைஞன் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், இது தொடர்பாக பல தரப்பினரின் எதிர்ப்பு எழுந்த சூழலில், சத்சரவின் பிரேத பரிசோதனையில் திருப்தியடையவில்லை என்று அவரது உறவினர்கள் நீதிமன்றத்தில் ஒரு மனுவை சமர்ப்பித்திருந்தனர்.

அதனையடுத்து அவரது சடலத்தை தோண்டியெடுத்து பிரேத பரிசோதனை நடத்தவும் அதற்கு 3 பேர் கொண்ட நிபுணர் மருத்துவக் குழுவை நியமிக்கவும் நீதிமன்றம் உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது.



# ஹட்டன் – கண்டி பிரதான வீதியில் திடீரென தீப்பற்றி எரிந்த முச்சக்கரவண்டி

(நானுஓயா நிருபர் )



ஹட்டன் - கண்டி பிரதான வீதியில் பயணித்துக்கொண்டிருந்த முச்சக்கரவண்டியொன்று திடீரென தீப்பற்றி எரிந்துள்ளதாக ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தீ விபத்து நேற்று (23) காலை இடம்பெற்றுள்ளது.

ஹட்டனிலிருந்து கண்டி நோக்கிப் பயணித்த முச்சக்கரவண்டி ஒன்றே தீப்பற்றி எரிந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தீ விபத்தின்போது முச்சக்கரவண்டியில் மூன்று பேர் பயணித்துள்ள நிலையில் அவர்களுக்கு எந்தவித காயங்களும் ஏற்படவில்லையெனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதேசவாசிகள் மற்றும் வீதியில் பயணித்த ஏனைய வாகனங்களின் சாரதிகள் இணைந்து தீப்பரவலைக் கட்டுப்படுத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

எவ்வாறிருப்பினும் முச்சக்கரவண்டி தீயில் முழுவதுமாக எரிந்து நாசமாகியுள்ளதாகவும் தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லையெனவும் ஹட்டன் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# அதிகரிக்கும் தேர்தல் விதிமீறல்கள்: இதுவரை 2,298 முறைப்பாடுகள் பதிவு!

உள்ளூராட்சித் தேர்தலுடன் தொடர்புடைய முறைப்பாடுகளின் எண்ணிக்கையை தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

அதனடிப்படையில் இதுவரை 2,298 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், 11 வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த 24 மணிநேரத்தில் 131 முறைப்பாடுகள் பதிவாகியுள்ள நிலையில், தேர்தல் குறித்த வன்முறைச் சம்பவம் எதுவும் பதிவாகவில்லை எனவும் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் சட்டத்தை மீறியமை தொடர்பான முறைப்பாடுகளே இதுவரை அதிகமாக கிடைக்கப்பெற்றுள்ளன. அது 2,116ஆக பதிவாகியுள்ளது.

அதனடிப்படையில் இதுவரையான முறைப்பாடுகளில் 1,886 முறைப்பாடுகளுக்கான தீர்வுகள் கண்டறியப்பட்ட நிலையில், 412 முறைப்பாடுகள் குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

# ஈஸ்டர் தினத் தாக்குதல் சம்பவத்தின் சூத்திரதாரியை வெளிப்படுத்துவதாக அநுர கூறியதும் பொய்யா?




## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கேள்வி

''உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரி யார் என்பது தொடர்பான தகவல்களை விசேட அறிவிப்பின் மூலம் வெளிக்கொணர்வதாக ஜனாதிபதி தெரிவித்திருந்தார். ஆனால், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்புடைய ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை மாத்திரமே குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அன்று உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பில் சாக்குப்போக்குகளைக் கூறிய இந்த அரசாங்கம், இன்றும் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பில் சாக்குப்போக்குகளை கூறி மக்களை ஏமாற்றி வருகிறது '' - என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

திஸ்ஸமஹாராம பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் களத்தில் முதலாளித்துவம், சோஷலிசம், கம்யூனிசம், சமூக ஜனநாயகம் எனப் பல்வேறு கோட்பாடுகள் காணப்படுகின்றன. இவற்றில் சமீபத்தில் இணைந்ததோர் கோட்பாடுதான் பொய்யும் பாசாங்குத்தனமுமாகும். ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் பொய்யான கோரிக்கைகளை முன்வைத்த மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான திசைகாட்டி அரசாங்கம், தற்போது புதிய கூற்றுகளை முன்வைத்து, முட்டாள்தனமாக பிரஸ்தாபிக்கும் அரசாங்கமாக மாறியுள்ளது. நாட்டு மக்களை ஏமாற்றும் அரசாங்கம் இன்று செய்வதறியா அரசியலை முன்னெடுத்து வருகிறது.

33%ஆல் மின் கட்டணத்தைக் குறைப்போமென வாக்குறுதி வழங்கியிருந்தனர். ஆனால், ஆட்சிக்கு வந்த பிற்பாடு இன்னும் 6 மாதங்களுக்கு மின் கட்டணத்தைக் குறைக்க முடியாது என்றனர். இதனால் பொதுமக்கள் கொந்தளித்து பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவை நாடியபோது பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு 20%ஆல் மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க நடவடிக்கை எடுத்தது. இந்த மின்சாரக் கட்டணக் குறைப்பை அரசாங்கமோ ஜனாதிபதியோ எடுக்கவில்லை. எஞ்சியுள்ள 13% குறைப்பை இந்த அரசாங்கம் விரைந்து எடுக்கவேண்டும்.

இந்தப் பொய், திருட்டு, ஏமாற்றுதல் போன்றவற்றால் தொடர்ந்தும் நாம் ஏமாறுவதா, இல்லையா என்பதை இந்நாட்டு மக்களே தீர்மானிக்க வேண்டும். ஆளுந்தரப்பினர் பழைய பொய்களோடு புதிய பொய்களையும் முன்வைத்து வருகின்றனர். வரவு- செலவுத் திட்டத்தில் கூட இல்லாத சலுகைகளை வழங்குவதாக பொய் சொல்கிறார்கள்.

திசைகாட்டி அதிகாரங்களைக் கைப்பற்றாத உள்ளூராட்சி மன்றங்களுக்கு நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட மாட்டாதென ஜனாதிபதித் தேர்தல் சட்டங்களை மீறி பகிரங்கமாகக் கூறிவருகின்றார். உள்ளூராட்சி சட்டங்கள் குறித்து போதிய விளக்கம் ஜனாதிபதிக்கு இல்லை. அதனாலேயே இவ்வாறான கருத்துகளை வெளிப்படுத்தி வருகிறார். உள்ளூராட்சி மன்ற சட்டம் மிகவும் வலுவான சட்டமாகும். இதனை ஜனாதிபதி சரியாக வாசிக்காமல் முட்டாள்தனமாக பேசி வருகிறார் - என்றார்.

## பகிரங்க ஏலவிற்பனை

வெலிபல் பினான்ஸ் நிறுவனத்தில் உத்தரவாத அடிப்படையில் அடகு வைத்து கடன் பெற்று, உரிய காலத்தினுள் மீட்கப்படாத தங்க நகைகள் இல: 310, காலி வீதி, கொழும்பு 03 இல் 2025 மே மாதம் 15 திகதி மு.ப. 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விட்கப்படும்.

**எந்தவொரு முன்னறிவித்தலும் இன்றி ஏலத்தை நிறுத்தவோ, பின்தள்ளி போடவோ வெலிபல் பினான்ஸ் நிறுவனத்திற்கு உரிமை உள்ளது**

**தங்க கடன் பிரிவு**
**வெலிபல் பினான்ஸ் பீ எல் சீ**
இல: 310, காலி வீதி, கொழும்பு 03

வெலிபல் பினான்ஸ்

# பொத்துவில் அஸ்மினின் வாழ்க்கை வரலாறை ஆவணமாகக் கொண்ட ஆங்கில நூல் வெளியீடு




(கோணாவத்தை செய்தியாளர்)

இலங்கையின் முன்னணி தமிழ்க் கவிஞரும் திரைப்படப் பாடலாசிரியருமான பொத்துவில் அஸ்மின் வாழ்க்கை வரலாறை ஆவணமாகக் கொண்ட ஆங்கில நூல் "POTTUVIL ASMIN: From Pottuvil to the World – A Global Tamil Voice" என்ற தலைப்பில் Amazon Kindle வழியாக வெளியிடப்பட்டுள்ளது.

இந்நூல் லைக்கா குழுமத்தின் தலைவர் அல்லிராஜா சுபாஸ்கரன், லைக்கா ஹெல்த் நிறுவனத் தலைவர் டாக்டர் பிரேமா சுபாஸ்கரன் மற்றும் லைக்கா புரொடக்ஷன்ஸ் தலைமை நிர்வாக அதிகாரி ஜி.கே.எம்.தமிழ் குமரன் ஆகியோரால் அண்மையில் சென்னையில் வெளியிடப்பட்டது.

பொத்துவில் அஸ்மின், இசையமைப்பாளர் மற்றும் நடிகர் விஜய் ஆண்டனியின் இசையில் உருவான "தப்பெல்லாம் தப்பே இல்லை" பாடலின் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமானவர்.

27ஆண்டு காலமாக கலை, இலக்கியம், ஊடகம் மற்றும் சினிமாத்துறையில் குறிப்பிடத்தக்க அளவு பங்களிப்பு செய்திருக்கும் பொத்துவில் அஸ்மின், நடிகர் விஜய் ஆண்டனியின் நான் திரைப்படத்தில் தப்பெல்லாம் தப்பே இல்லை... என்ற பாடலின் ஊடாக தமிழ் சினிமாவில் அறிமுகமானவர்.

விடியலின் ராகங்கள், விடை தேடும் வினாக்கள், பாம்புகள் குளிக்கும் நதி ஆகிய கவிதை நூல்களை தமிழுக்கு தந்துள்ளார்.

மறைந்த தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி நினைவாக கவிப்பேரரசு வைரமுத்து தொகுத்த "கலைஞர் 100 கவிதைகள் 100" கவிதை தொகுப்பிலும் இவரது கவிதை இடம்பெற்றுள்ளன.

மறைந்த தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு இவர் எழுதிய இரங்கல் பாடல் "வானே இடிந்ததம்மா" அவரது சமாதியில் தொடர்ச்சியாக இரண்டு மாதங்கள் ஒலித்தன.

பொத்துவில் அஸ்மின் எழுதிய ''ஜயோசாமி நீ எனக்கு வேணாம்...'' பாடல் இலங்கையில் உருவாக்கப்பட்ட தமிழ்ப் பாடல்களில் அதிக பார்வைகளை பெற்ற முதல் தமிழ்ப் பாடலாகும்.

இலங்கையில் தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் 30க்கும் மேற்பட்ட விருதுகளை பெற்றிருக்கும் பொத்துவில் அஸ்மின் கம்போடியா கலை கலாசார அமைச்சினால் "சர்வதேச கவியரசு கண்ணதாசன்" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டவர்.

பொத்துவில் அஸ்மின் வரிகளில் ஸ்ரீகாந்த் தேவா இசையில் முல்லை சசி குரலில் ஸ்ரீதர்மாஸ்டர், காயத்ரிசான் நடிப்பில் வெளியான "முட்டக்கண்ணி" ஆல்பம் பாடல், அமெரிக்காவில் அமைந்துள்ள சர்வதேச பாடலாசிரியர் சங்கம் (ISSA) வழங்கும் 2025ஆம் ஆண்டுக்கான விருதுக்கு சர்வதேச மட்டத்தில் சிறந்த வீடியோ பாடல் மற்றும் சிறந்த பாடலாசிரியர் என இரு பிரிவுகளில் தெரிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஆங்கில வாழ்க்கை வரலாற்று நூல், பொத்துவிலிலிருந்து உலகளாவிய தமிழ் குரலாக உயர்ந்த அஸ்மினின் பயணத்தை ஆவணப்படுத்துவதுடன், தமிழ் இலக்கியம் மற்றும் கலைத்துறையில் அவரது தாக்கத்தையும் பதிவுசெய்கிறது.

# தனியார் துறை மருந்தாளர் ஊழியர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் குழுவின் அறிக்கை சுகாதார அமைச்சரிடம் கையளிப்பு




தனியார் துறை மருந்தகங்களில் உள்ள மருந்தாளர் ஊழியர்களின் பிரச்சினைகள் மற்றும் பிற பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் குழுவின் அறிக்கை சுகாதார அமைச்சரிடம் ஒப்படைக்கப்பட்டது.

மருந்தாளர்களின் பற்றாக்குறை உட்பட, நாட்டில் தனியார்துறை மருந்தகங்கள் தற்போது எதிர்கொள்ளும் ஏராளமான பிரச்சினைகளுக்கு தீர்வுகாண நியமிக்கப்பட்ட ஐந்து பேர் கொண்ட குழுவின் அறிக்கை, குழுவின் தலைவர் பேராசிரியர் இந்திக கருணாதிலக்க மற்றும் சுகாதார மற்றும் ஊடக அமைச்சின் குழு பிரதிநிதிகளால் சமீபத்தில் சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸவிடம் ஒப்படைக்கப்பட்டது.

தனியார் துறை மருந்தகங்களில் மருந்தாளர் பற்றாக்குறை இருப்பதாகவும் அந்தத் துறையை நேரடியாகப் பாதிக்கும் ஏராளமான பிரச்சினைகள் இருப்பதாகவும் சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸவிடம் வந்த அறிக்கைகளைத் தொடர்ந்து, இந்த விவகாரத்தை ஆராய்ந்து பொருத்தமான பரிந்துரைகளுடன் அறிக்கை சமர்ப்பிக்குமாறு சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் செயலாளர் டாக்டர் அனில் ஜாசிங்கவிடம் அமைச்சர் முன்னர் அறிவுறுத்தியுள்ளார்.

அதன்படி, அமைச்சின் செயலாளர் இந்த ஐந்து பேர் கொண்ட சிறப்புக் குழுவை நியமித்தார். கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருந்துவக் கல்வித் துறையின் பேராசிரியர் இந்திக கருணாதிலக தலைமையிலான ஐந்து பேர் கொண்ட குழுவின் மற்ற உறுப்பினர்களாக, உலக சுகாதார அமைப்பின் இலங்கைக்கான அலுவலகத்தின் அத்தியாவசிய மருந்துகள் தொடர்பான தேசிய ஆலோசகர் டாக்டர் சிந்தா அபேவர்தன, தேசிய தொற்று நோய்கள் நிறுவனத்தின் நிபுணர் டாக்டர் சுரங்க மணில்கம, தேசிய இரத்த மாற்று மையத்தின் இயக்குநர் டாக்டர் லக்ஷ்மன் எதிரிசிங்க மற்றும் தேசிய மருந்துக் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் டாக்டர் சந்தன அத்தபத்து ஆகியோரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்த ஐந்து பேர் கொண்ட குழு, பல்வேறு அம்சங்களில் இருந்து விஷயங்களை பகுப்பாய்வு செய்து, குறுகிய கால, நடுத்தர கால மற்றும் நீண்ட கால பரிந்துரைகள் உட்பட இந்த அறிக்கையைத் தொகுத்துள்ளது.

மருந்தாளர்களின் தற்போதைய பற்றாக்குறையை மதிப்பிடுதல் மற்றும் தரவுகளை பகுப்பாய்வு செய்தல், அத்தகைய பற்றாக்குறைக்கான மூல காரணங்களைக் கண்டறிந்து எதிர்காலத் தேவைகளை முன்னறிவித்தல், மருந்தாளர்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கான அவசர பரிந்துரைகளை வழங்குதல், மருந்தாளர்களின் நடைமுறைத் தேவைகளை நிவர்த்தி செய்யும் போது ஒழுங்குமுறைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பயிற்சித் திட்டங்களின் போதுமான தன்மையை மதிப்பிடுதல், பயிற்சிகளை மேம்படுத்துதல், மருந்தாளர்களின் கல்வி மற்றும் பயிற்சிக்கான சர்வதேச தரங்களை வழங்குதல் போன்ற பல அடிப்படை பரிந்துரைகளை இந்த அறிக்கை உள்ளடக்கியது. இந்த அறிக்கையில் குறுகிய கால, நடுத்தர கால மற்றும் நீண்டகால பரிந்துரைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த அறிக்கையின் பரிந்துரைகளை செயற்படுத்துவன் மூலம் தனியார் துறையில் மருந்தாளர்களின் பற்றாக்குறை மற்றும் அந்தத் துறையில் நிலவும் பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்கும் அந்தத் துறையிலும் வினைத்திறனான சேவையை உருவாக்குவதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சுகாதாரம் மற்றும் வெகுஜன ஊடக பிரதி அமைச்சர் டாக்டர் ஹன்சக விஜேமுனி உட்பட இந்த ஐந்து பேர் கொண்ட குழுவின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

# இயலாமையுடைய நபர்களின் தேவைகள் குறித்து அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் ஆராய்வு





இயலாமையுடைய நபர்களின் தேவைகள் குறித்து போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் போக்குவரத்துத் துறை மற்றும் அதனுடன் தொடர்புடைய சட்ட ஏற்பாடுகளைப் பலப்படுத்துவதன் ஊடாக சாதகமான திசையை நோக்கி போக்குவரத்துத் துறையை வழிநடத்துவது தொடர்பான இரண்டாவது உபகுழுவில் கலந்துரையாடப்பட்டது.

இந்த உபகுழு அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி லக்மாலி ஹேமசந்திர தலைமையில் அண்மையில் கூடியபோதே இவ்விடயம் பற்றிக் கவனம் செலுத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் பற்றிய பாராளுமன்ற ஒன்றியத்தின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சுகத் வசந்த த சில்வா, பல்வேறு இயலாமையுடைய நபர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புகளின் பிரதிநிதிகள், சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகள் பலரும் கலந்துகொண்டனர்.

இயலாமையுடைய நபர்களின் போக்குவரத்துத் தேவைகளை நிறைவேற்றுவதில் காணப்படும் பிரச்சினைகள் மற்றும் அவ்வாறான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான முன்மொழிவுகள் குறித்து இதில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இயலாமையுடைய சமூகத்தினருக்கு முறையான போக்குவரத்து வசதிகள் இல்லாமை அவர்கள் எதிர்கொள்ளும் ஒரு பாரியதொரு பிரச்சினையாக இருப்பது இங்கு அடையாளம் காணப்பட்டது. பஸ்கள் மற்றும் ரயில்களில் முறையான அணுகல் வசதிகள் இல்லாமை காரணமாக இயலாமையுடைய நபர்கள் வாடகைக்கு அமர்த்தப்பட்ட வாகனங்களில் பயணிக்கும் நிலை காணப்படுவதாகவும் இதற்காகப் பெருந்தொகைப் பணத்தைச் செலவிட வேண்டியிருப்பதாகவும் குழுவில் ஆஜராகியிருந்த பிரதிநிதிகள் குறிப்பிட்டனர்.

2006ஆம் ஆண்டு 01ஆம் இலக்க மாற்றுத்திறனாளிகளுக்கான அணுகல் குறித்த ஒழுங்குவிதி பற்றிய வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக இயலாமையுடைய சமூகத்தினருக்கு உரிய வசதிகள் வழங்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டாலும், சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் அல்லது தனிநபர்கள் இந்த உத்தரவுகளைப் பின்பற்றுவதில்லை என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர். அதன்படி, அந்தச் சட்டங்கள் நடைமுறையில் செயல்படுத்தப்படும்போது இயலாமையுடைய சமூகம் பெறும் நிவாரணம் குறித்தும் அவர்கள் குழுவின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர்.

சில பஸ் நடத்துநர்களின் செயல்களால் இயலாமையுடைய நபர்கள் மிகுந்த சிரமத்தை அனுபவிப்பதாக அமைப்புகளின் பிரதிநிதிகள் குழுவிடம் சுட்டிக்காட்டினர். இதுபோன்ற பிரச்சினைகளைத் தீர்க்கவும் இயலாமையுடைய நபர்கள் தொடர்பான அணுகுமுறைகளை மேம்படுத்தவும் சட்டம் இயற்ற வேண்டியதன் அவசியமும் இங்கு வலியுறுத்தப்பட்டது.

பஸ்கள் மற்றும் ரயில்களில் ஆசனங்கள், சட்டரீதியாக இயலாமையுடைய நபர்களுக்கான ஆசனங்களை ஒதுக்க வேண்டியதன் அவசியம், பஸ்களில் நிபந்தனையின்றி இயலாமையுடைய நபர்களுக்கு இடமளிக்க வேண்டியதன் அவசியம், ரயில் நிலையங்களில் இயலாமையுடைய நபர்களுக்கான தகவல் தொடர்பு வசதியை எளிதாக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் அவர்களைப் பாதிக்கும் பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் குழுவில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

செவிப்புலன் அற்ற சமூகத்தினருக்கு சாரதி அனுமதிப் பத்திரம் வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளதா என்பது குறித்து வினவப்பட்டதுடன், அவர்களுக்கு அவற்றை மீண்டும் வழங்குவதை உறுதி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் குழுவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

அதன்படி, இயலாமையுடைய நபர்களின் பிரச்சினைகள் மற்றும் பரிந்துரைகளை இரண்டு வாரங்களுக்குள் எழுத்துமூலமாக இந்தக் குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் பெறப்பட்ட பிரச்சினைகள் மற்றும் பரிந்துரைகளைப் பரிசீலித்த பின்னர், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் எனவும் உபகுழுவின் தலைவர் தெரிவித்தார்.

# காலச் சூழலுக்கேற்ப பயணிக்கும் தமிழ்த் தேசிய பேரவைக்கே எமது ஆதரவு

## யாழ். முஸ்லிம் மக்கள் ஒன்றியம் அறிவிப்பு!




(பு.கஜிந்தன்)

தேசிய மக்கள் சக்தியின் பொறிக்குள் வீழாது காலச் சூழலுக்கேற்ப தமிழ் தேசியப் பரப்பில் பயணிக்கும் கட்சிகளுடன் ஒன்றிணைந்து பயணிக்கும் நோக்கில் இம்முறை நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ்த் தேசிய பேரவைக்கு ஆதரவை வழங்கவுள்ளதாக யாழ்.முஸ்லிம் மக்கள் ஒன்றியம் தலைவர் அப்துல் பரீக் ஆரீப் தெரிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தலில் கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் பேரவைக்கு ஆதரவு வழங்கும் அறிவிப்பை விடுத்திருந்த யாழ்.முஸ்லிம் மக்கள் ஒன்றியம், அது தொடர்பில் ஊடக சந்திப்பொன்றை நேற்று (23) யாழ் ஊடக மையத்தில் மேற்கொண்டு இவ்வாறு கூறியிருந்ததுடன் மேலும் கூறுகையில்,

அகில இலங்கை தமிழ் காங்கிரஸுடன் யாழ் முஸ்லிம் மக்களுக்கு நெருங்கிய தொடர்பும் நட்பும் இருந்துவருகின்றது.

அதுமட்டுமல்லாது, கொள்கையில் தடுமாறா நிலையுடன் பயணிக்கும் கஜேந்திரகுமார் தலைமையிலான கட்சி எமது மக்களின் நலன்களில் அதிக அக்கறையுடன் பயணித்து வருகின்றது.

இவ்வாறான நிலையில் காலத்தின் சூழ்நிலைக்கேற்ப கொள்கையுடன் தமிழ்த் தேசிய பேரவை இருக்கின்றது.

அதனடிப்படையில், இம்முறை நடைபெறும் உள்ளூராட்சித் தேர்தலில் எமது அமைப்பின் ஆதரவை தமிழ்த் தேசிய பேரவைக்கு வழங்குவதற்கு தாம் தீர்மானித்துள்ளதாக தெரிவித்த அவர் தமது முஸ்லிம் மக்கள் ஓரணியில் திரண்டு ஆதரவை வழங்கவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

குறித்த ஊடக சந்திப்பின்போது யாழ்.முஸ்லிம் மக்கள் ஒன்றியத்தின் உறுப்பினர் எம்.எஸ்.ரஹீம் உடனிருந்தார்.

# யாழில் மாணவனை மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டு தப்பிச் சென்ற பெண்!

## காயமடைந்த மாணவன் வைத்தியசாலையில் அனுமதி

(பு.கஜிந்தன்)

தரம் 07இல் கல்விபயிலும் பாடசாலை மாணவன் ஒருவரை மோட்டார் சைக்கிளில் சென்ற பெண் ஒருவர் மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டு தப்பிச்சென்ற சம்பவம் ஒன்று வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் நடைபெற்றுள்ளது. குறித்த சம்பவம் நேற்று முன்தினம் (22) காலை 7.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, சிவரூபன் லோஷனன் என்ற 12 வயதுடைய மாணவன் வழமை போன்று தனது துவிச்சக்கர வண்டியில் பாடசாலைக்கு சென்றுள்ளார். பாடசாலையின் அருகாமையில் குறித்த சிறுவன் சென்ற நிலையில் பின்னால் மோட்டார் சைக்கிளில் வந்த பெண் ஒருவர் தன்னை மோதியதில் தான் சைக்கிளுடன் வீதியில் விழுந்ததாக சிறுவன் தெரிவித்தார்.

அத்துடன் விபத்தில் சிக்குண்டு காயங்களுடன் வீழ்ந்து கிடந்த தன்னை பொருட்படுத்தாது அந்தப் பெண் தனது மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் வீழ்ந்துகிடந்த தன்னை தனது பாடசாலையின் முன்பாக வீதி கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த சிரேஷ்ட மாணவர்கள் ஓடிவந்து தூக்கி தனது நிலையை அவதானித்து பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கு தெரியப்படுத்தியதாகவும் தெரிவித்த பாதிக்கப்பட்ட மாணவன், தனக்கு பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் உடனடியாக முதலுதவி சிகிச்சை அளித்து தனது பெற்றோருக்கு தகவல் வழங்கியதுடன் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்ல நடவடிக்கை எடுத்ததாகவும் குறிப்பிட்டார்.

இதேநேரம் குறித்த விபத்தில் மாணவனின் கை முறிந்த நிலையில் சங்கானை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அதன் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே பாடசாலை ஆரம்பிக்கும் நேரம் மற்றும் நிறைவுறும் நேரங்களில் பொலிஸார் வீதிக்கடமையில் வழமையாக இருந்துவரும் நிலையில் சில நாட்களாக அந்த செயற்பாடுகள் இல்லாதுள்ளமையை அவதானிக்க முடிவதாக மாணவர்களும் பொதுமக்களும் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 30 போத்தல் கசிப்புடன் ஒருவர் கைது!



வவுனியா, வாரிக்குட்டியூர் பகுதியில் 30 போத்தல் கசிப்புடன் ஒருவரை கைதுசெய்துள்ளதாக பூவரசங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் சட்டவிரோத சாராயம் விற்பனை செய்யப்பட்டு வருவதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய நேற்றையதினம் இரவு வீடொன்றை சோதனை செய்த பொலிஸார் அங்கு மறைத்துவைக்கப்பட்டிருந்த 30 போத்தல் சட்டவிரோத சாராயத்தை கைப்பற்றினர்.

அதனை உடைமையில் வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் 48 வயதுடைய நபர் ஒருவரை பொலிஸார் கைதுசெய்தனர்.

கைதுசெய்யப்பட்டவரிடம் விசாரணைகளை முன்னெடுத்துவரும் பொலிஸார் அவரை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக தெரிவித்தனர்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

# நாணய மாற்று விதம் (23.04.2025)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 186.6717 | 196.4839 |
| கனேடியன் டொலர் | 212.1545 | 221.0500 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 39.6389 | 42.1985 |
| யூரோ | 334.9391 | 348.3291 |
| ஜப்பான் யென் | 2.0711 | 2.1520 |
| சிங்கப்பூர் டொலர் | 223.5440 | 233.4829 |
| ஸ்ரேலிங் பவுன் | 391.6949 | 405.9564 |
| சுவிஸ் பிராங்க் | 356.2171 | 372.7526 |
| ஐ.அ. டொலர் | 295.4634 | 304.1056 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 795.2226 |
| குவைட் | குவைட் தினார் | 980.3402 |
| ஓமான் | ஓமான் றியால் | 778.5324 |
| கட்டார் | கட்டார் றியால் | 82.2196 |
| சவுதி அரேபியா | சவுதி அரேபிய றியால் | 79.9039 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 81.5996 |

# முச்சக்கரவண்டி - மோட்டார் சைக்கிள் மோதி விபத்து: இருவர் படுகாயம்



(மூதூர் செய்தியாளர்)

சம்பூர் பொலிஸ் பிரிவிலுள்ள பள்ளிக்குடியிருப்பு பகுதியில் முச்சக்கர வண்டியும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இச்சம்பவம் நேற்று புதன்கிழமை (23) காலை இடம்பெற்றுள்ளது.

இதில் இருவர் படுகாயமடைந்து தோப்பூர் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக சம்பூர் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் தோப்பூரைச் சேர்ந்த முச்சக்கரவண்டிச் சாரதியும் பள்ளிக்குடியிருப்பைச் சேர்ந்த மோட்டார் சைக்கிள் சாரதியுமே படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்துச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்பூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



***உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு வாக்களிப்பதற்காக வாக்காளர் அட்டைகள் விநியோகம் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்தவகையில், ஓட்டமாவடி - மீராவோடை தபால் நிலையத்துக்கு கிடைத்துள்ள வாக்காளர் அட்டைகள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. மீராவோடை பகுதியில் வசிக்கும் 6,300 குடும்பங்களுக்கான 11,450 வாக்காளர் அட்டைகளை தபால் சேவையாளர் எம்.சி.எம்.இப்றாகீம் தனிநபராக நின்று அர்ப்பணிப்புடன் விநியோகம் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (மீராவோடை செய்தியாளர்)***

# கிழக்கு மாகாண சித்திரை புத்தாண்டு நிகழ்வு





(மீனோடைக்கட்டு செய்தியாளர்)

கிழக்கு மாகாண தமிழ், சிங்கள சித்திரைப் புத்தாண்டு பெருவிழா செவ்வாய்க்கிழமை(22) ஆளுநர் செயலகத்துக்கு முன்பாகவுள்ள உவர்மலை சிறுவர் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.


கிழக்கு மாகாண அமைச்சுகளால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ்விளையாட்டு விழாவுக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரட்ணசேகர பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு ஆரம்பித்து வைத்தார்.

இதில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர், பிரதிப் பிரதம செயலாளர்கள், அமைச்சின் செயலாளர்கள், உதவிச் செயலாளர்கள், மாகாணத் திணைக்களப் பணிப்பாளர்கள்,ஆணையாளர்கள் உள்ளிட்ட பல உயரதிகாரிகள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்ட அதேவேளை, அங்கு இடம்பெற்ற விளையாட்டு நிகழ்வுகளிலும் பங்கேற்றனர்.



**பட்டிருப்பு வலயக்கல்விப் பணிமனையில் பப்பாசி அறுவடை நிகழ்வு வலயக் கல்விப் பணிப்பாளர் சிவானந்தம் சிறிதரன் தலைமையில் நடைபெற்றது. 'பசுமையான சூழல் பயன் தரு மரங்கள்' எனும் தொனிப்பொருளில் கடந்த 2024 இல் வலயக்கல்வி அலுவலக வளாகத்தில் பப்பாசி மரங்கள் நடுகை செய்யப்பட்டன. நஞ்சற்ற இயற்கை முறையில் பராமரிக்கப்பட்ட இப்பப்பாசி மரங்களிலிருந்து சிறந்த ஆரோக்கியமான விளைச்சலைப் பெறக்கூடியதாக இருந்தது. அறுவடை நிகழ்வில் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (பாண்டிருப்பு செய்தியாளர்)**

# மல்வத்தையில் இலவச ஆயுர்வேத வைத்திய முகாம்



(நாவிதன்வெளி செய்தியாளர்)

சம்மாந்துறை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மல்வத்தை-03 மஜீத்புரம் கிராமத்தில் இலவச ஆயுர்வேத வைத்திய முகாம் சம்மாந்துறை பிரதேச செயலக சுதேச வைத்திய சேவை அபிவிருத்தி உத்தியோகத்தர் வை.எல்.எம்.நளீம் தலைமையில் மஜீத்புரம் சனசமூக நிலையத்தில் நேற்று புதன்கிழமை (23) இடம்பெற்றது.

சுகாதார அமைச்சின் சுதேச வைத்தியப் பிரிவின் நிதியொதுக்கீட்டின் மூலம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையும் இணைந்து நடத்திய இவ்வைத்திய முகாமில் சம்மாந்துறை ஆயுர்வேத வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம்.ரிப்கா, சமூக வைத்திய அதிகாரி டி.எல்.றுமைஸா ஆகியோரால் இலவச வைத்திய சேவை முகாம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த இலவச வைத்திய முகாமுக்கு பிரதம அதிதியாக சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது கலந்துகொண்டு சிறப்பித்தார். இந் நிகழ்வில் மஜீத்புரம் நூலகப் பொறுப்பாளர் எம்.தௌபீக், மல்வத்தை-03 கிராம சேவகர் எம்.ஐ.எம். சப்ராஸ், மல்வத்தை-04 கிராம சேவகர் ஐ.செல்வராஜா ஆகியோரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# கலைஞர்களுக்கு உதவித்தொகை வழங்கல்









*(தம்பலகாமம் செய்தியாளர்)*

உதவி அவசியமான கலைஞர்களுக்கு உதவி வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் மத்திய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் தெரிவாகிய நான்கு கலைஞர்களுக்கு வருடா வருடம் வழங்குகின்ற உதவித் தொகை தலா 10ஆயிரம் ரூபா வீதம் இந்த வருடமும் வழங்கும் நிகழ்வு கிண்ணியா பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் எம்.எச்.முஹம்மது கனி தலைமையில் திங்கட்கிழமை (21) நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலாபூஷணம் ஏ.கௌரிதாசன், ஓவியர் எம்.எச்.எம்.இஸ்மாயில், கலாபூஷணம் ஏ.ஹசன்ஜி, இசைக்கலைஞர் எஸ்.முஹமட் ஆகியோருக்கான காசோலை கிண்ணியா பிரதேச செயலாளர், உதவித் திட்டமிடல் பணிப்பாளர்.ஏ.முஜீப், கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜே.எம்.ஹில்மி ஆகியோரால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நிதி ஒதுக்கீடு கிடைக்காது என்ற ஜனாதிபதியின் கூற்றை பொய்யாக்கும் விதத்தில் எமது அபிவிருத்திகள் அமையும்

## உதுமான்கண்டு நாபீர் உறுதி



*(பொலிவேரியன் செய்தியாளர்)*

''எதிர்வரும் மே 06ஆம் திகதி இடம்பெறவிருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் பின்னர் சம்மாந்துறை பிரதேச சபை மாம்பழச் சின்னத்தின் கைவசமாகின்றபோது ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தனது பிரசாரத்தின்போது பயன்படுத்துகின்ற தேசிய மக்கள் சக்தியின் கைவசம் அல்லாது வேறு கட்சிகளின் அல்லது சுயேச்சைச் குழுக்களின் கைவசமாகின்ற உள்ளூராட்சி மன்றங்களுக்கு எமது நிதியொதுக்கீடுகள் கிடைக்கப்பெறாது என்கிற பிரசாரத்தைப் பொய்யாக்கும் விதத்தில் எமது சம்மாந்துறை பிரதேச சபை அபிவிருத்தி காணும்'' - என்று ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட கேள்விக்கு தேசிய மக்கள் முன்னணி கட்சியின் தலைவரும் சுயேச்சைக் குழு 01 போட்டியிடும் தலைமை வேட்பாளர் உதுமான்கண்டு நாபீர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

''நாம் ஒருபோதும் ஆட்சியாளர்களுக்கு மாற்றமாக செயற்படுபவர்கள் அல்லர். இருந்தபோதும், எம்மால் அமையப்போகின்ற உள்ளூராட்சி மன்றத்துக்கு மத்திய அரசின் ஆலோசனை வழிகாட்டல் மற்றும் அனுமதியுடன் நாங்கள் வெளிநாடுகளின் உதவிகளைக் கொண்டு அனைத்துவிதமான உள்ளூராட்சி மன்றங்கள் மாத்திரமல்லாது, எமது அம்பாறை மாவட்டத்துக்கான அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கு மக்களால் எமக்கு வழங்கப்படுகின்ற ஆணையை நாங்கள் நிச்சயம் சரியான முறையில் பயன்படுத்துவோம்.

இதுவரை காலமும் உள்ளூராட்சி மன்றங்களை ஆட்சி செய்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸாக இருக்கட்டும் அல்லது ஏனைய கட்சிகளாக இருக்கட்டும் எவருமே அபிவிருத்தியை நோக்கிய உள்ளூராட்சி மன்றங்களையோ அல்லது மக்களின் நலன் காக்கின்ற உள்ளூராட்சி மன்றங்களையோ கொண்டிருக்கவில்லை. நாங்கள் இவற்றைச் சரிசெய்து உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாக மக்களுக்கு கிடைக்கின்ற நலன்களை வெளிநாடுகளிலிருந்து பெறப்படுகிற நிதிகளூடாகவும் ஏனைய உட்கட்டுமானங்கள் மற்றும் அபிவிருத்திகள் தொடர்பாகவும் பாரிய திட்டத்தைக் கொண்டுவந்து மக்களின் எதிர்கால வாழ்க்கைக்கும் தொழில் அற்றவர்களுக்கு தொழில்களையும் வழங்கி சுய தொழில்கள் மற்றும் தொழிற்சாலைகளை அமைப்பதனூடாக அந்தத் தொழிற்சாலைகளில் திறமை மற்றும் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து அதனூடாக இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பை வழங்கி, அவர்களுடைய சுபீட்சமான வாழ்க்கைக்கு வழி வகுப்பதற்கு பல திட்டங்களை முன்வைத்துள்ளோம்.

இதேபோன்று, எமது உள்ளூராட்சி மன்றங்களுக்கு கீழ் அமைந்திருக்கின்ற வளங்களைப் பயன்படுத்தி, சுயதொழில் வாய்ப்பை உருவாக்கி, அதனூடாகவும் உள்நாட்டு முதலீட்டாளர்கள் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கொண்டும் பல தொழில் வழங்குநர்களை உருவாக்குவதற்கு நாங்கள் திட்டவரைபுகளைக் கொண்டிருக்கின்றோம்.

எனவே, தேசிய மக்கள் சக்தி கூறுகின்றது போல் எமது சம்மாந்துறை பிரதேச சபை அமையாது. மாற்றமாக, எமது பிரதேச சபையானது இலங்கையில் காணப்படுகின்ற பிரதேச சபைகளுக்கெல்லாம் மாதிரி பிரதேச சபையாக அமையுமென்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

அரசியல் மேடைகளில் கூறுவது போன்று பழைய பஞ்சாங்கக் கதைகளை உரிமைகளை வென்றெடுப்போம் எமக்கான குரல்களாக ஒலிப்போம் என்கிற சொற்பதகங்களை மறந்து அவற்றோடு சேர்ந்த அபிவிருத்தி வாழ்வாதாரம் அனைத்தையும் உருவாக்கி, எமக்கென ஓர் அரசியல் கட்டமைப்பினூடாக ஒரு சமூகத்தை முன்கொண்டு செல்ல நாங்கள் அனைத்து திட்டங்களையும் வகுத்திருக்கின்றோம். அதற்கான பாரிய முன்னேற்பாடுகளுடனான திட்டநகர்வுகள் அனைத்துமே செயற்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

சமூக அபிவிருத்தி என்பது நாட்டின் ஆட்சியாளர்களால் வழங்கப்படுகின்ற நிதிகளைக் கொண்டு ஒருபோதும் நிவர்த்தி அடையாது. மாறாக, எங்களால் வெளிநாடுகளில் இருக்கின்ற முதலீட்டாளர்களையும் பாரிய நிறுவனங்களையும் அணுகி, அவர்களூடாகப் பெறப்படுகின்ற பாரிய நிதிகளை மக்களிடம் கொண்டுசேர்த்து, அவர்களுக்கான அபிவிருத்தி மற்றும் கட்டுமானங்கள் அனைத்தையுமே உருவாக்கிக் கொடுக்கின்றபோதுதான் காலாகாலமாக மேடைகளில் இவர்களால் கட்டவிழ்த்து விடப்படும் அபிவிருத்தி என்கின்ற பொய் வார்த்தைக்கு முற்றுப்புள்ளி வைத்ததாக அமையும்'' - என்றார்.

# இஸ்லாமாபாத் வித்தியாலயத்தில் கவின்கலைப் போட்டி





*(மாளிகைக்காடு செய்தியாளர்)*

ஆசிரியர்கள், மாணவர்களின் கற்பித்தல், கற்றல் செயற்பாடுகளில் உள ரீதியான மனப்பாங்குகளை மாற்றமடையச் செய்யும் நோக்குடன் வருடா வருடம் நடத்தப்படும் வகுப்பறைக் கவின்கலைப் போட்டி கல்முனை இஸ்லாமாபாத் மகா வித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் ஏ.ஜீ.எம்.றிசாத் தலைமையில் நடைபெற்றது.

கல்முனை கல்வி வலயத்தின் ஆரம்பப் பிரிவு கவின்கலைப் போட்டி விதிமுறைகளுக்கமைவாக தரம் 01 தொடக்கம் தரம் 05 வரை நடைபெற்ற இப்போட்டியில் பாடசாலையின் ஆரம்பப் பிரிவு ஆசிரிய ஆலோசகர் ஐ.எல்.அப்துல் ரஹ்மான், ஆரம்பப் பிரிவு வளவாளர் எம்.எம்.ஏ.ஹபீழ் ஆகியோர் பார்வையிட்டு மதிப்பீடுகளில் ஈடுபட்டனர்.

மேலும் பாடசாலையின் கவின்கலைப் போட்டி இணைப்பாளர்களான எம்.சீ.ஹிஜாஸ், ஏ.ஆர்.பைறூஸ் கான் ஆகியோரின் நெறிப்படுத்தல் மற்றும் ஒருங்கிணைப்பில் இந்நிகழ்வு நடைபெற்றது.

பாடசாலையின் பிரதி அதிபர் எம்.ரீ.ஏ.முனாப், பாடசாலை முகாமைத்துவக் குழுவின் சிரேஷ்ட ஆசிரியர் முஜிப்டீன் ஆகியோர் இணைந்து இந்நிகழ்வை ஆரம்பித்து வைத்தமை குறிப்பிடத்தக்கது.

# பாதுகாப்பற்ற குழியிலிருந்து சிறுவன் சடலமாக மீட்பு



(பாறுக் ஷிஹான்)

வீட்டினருகில் விளையாடிக்கொண்டிருந்த சிறுவன் பாதுகாப்பற்ற குழியிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட சம்பவமொன்று சம்மாந்துறை பொலிஸ் பிரிவில் பதிவாகியுள்ளது.

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புறநகர்ப் பகுதியான உடங்கா -02 பௌஸ் மாவத்தை பகுதியில் இச்சம்பவம் செவ்வாய்க்கிழமை(22) மாலை இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவத்தில் மூன்று வயது மதிக்கத்தக்க முஹம்மத் லுக்மான் என்ற ஆண் பிள்ளை குழியிலிருந்து மீட்கப்பட்டதாக சம்மாந்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, சுமார் 03 மணித்தியாலமாக காணாமல்போயிருந்த குறித்த சிறுவனை அப்பகுதியில் பொதுமக்களுடன் இணைந்து பொலிஸாரும் தேடிய நிலையில் அச்சிறுவனின் வீட்டுக்கருகிலுள்ள வெற்றுக்காணியில் உள்ள பாதுகாப்பற்ற நீர்க்குழிக்குள் உயிரிழந்த நிலையில் சிறுவன் சடலமாக மீட்கப்பட்டார். மேலும், இச்சிறுவன் தவறி குறித்த குழியில் விழுந்தாரா அல்லது கொலை செய்யப்பட்டு போடப்பட்டாரா என்பது குறித்த மேலதிக விசாரணைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.அத்துடன், இச்சம்பவத்தில் கிடைக்கப்பெற்ற சி.சி.ரி.வி. காணொளியொன்றில் இனந்தெரியாத நபரொருவர் உயிரிழந்த சிறுவனை அழைத்துச் செல்லும் காட்சியொன்றும் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. எனினும், சிறுவனை யார் அழைத்துச் செல்கின்றார்கள் என்பது தெளிவாக அடையாளம் காணமுடியாமல் உள்ளது. அத்துடன், குழிக்குள் சிறுவன் எப்படி விழுந்தார் என்பது குறித்தும் குழப்பமான ஒரு நிலையும் காணப்படுகின்றது.

இது தவிர, உயிரிழந்த சிறுவனின் சடலம் தற்போது சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் சம்பவ இடத்துக்குச் சென்றிருந்த சம்மாந்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.டி.எச்.ஜெயலத் தலைமையிலான பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டு; இருவருக்கு விளக்கமறியல்

## கல்முனை நீதவான் நீதிமன்று உத்தரவு

(பாறுக் ஷிஹான்)

கல்முனையில் அமைந்துள்ள இலங்கை போக்குவரத்துச் சபையின் பிராந்திய காரியாலயத்தில் வைத்து பணிநீக்கம் செய்யப்பட்ட பஸ் நடத்துநர் ஒருவரிடமிருந்து இலஞ்சம்பெற முயற்சித்தார் எனும் குற்றச்சாட்டில் கைதான கிழக்கு மாகாண ஒழுக்காற்றுக் குழுப் பரிசோதகர் ஒருவரையும் அங்கு கடமையாற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தரையும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

இலங்கை போக்குவரத்துச் சபையின் கல்முனையில் அமைந்துள்ள பிராந்திய காரியாலயத்தில் கடமையாற்றிவரும் கிழக்கு மாகாண ஒழுக்காற்றுக் குழுப் பரிசோதகர் தன்னிடம் ஒரு இலட்சம் ரூபா இலஞ்சம் கோருவதாகப் பணிநீக்கம் செய்யப்பட்ட பஸ் நடத்துநர் ஒருவர் கொழும்பிலுள்ள இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்திருந்தார்.

இதனடிப்படையில் ஆணைக்குழு அதிகாரிகளின் ஆலோசனைக்கமைய சம்பவதினமான செவ்வாய்க்கிழமை (22) கல்முனையில் அமைந்துள்ள இலங்கை போக்குவரத்துச் சபையின் பிராந்திய காரியாலயத்தில் வைத்து கிழக்கு மாகாண ஒழுக்காற்றுக் குழுப் பரிசோதகர் கூறியமைக்கமைவாக அவரின் காரியாலய பாதுகாப்பு உத்தியோகத்தரிடம் இலஞ்சப் பணத்தில் ஒரு பகுதியை பணிநீக்கம் செய்யப்பட்ட பஸ் நடத்துநர் வழங்கியுள்ளார்.

இதன்போது அங்கு மாறு வேடத்தில் காத்திருந்த இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழு அதிகாரிகள் கிழக்கு மாகாண ஒழுக்காற்றுக் குழுப் பரிசோதகரையும் அங்கு கடமையாற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தரையும் கைது செய்தனர்.

இதனையடுத்து கைதுசெய்யப்பட்ட கிழக்கு மாகாண ஒழுக்காற்றுக் குழுப் பரிசோதகர்(வயது-53) மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர் (வயது-47) இருவரையும் கல்முனை நீதவான் நீதிமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (22) முன்னிலைப்படுத்திய போது 14 நாட்கள் சந்தேகநபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

மேலும் கடந்த காலத்தில் திருகோணமலை இலங்கை போக்குவரத்துச் சபையில் கடமையாற்றும் பஸ் நடத்துநர் ஒருவர் மேற்கொண்ட நிதி மோசடி காரணமாக பணியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்ட நிலையில் அதற்கெதிரான விசாரணையின்போது சட்ட நடவடிக்கை எடுக்காமலிருக்கும் பொருட்டும் மீண்டும் பணியில் பஸ் நடத்துநரை இணைத்துக்கொள்வதற்காகவும் பணிநீக்கம் செய்யப்பட்ட பஸ் நடத்துநரிடமிருந்து மேற்படி கிழக்கு மாகாண ஒழுக்காற்றுக்குழு பரிசோதகர் இலஞ்சம் கோரியதாகத் தெரியவருகிறது.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை இலஞ்ச ஊழல் ஆணைக்குழு உத்தியோகத்தர்கள் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



**உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பாக பிரதேச செயலாளர்களுக்கான முன்னாயத்த கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் (21) திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான டபிள்யூ. ஜி.எம்.ஹேமந்த குமார தலைமையில் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இதன்போது பிரதேச செயலாளர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டன. இக்கலந்துரையாடலில் மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் எஸ்.கே.டி.நிரஞ்சன் மற்றும் பிரதேச செயலாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (கிண்ணியா செய்தியாளர்)**

# போதை மாத்திரை விநியோகித்த இளைஞன் கைது

(பாறுக் ஷிஹான்)

போதை மாத்திரைகளை நீண்ட காலமாக இளைஞர்களுக்கு விநியோகம் செய்த சந்தேகத்தின் அடிப்படையில் 29 வயது சந்தேக நபரை பெரியநீலாவணை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம் செவ்வாய்க்கிழமை(22) இரவு பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவில் உள்ள மருதமுனை புறநகர்ப் பகுதியில் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, சுமார் 700க்கும் அதிகமான போதை மாத்திரைகளை தன்வசம் வைத்திருந்த 29 வயது சந்தேக நபர் கைதானார். மேலும், சந்தேக நபர் உள்ளிட்ட சான்றுப் பொருட்கள் என்பன சட்ட நடவடிக்கைக்காக கல்முனை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பெரியநீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஜே.எஸ்.கே.வீரசிங்கவின் வழிநடத்தலில் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் மாளிகைக்காடு மேற்கு வட்டார தேர்தல் காரியாலயம் திறந்துவைப்பு





(பாறுக் ஷிஹான்)

காரைதீவு பிரதேச சபைத் தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய சமாதானக் கூட்டமைப்புக் கட்சியின் மாளிகைக்காடு மேற்கு வட்டாரத் தேர்தல் காரியாலய திறப்பு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை (20) வேட்பாளர் எஸ்.எச்.எம்.சாஜித் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் உப தலைவர் கலாநிதி ஹக்கீம் செரீப் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு தேர்தல் காரியாலயத்தைத் திறந்து வைத்தார்.

அங்கு உரையாற்றிய ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் உப தலைவர்,

''அம்பாறை மாவட்டத்தில் காரைதீவு பிரதேச சபையில் இரண்டு ஆசனங்களைக் கைப்பற்றுவதற்காக பாடுபட்டுக் கொண்டிருக்கின்றோம். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இருந்தவர்கள் இதுவரை என்ன செய்திருக்கின்றார்கள்? அகில இலங்கை மக்கள் காங்கிரஸில் இருந்தவர்கள் எதைச் செய்தார்கள்? அவர்கள் உங்களுக்கு ஏதாவதொன்றைச் செய்திருந்தால் இங்கு நாங்கள் வரத் தேவையில்லை. உங்களது பெறுமதியான வாக்குகளை அவர்களுக்கு வழங்கி விட்டு இன்று எதைச் சாதித்திருக்கிறீர்கள்? எதையுமே சாதிக்கவில்லை. நாங்கள் எமது கட்சியின் சார்பாக இன்று இளைய தலைமுறைக்கு இடம்கொடுத்துள்ளோம்.

இந்த வட்டாரத்துக்கு ஓர் இளைஞனைக் களமிறக்கியிருக்கின்றோம். நாளை அந்த சாஜித் என்ற இளைஞன் காரைதீவு சபையில் இருக்கின்றபோது உங்களுக்காக குரல் கொடுப்பார். எனவே, நீங்கள் அவரை ஆதரிக்க வேண்டும். அவர் உங்களுடன் இருக்கின்றவர். உங்களுடன் வாழ்ந்து வருபவர். நாங்கள் எதிர்வரும் தேர்தலில் இரண்டு ஆசனங்களை காரைதீவு பிரதேச சபையில் பெற்றுக் கொள்வது உங்கள் கைகளில் தான் இருக்கின்றது.

இதற்காக வேட்பாளர்கள் மற்றும் கட்சியின் போராளிகள் முன்னெடுத்துவரும் களச் செயற்பாடுகளை முழு வீச்சுடன் முன்னெடுக்குமாறும் போலிப் பிரசாரங்களுக்கு கூட்ட மேடைகளில் தக்க பதில் வழங்கப்படுமென்றும் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிகழ்வில் ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் இணைப்புச் செயலாளர் ஏ.எம்.அகுவர், மாளிகைக்காடு கிழக்கு வட்டார வேட்பாளர் இளம் ஆளுமை சமூக செயற்பாட்டாளர் ஆர்.எம்.தானிஸ் ரஹ்மதுல்லாஹ், வட்டாரங்களின் வேட்பாளர்கள் மற்றும் கட்சி ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# ஊழல்கள் செய்தும் இனவாதம் பேசியும் ஏமாற்றுபவர்களுக்கு சிறந்த பாடம் கற்பிக்கப்படும்

## தலைமை வேட்பாளர் நளீர்



(மாளிகைக்காடு செய்தியாளர்)

நாவிதன்வெளியை இவ்வளவு காலமும் பொய்யான வாக்குறுதிகளையும் பகட்டு கதைகளையும் கூறி ஏமாற்றி வந்த அரசியல்வாதிகளை புறமுதுகு காட்டி ஓடவிடுமளவுக்கு நாவிதன்வெளி மக்கள் தெளிவாக இருப்பதுடன் ஊழல்களைச் செய்து கொண்டு இனவாதம் பேசிக்கொண்டு மக்களை ஏமாற்ற எத்தனிக்கும் அரசியல்வாதிகளுக்கும் அவர்களின் அரசியல் கட்சிகளுக்கும் மக்கள் மே 06 இல் நல்ல பாடம் கற்பிப்பார்கள் என நாவிதன்வெளி பிரதேச சபைக்கு சுயேச்சை குழுவில் போட்டியிடும் தலைமை வேட்பாளர் எம்.ஏ.நளீர் தெரிவித்தார்.

நாவிதன்வெளி பிரதேச சபை வேட்பாளர் முஹம்மட் ஹலால் தலைமையில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

''தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உள்ளிட்ட இன்னும் சில சில்லறைக் கட்சிகளும் சேர்ந்துகொண்டு தேர்தல் காலங்களில் இங்கு படையெடுத்து நடைமுறைச்சாத்தியமற்ற வாக்குறுதிகளை வழங்கி அவற்றை ஒருகாலமும் நிறைவேற்றாது ஏமாற்றும் வேலையையே தொடர்ந்து செய்து வருகின்றன. இக்கட்சியினரின் ஏமாற்று அரசியலை நம்பி நாம் தொடர்ந்தும் இவர்களுக்கு வாக்களிக்க முடியாது.

அரசியல்வாதிகளின் பொய்யான வாக்குறுதிகளையும் பகட்டு கதைகளையும் நம்பி இன்னும் வாக்களிக்க மக்கள் தயாரில்லை என்பதை நாங்கள் செல்லும் இடங்களில் எல்லாம் மக்கள் தெளிவாகக் கூறிக்கொண்டிருக்கிறார்கள். நாவிதன்வெளி பிரதேசத்தை இருண்ட பிரதேசமாக தொடர்ந்தும் வைத்திருக்க முடியாது. எமது பிரதேச வளங்களை முழுமையாகப் பயன்படுத்தி அவற்றைக் கொண்டு மக்களின் வாழ்வியலை மேம்படுத்தத் தேவையான வேலைத்திட்டங்களை நாங்கள் வென்றால் நிச்சயம் செய்வோம் என்பதை மக்கள் நன்றாக அறிவார்கள்.

பொய்யான கதைகளைக் கூறி ஆட்சியைப் பிடித்த ஆளுந்தரப்பினர் தோல்வியை அறிந்துகொண்டு இப்போது மேடைகளில் தடுமாற ஆரம்பித்துள்ளார்கள். எங்களிடம் எவ்வித தடுமாற்றங்களும் இல்லை. அதிகாரமில்லாது நாங்கள் கடந்த காலங்களில் செய்து கொண்டிருந்ததை இப்போது அதிகாரத்துடன் செய்ய மக்களை நாடி வந்துள்ளோம். இதனை மக்கள் நன்றாக அறிந்து வைத்துள்ளனர். கடந்த காலங்களில் சர்வதேச உதவிகளைப் பெற்று நாவிதன்வெளி பிரதேசத்துக்கு நிறைய உட்கட்டமைப்பு வசதிகளை நாங்கள் செய்துள்ளோம்.

வீடமைப்பு, நீர்வழங்கல், மின்சாரம் வழங்கல், வாழ்வாதாரம் வழங்கல், உதவிகளை வழங்குதல் என நிறைய சேவைகளை அதிகாரமில்லாமலே செய்துள்ளோம். அதிகாரம் கிடைக்கும்போது உத்வேகத்துடன் நிறைய பணிகளை மக்களுக்கு செய்யத் தயாராக இருக்கிறோம்''- என்றார்.

இக் கூட்டத்தில் நாவிதன்வெளி பிரதேச சபை முன்னாள் உப தவிசாளர் ஏ.கே. அப்துல் சமட், பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் எம். சுபைதீன், நாவிதன்வெளி பிரதேச சபைக்கு சுயேச்சையாகப் போட்டியிடும் வேட்பாளர்கள், முக்கியஸ்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# மட்டு. மாநகர சபையை நிச்சயமாக தேசிய மக்கள் சக்தி கைப்பற்றும்

## புளியந்தீவு வட்டார வேட்பாளர் துதிஸ்வரன்



(மட்டக்களப்பு செய்தியாளர்)

''ஜனாதிபதியின் கரங்களை உள்ளூராட்சித் தேர்தலில் பலப்படுத்துவதோடு மட்டு. மாநகர சபையை நிச்சயமாக நாம் கைப்பற்றுவோம்'' - என தேசிய மக்கள் சக்தி கட்சியின் மட்டக்களப்பு மாநகரத்துக்குட்பட்ட புளியந்தீவு வட்டார வேட்பாளர் முத்துலிங்கம் துதிஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற புளியந்தீவு வட்டார தேர்தல் அலுவலக திறப்பு விழாவில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

''புளியந்தீவு வட்டாரமானது மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் அமைந்திருந்தாலும் கடந்த 20 வருடங்களாக இப்பகுதியில் அடிப்படை வசதிகள் குறைவாகவும் பின்தங்கிய நிலையிலும் காணப்படுகின்றன. இப்பகுதியின் குறுக்கு வீதிகள் இதுவரை காலமும் புனரமைக்கப்படாமல் உள்ளன. இதற்கெல்லாம் தீர்வு காண்பதற்காகவே இப்பகுதி மக்களின் வேண்டுகோளுக்கு நாங்கள் தேசிய மக்கள் சக்தி கட்சியில் இம்முறை தேர்தலில் களமிறங்கியுள்ளோம். எமது வெற்றி நிச்சயமாகும். அதன் பின்பு இந்த வட்டாரம் எழுச்சி காணும். எமது ஜனாதிபதியின் கரங்களைப் பலப்படுத்துவதே உசிதமானது.

நமது கட்சியில் உள்ள அனைத்து வேட்பாளர்களும் திறமையானவர்கள். இடம்பெறவுள்ள தேர்தலில் மட்டு. மாநகர சபையை தேசிய மக்கள் சக்தி நிச்சயமாகக் கைப்பற்றும். இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் க.பிரபு உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.





**முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸின் டீ- 100 திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட சுமார் 06 மில்லியன் ரூபா விசேட நிதி ஒதுக்கீட்டின் மூலம் நிர்மாணிக்கப்பட்டு வரும் மாவடிப்பள்ளி ஜும்ஆப் பெரியபள்ளிவாசலின் சுற்றுமதில்கள் மற்றும் பள்ளிவாசல் அபிவிருத்திப்பணிகளை கள விஜயம் செய்து முன்னாள் எம்.பி. ஹரீஸ் ஆராய்ந்தார். இதன்போது மாவடிப்பள்ளி ஜும்ஆப் பெரியபள்ளிவாசலின் தலைவர் வை.வி.அப்துல் மனாப் தலைமையிலான நம்பிக்கையாளர்களைச் சந்தித்து பெரியபள்ளிவாசலின் அபிவிருத்திப்பணிகள், ஊர்நலன் சார் விடயங்கள் குறித்தும் கலந்துரையாடினார். (மாளிகைக்காடு செய்தியாளர்)**

# இலங்கைக்குள் தற்போது முதலீட்டுக்கு உகந்த சூழல் உருவாகியுள்ளது

## ஜனாதிபதி அநுரகுமார தெரிவிப்பு



இலங்கையில் முதலீட்டுக்குகந்த சூழல் உருவாகியிருக்கிறது. கடந்த காலங்களைப் போன்று முதலீடுகளை வலுவிழக்கச் செய்யும் நிலைமை மீண்டும் ஏற்பட இடமளிக்கப்படமாட்டாதென்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் ஐக்கிய அரபு அமீரகத்தின் உப பிரதமரும் வெளியுறவு அமைச்சருமான ஷேக் அப்துல்லா பின் சயீட் அல் - நஹியான் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் (22) ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையுடனான நீண்டகால உறவுகளை மிக உயர்ந்த நிலைக்கு உயர்த்தி வைப்பதற்காக எரிசக்தி, சுற்றுலா, வெளிநாட்டு முதலீடு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஆகிய துறைகளுக்கு முன்னுரிமையளிக்கப்படுமென ஐக்கிய அரபு அமீரகத்தின் உப பிரதமரும் வெளியுறவு அமைச்சருமான ஷேக் அப்துல்லா பின் சயீட் அல் - நஹியான் தெரிவித்தார்.

இலங்கைக்கும் ஐக்கிய அரபு அமீரகத்துக்கும் இடையிலான நீண்டகால இருதரப்பு உறவுகளை மேலும் பலப்படுத்தி மேம்படுத்துவதையும் இரு நாடுகளும் பொருளாதார நன்மைகளை ஈட்டிக்கொள்ள வேண்டுமென்பதையும் நோக்காகக்கொண்டு, ஐக்கிய அரபு அமீரகத்தின் உப பிரதமரும் அவரது குழுவினரும் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் அதன் மக்கள் சார்பாக இலங்கையின் புதிய அரசாங்கத்துக்கு வாழ்த்துக் கூறிய உப பிரதமர், புதிய அரசாங்கத்தின் திட்டங்களுக்கு ஐக்கிய அரபு அமீரகம் முழுமையான ஆதரவை வழங்குமென்றும் கூறினார்.

இலங்கையின் மறுமலர்ச்சி வேலைத்திட்டத்துக்கு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் முயற்சிகள், அர்ப்பணிப்பு மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்துடனான முன்னேற்றகரமான அணுகுமுறையையும் உப பிரதமர் பாராட்டினார்.

இங்கு கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, இலங்கையில் முதலீட்டுக்கு உகந்த சூழல் உருவாகியிருப்பதாகக் கூறினார். கடந்த காலங்களைப்போன்று முதலீடுகளை வலுவிழக்கச் செய்யும் நிலைமை மீண்டும் ஏற்பட இடமளிக்கப்படமாட்டாதென்றும் முதலீடுகளைப் பாதுகாப்பதற்கான சட்ட ஏற்பாடுகள் செய்யப் படுமென்பதையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு செயல்முறை மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த அரசாங்கம் மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகள் குறித்து பிரதிநிதிகள் குழுவுக்கு விளக்கமளித்த ஜனாதிபதி, துறைமுக இறங்குதுறை அபிவிருத்தி, துறைமுக நகர அபிவிருத்தி, சுற்றுலா தொழிற்றுறை, எரிசக்தி துறை மற்றும் போக்குவரத்துத் துறை ஆகியவற்றில் முதலீட்டு வாய்ப்புகள் குறித்தும் தெளிவுபடுத்தினார்.

பிராந்தியத்தின் சிறந்த முதலீட்டு மையமாக சுற்றுலாத் தலமாகவும் இலங்கையை மாற்றுவதே புதிய அரசாங்கத்தின் நோக்கமாகுமென்பதை ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தொழில் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரோஷன் கமகே, ஐக்கிய அரபு அமீரகத்தின் இராஜாங்க அமைச்சர் அஹ்மட் அல் - செயி, இலங்கைக்கான ஐக்கிய அரபு அமீரகத்தின் தூதுவர் கலீட் அல் - அமேரி, வர்த்தகம் மற்றும் வாணிப அலுவல்கள் உதவி அமைச்சர் சயீட் அல் - ஹஜேரி, எரிசக்தி மற்றும் ஸ்திரத்தன்மைக்கான வெளியுறவு உதவி அமைச்சர் அப்துல்லா பெலாலா, வெளியுறவு அமைச்சரின் பிரதிப் பணிக்குழுப் பிரதானி அஹ்மட் பர்ஹைமா, வெளியுறவு அமைச்சின் கொள்கை தயாரிப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் முஅத் அல் - வாரி, வெளியுறவு அமைச்சர் அலுவலகத்தின் ஊடக மற்றும் சிரேஷ்ட நிபுணர் மைதா அல் - மயிசோரி, ஆசிய மற்றும் பசுபிக் அலுவல்கள் திணைக்களத்தின் அதிகாரிகள் சிலரும் கலந்துகொண்டனர்.

# மரபுகளைப் பேணுதலே எமது இருப்பை உறுதிசெய்யும்

## சிறீதரன் எம்.பி.தெரிவிப்பு





எமது வாழ்வியலின் கூறுகளான கலை, கலாசார, பண்பாட்டு மரபுகளைப் பேணுவதும் அவற்றின் தனித்துவம் குறையாது அடுத்த சந்ததியிடம் கையளிப்பதுமே எமது இருப்பை உறுதிசெய்யுமென இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

அராலி ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தின் 85ஆம் ஆண்டு விழாவின் முதல் நாள் நிகழ்வுகள், அண்மையில் நிலைய கலையரங்கில் விழாக்குழுத் தலைவர் மஞ்சுளா புஸ்பராசா தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு, ஆண்டு விழாவை முன்னிட்டு நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்ற வீரர்களுக்கான மதிப்பளிப்பை வழங்கிவைத்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் குறிப்பிட்டதாவது,

இருப்பழிந்துவரும் எமது சமூக மற்றும் வாழ்வியல் அடையாளங்களை மீள் நினைவூட்டும் வகையிலான கலை, கலாசார, விளையாட்டு நிகழ்வுகளை ஒழுங்கமைப்பதன் மூலம், இளைய சமுதாயத்தினரிடம் எமது மரபியல்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும். அத்தகைய சமூகநிலைப்பட்ட சிந்தனைக்கு செயல்வடிவம் கொடுத்திருக்கக்கூடிய அராலி ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தினரை நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

சமூக நிறுவனங்களே ஒரு சமூகத்துக்கு அடையாளம் தரவல்லன என்ற அடிப்படையில் அராலி மண்ணின் அடையாளமாக உருவாகி, 85 ஆண்டுகளைக் கடந்தும் தன் செயல்நோக்கில் தளராது இயங்கிக்கொண்டிருக்கும் ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தின் சமூகப் பணிகள் காலப்பெறுமதி மிக்கவை – என்றார்.

# ஆசியா-பசுபிக் செயலர்கள் மாநாடு கொழும்பில் நடைபெறுவது தொடர்பாக ஊடகர்கள் சந்திப்பு





கொழும்பில் ஆசியா-பசுபிக் செயலாளர்கள் மாநாடு நடைபெறுவது தொடர்பாக ஊடகவியலாளர் சந்திப்பொன்று நடைபெற்றது.

26ஆவது ஆசியா-பசுபிக் செயலாளர்கள் மாநாடு (ASA மாநாடு) 2025 ஏப்ரல் 25 முதல் 29 வரையிலும் கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டுக்கு இலங்கை நிர்வாக மற்றும் தொழில்முறை செயலாளர்கள் சங்கமான (SLAAPS) தலைமை தாங்குகின்றது.

'தேச எல்லைகளை கடந்து பல்வகைமையை வலுப்படுத்தல்'என்ற தலைப்பில் நடைபெறும் இந்த மாநாடு, உலகளாவிய தொழில்நுட்பம், நிறுவன வடிவமைப்பு மற்றும் நிர்வாகம் தொடர்பான பிரிவுகளில் அதிக கவனஞ்செலுத்துமென SLAAPS மற்றும் ASA சங்கங்களின் தலைவர் அஸ்ரா ரியால்தீன் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் SLAAPS அமைப்பின் திட்ட அதிகாரிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

# காஷ்மீர் பிரதேசத்தில் இடம்பெற்ற தாக்குதல் கண்டனத்துக்குரியது

## பழனி திகாம்பரம் எம்.பி.

இந்தியா காஷ்மீர் பிரதேசத்தில் இடம்பெற்ற தாக்குதல் கண்டனத்துக்குரியதென நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவருமான பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இந்தியா எப்போதும் அமைதியை ஆதரிக்க விரும்புகின்ற நாடு. அவ்வாறான நிலையில், காஷ்மீர் பிரதேசத்தில் இடம்பெற்ற தாக்குதல் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியுள்ளது. தாக்குதல் என்பதும் யுத்தம் என்பதும் எதற்கும் தீர்வாகாது.

இந்தப் பதற்றமான நிலையிலிருந்து இந்தியா மீண்டெழ வேண்டும். அயல் நாடு என்ற வகையிலும் எங்களின் ஒத்துழைப்பு நாடு என்ற வகையிலும் நாங்கள் இந்தியாவுக்கு துணை நிற்போம் எனவும் தெரிவித்துள்ளார்.

# விநாயகபுரம் அ.த.க. பாடசாலையில் சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வு







**(விஜயரத்தினம் சரவணன்)**

கடந்த 2024ஆம் ஆண்டு தேசிய மற்றும் மாகாண மட்ட ரீதியில் மல்யுத்தம், ஜூடோ, தைகொண்டோ ஆகிய போட்டிகளில் சாதித்த முல்லைத்தீவு - துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட விநாயகபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களையும் பயிற்றுவித்த ஆசிரியர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (22) இடம்பெற்றது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பங்கேற்றார். இந்நிலையில், விநாயகபுரம் அ.த.க. பாடசாலையில் பாடசாலை அதிபர் தயாபரன் சுதன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

அந்தவகையில் விருந்தினர் மற்றும் சாதனையாளர்கள் வரவேற்புடன் தொடங்கிய இந்நிகழ்வில், விருந்தினர்களும் சாதனையாளர்களும் மாலை அணிவிக்கப்பட்டு, அணிவகுப்பு மரியாதையுடன் அழைத்துவரப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து சாதனைபடைத்த மாணவர்கள் மற்றும் பயிற்றுவித்த ஆசிரியர்களின் உருவப்படம் பொறிக்கப்பட்டு பாடசாலை வளாகத்தில் அமைக்கப்பட்ட நினைவுப் பலகை பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனால் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.

அதனையடுத்து மங்கலவிளக்கேற்றல், விருந்தினர்களது உரை என்பன இடம்பெற்றதுடன் தேசிய மற்றும் மாகாண மட்டப் போட்டிகளில் சாதித்த மாணவர்களும் பயிற்றுவித்த ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

அந்தவகையில், மல்யுத்தம், ஜூடோ, தைகொண்டோ போட்டிகளில் சாதித்த மாணவர்க ளான வி.சஞ்சிகா, ஜெ.யதுர்சன், த.விதுசன், ஸ்ரீ.தேனுசன், ந.மிதுசன், செ.யதுசன், த.விதுசனன், அ.யரூபன், க.லோஜினி ஆகியோர் வெற்றிப் பதக்கம் அணிவிக்கப்பட்டு, நினைவுச்சின்னம் வழங்கி கௌரவமளிக்கப்பட்டனர்.

அதேபோல், பயிற்றுவித்த ஆசிரியர் தி.செல்வஞானம், உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் த.சசிதரன், பயிற்றுவிப்பாளர் யோ.லலிகரன் ஆகியோரும் இதன்போது பொன்னாடை போர்த்தி, நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 2025-2029 கிராமிய அபிவிருத்தித் திட்டம் அநுராதபுரம் கீரிக்குளம் கிராமத்தில் ஆரம்பம்



முறையான கிராமிய அபிவிருத்தியொன்றை ஏற்படுத்தும் அரசாங்கத்தின் இலக்கை அடிப்படையாகக் கொண்டு அநுராதபுரம் மாவட்ட அதிகாரிகளுக்கான நிகழ்வொன்று அண்மையில் இடம்பெற்றது.இந்நிகழ்வானது அநுராதபுரம் மாவட்ட செயலாளர் ரஞ்சித் விமலசூரியவின் வழிகாட்டலில் கீரிக்குளம் கிராமத்தில் இடம்பெற் றது.

2025ஆம் ஆண்டு இறுதிக்குள் அநுராதபுரம் மாவட்டத்தின் 22 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் கிராமிய அபிவிருத்தித் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

அதற்கமைய, 2025-2029 கிராமிய அபிவிருத்தித் திட்டத் தின் பணிகளை அரசாங்கம் ஏற்கனவே ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

# சிறுபோகத்தில் வயல் பணிகளை ஆரம்பிக்கும் முன்னர் எலிக்காய்ச்சலைத் தடுக்க சிகிச்சைகளைப் பெறவும்

## சுகாதார அமைச்சின் தொற்றுநோய் விஞ்ஞான பிரிவு விசேட வைத்தியர் துஷானி தாபரேரா



சிறுபோகத்தில் வயல் பணிகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் எலிக்காய்ச்சல் எச்சரிக்கை விடுக்கப்பட்ட பிரதேசங்களில் விவசாயிகள் எலிக்காய்ச்சலை தடுப்பதற்கான முன் சிகிச்சை முறைகளைப்பெற்றுக் கொள்வது பொருத்தமானதென சுகாதார அமைச்சின் தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவின் விசேட வைத்தியர் துஷானி தாபரேரா தெரிவித்தார்.

அந்த சிகிச்சையை தமது பிரதேசங்களில் உள்ள பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களிடம் அல்லது அண்மையில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

எலிக்காய்ச்சல் தொற்றக்கூடிய இடங்களில் உள்ள வயல்களைச் சுற்றியுள்ள இடங்களில் இருப்பதும் காயங்களுக்கூடாகப் பரவாதும் நமது வாய், முகம், கை போன்றவற்றை நெல் வயல் நீரில் கழுவுவதைத் தவிர்ப்பதும் சிறந்தது.


## Now you can subscribe the following Newspapers

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| தமிழன் | One Month | 40.00 | 22 | 880.00 |
| | Three Month | | 64 | 2560.00 |
| | Six Month | | 129 | 5160.00 |
| | One Year | | 261 | 10440.00 |
| தமிழன் | One Month | 130.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 1690.00 |
| | Six Month | | 26 | 3380.00 |
| | One Year | | 52 | 6760.00 |

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| the daily morning | One Month | 70.00 | 22 | 1540.00 |
| | Three Month | | 64 | 4480.00 |
| | Six Month | | 129 | 9030.00 |
| | One Year | | 261 | 18270.00 |
| the sunday morning | One Month | 180.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 2340.00 |
| | Six Month | | 26 | 4680.00 |
| | One Year | | 52 | 9360.00 |

FOR MORE INFORMATION PLEASE CONTACT

Address : - The Manager Circulation
Liberty Publishers Private Limited
46/8, Dompe Road,
Kalukondayawa,Malwana.

DELIVERY FREE

Hotline :- 076 136 7623

**Tel No: - 0112 127 209**

# ஜம்மு காஷ்மீரில் சுற்றுலாப் பயணிகள் மீதான பயங்கரவாதத் தாக்குதலில் 28 பேர் பலி

ஜம்மு காஷ்மீரின் பஹல்காம் பகுதி பைசரன் பள்ளத்தாக்கில் சுற்றுலாப் பயணிகள் மீது தீவிரவாதிகள் செவ்வாய்க்கிழமை (ஏப்.22) துப்பாக்கிச்சூடு நடத்தியதில் 28 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர்.

ஜம்மு காஷ்மீரில் தற்போது கோடை சுற்றுலா தொடங்கியுள்ளதால் அங்கு சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் செல்கின்றனர். அங்குள்ள அனந்தநாக் மாவட்டத்தில் உள்ள பஹல்காம் மலைப்பகுதியில் அடர்ந்த வனப்பகுதிகள், தெளிவான நீரோடைகள், பரந்த புல்வெளிகள் இருப்பதால் இது 'மினி சுவிட்சர்லாந்து' என அழைக்கப்படுகிறது. இதனால் பஹல்காம் பிரபல சுற்றுலாத் தலமாக விளங்குகிறது. இங்குள்ள பைசரன் பள்ளத்தாக்குப் பகுதிக்கு வாகனங்களில் செல்ல முடியாது. கால்நடையாக அல்லது குதிரைகள் மூலமாக மட்டுமே செல்ல முடியும்.

இங்கு சென்ற சுற்றுலாப் பயணிகள் சிலரை இராணுவ உடையில் வந்த தீவிரவாதிகள் செவ்வாய்க்கிழமை மதியம் 3 மணியளவில் சுற்றிவளைத்தனர். அவர்களிடம் பெயர் மற்றும் மதத்தைத் தீவிரவாதிகள் கேட்டு துப்பாக்கிச்சூடு நடத்தினர். துப்பாக்கிச்சூட்டுச் சத்தம் கேட்டதும் சுற்றுலாப் பயணிகள் இங்குமங்குமாக ஓடினர். திறந்தவெளி என்பதால், சுற்றுலாப் பயணிகளால் துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதலிலிருந்து தப்பிக்க முடியவில்லை.

இத்தாக்குதலில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் உட்பட 28 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர். இது தீவிரவாதிகள் திட்டமிட்டு நடத்திய தாக்குதல் போல் தெரிகிறது. தீவிரவாதிகள் துப்பாக்கிச்சூடு நடத்திய இடத்துக்கு பாதுகாப்புப் படையினர் விரைந்து சென்று தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். காயமடைந்தவர்களை உள்ளூர் மக்கள் குதிரைகளின் உதவியுடன் மீட்டு அழைத்து வந்தனர்.

அதன்பின் அங்கு இராணுவ ஹெலிக்கொப்டர்கள் அனுப்பி வைக்கப்பட்டு காயமடைந்தோர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். தமிழகத்தைச் சேர்ந்த சந்துரு என்ற சுற்றுலாப் பயணியும் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தார். ''எனது கணவரை தீவிரவாதிகள் தலையில் சுட்டனர். பலர் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்துள்ளனர். நாங்கள் மருத்துவமனைக்கு செல்ல உதவுங்கள்'' - என பெண்ணொருவர் அழுதபடி வேண்டுகோள் விடுத்தார்.

காஷ்மீரின் புல்வாமா பகுதியில் சி.ஆர்.பி.எவ்.படையினர் மீது தீவிரவாதிகள் 2019இல் நடத்திய தாக்குதலில் 47 வீரர்கள் உயிரிழந்தனர். அதன்பின் தீவிரவாதிகள் நடத்திய மிகப் பாரிய தாக்குதல் இது. அமெரிக்க துணை ஜனாதிபதி ஜே.டி.வான்ஸ் இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள நிலையில், இந்தத் தீவிரவாதத் தாக்குதல் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

காஷ்மீரில் இந்தாண்டு அமர்நாத் யாத்திரை ஜூலை 03ஆம் திகதி தொடங்கவுள்ளது. இந்த யாத்திரை அனந்த்நாக் மாவட்டத்தின் பஹல்காம் வழியாகவும் கந்தர்பால் மாவட்டத்தின் பால்தால் வழியாகவும் நடைபெறும். இந்நிலையில், இந்தத் தாக்குதல் சம்பவம் அமர்நாத் யாத்திரையின் பாதுகாப்பைக் கேள்விக்குறியாக்கியுள்ளது.










### தீவிரவாதிகள் தப்ப முடியாது- மோடி

இந்தத் தீவிரவாதத் தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்துள்ள பிரதமர் மோடி, ''இந்தத் தாக்குதலை நடத்தியவர்கள் தப்ப முடியாது. அவர்களின் தீய நோக்கம் ஒருபோதும் நிறைவேறாது. தீவிரவாதத்துக்கெதிரான நமது போராட்டம் உறுதியானது. அது மேலும் வலுவடையும்'' - எனக் குறிப்பிட்டுள்ளார். அமைச்சர் அமித் ஷாவும் ''இந்தத் தாக்குதலை நடத்தியவர்கள் தப்ப முடியாது. அவர்கள் கடும் விளைவுகளைச் சந்திப்பர்'' - எனத் தெரிவித்துள்ளார்.

### டில்லியிலும் பலத்த பாதுகாப்பு

ஜம்மு-காஷ்மீரின் பஹல்காமில் நடந்த தீவிரவாதத் தாக்குதலுக்குப் பிறகு டில்லியில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்தப் பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். பஹல்காம் தாக்குதலுக்குப் பிறகு டில்லி பொலிஸார் நகரம் முழுவதும் பாதுகாப்பை அதிகரித்துள்ளனர்.

குறிப்பாக, சுற்றுலாத் தலங்கள் மற்றும் நகர எல்லைகளில் சந்தேகத்துக்கிடமான எந்தவொரு செயலையும் உடனடியாகக் கண்டறியும் வகையில் கடுமையான சோதனை மற்றும் கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகிறது.

மறுபுறம், ஜம்மு காஷ்மீர் பள்ளத்தாக்கில் பாதுகாப்பு அதிகாரிகள், காவலர்கள் பல்வேறு இடங்களில் வாகனங்களைச் சோதனை செய்து வருகின்றனர். மேலும் வீதிகளில் விரிவான தடுப்புகள் போடப்பட்டுள்ளன.

ஜம்மு காஷ்மீரின் பல பகுதிகளிலிருந்து இந்தத் தீவிரவாதத் தாக்குதலுக்கெதிரான போராட்டங்களின் படங்கள் மற்றும் காணொளிகள் வெளியாகி வருகின்றன. பஹல்காமில் உள்ள சிலரும் மெழுகுவர்த்தி ஏந்தி பேரணி சென்று, தாக்குதல் குறித்து தங்களது கோபத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

### ட்ரம்ப் கூறியது என்ன?

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தனது ட்ரூத் சோஷியல் சமூக வலைத்தளப் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், “காஷ்மீரில் இருந்து வெளியாகும் செய்திகள் மிகவும் கவலையளிக்கின்றன. பயங்கரவாதத்துக்கெதிராக இந்தியாவுடன் அமெரிக்கா உறுதியாக நிற்கிறது. உயிரிழந்தவர்களின் ஆன்மாவுக்காகவும் காயமடைந்தவர்கள் மீண்டு வரவும் நாங்கள் பிரார்த்திக்கிறோம். பிரதமர் மோடிக்கும் இந்திய மக்களுக்கும் எங்கள் முழு ஆதரவும் ஆழ்ந்த அனுதாபங்களும் உள்ளன” - என்று குறிப்பிட்டுள்ளார்.

### புட்டின்

ஜம்மு காஷ்மீர், பஹல்காம் பகுதியில் நடைபெற்ற தீவிரவாதத் தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்துள்ள ரஷ்ய ஜனாதிபதி புட்டின், “இந்தக் கொடூரமான குற்றத்தை நியாயப்படுத்த முடியாது. குற்றவாளிகள் தக்க தண்டனையை எதிர்கொள்வார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். பயங்கரவாதத்துக்கெதிரான போராட்டத்தில் இந்தியாவுடனான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தத் தயார் நிலையில் உள்ளோம் என்பதை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்” - என்று கூறியுள்ளார்.

## மோடியிடம் சொல்! துப்பாக்கிதாரிகள் சொல்லியனுப்பிய செய்தி



பெஹல்காம் தாக்குதலில் கொல்லப்பட்டவரின் மனைவி மூலம் பிரதமர் நரேந்திர மோடிக்கு தீவிரவாதிகள் செய்தி அனுப்பியுள்ளனர்.

ஜம்மு-காஷ்மீரின் பிரபல சுற்றுலா நகரமான பெஹல்காமில் உள்ள பைசரன் பள்ளத்தாக்குப் பகுதியில் செவ்வாய்க்கிழமை நூற்றுக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் கூடியிருந்தனர்.

அப்போது ஆயுதங்களுடன் அப்பகுதிக்குள் நுழைந்த பயங்கரவாதிகள் சுற்றுலாப் பயணிகள் மீது சரமாரித் தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்தச் சம்பவத்தில் 2 வெளிநாட்டவர் உட்பட 26 பேர் கொல்லப்பட்ட நிலையில், 20 பேர் காயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

புல்வாமாவில் நடைபெற்ற தாக்குதலுக்குப் பிறகு ஜம்மு - காஷ்மீரில் நடந்த மிகப் பெரிய தாக்குதல் இதுவாகும். அமெரிக்க துணை ஜனாதிபதி ஜே.டி. வான்ஸ் இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்டிருக்கும் சமயத்தில் இந்தத் தாக்குதல் நடந்துள்ளது.

**மோடிக்கு அனுப்பிய செய்தி**

கர்நாடகாவின் ஷிவமோகாவைச் சேர்ந்த மஞ்சுநாத் - பல்லவி தம்பதியினர் மகனுடன் ஜம்மு - காஷ்மீருக்கு சுற்றுலா சென்றுள்ளனர்.

பெஹல்காமில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தாக்குதலில் மனைவி, மகன் கண்முன்னே மஞ்சுநாத்தை பயங்கரவாதிகள் சுட்டுக் கொலை செய்துள்ளனர்.

இதுகுறித்து பல்லவி கூறியதாவது:

“நான், என் கணவர் மற்றும் மகன் மூவரும் காஷ்மீருக்கு சுற்றுலா சென்றிருந்தோம். நேற்றுமுன்தினம் பிற்பகல் 1.30 மணியளவில் பெஹல்காமில் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தோம். அப்போது என் கண்முன்னே அவரைக் கொன்றனர். கெட்ட கனவுபோல் இருக்கிறது.

நான்கு பேர் எங்கள் மீது தாக்குதல் நடத்தினர். என் கணவரைக் கொன்றதைப் போல் என்னையும் கொன்றுவிடுங்கள் என்று அவர்களிடம் கூறினேன். அப்போது, உன்னைக் கொல்ல மாட்டேன், நடந்ததை உங்கள் பிரதமர் மோடியிடம் போய் சொல் என்று ஒரு பயங்கரவாதி தெரிவித்தார்”- என்றார்.

பயங்கரவாதிகளால் கொலை செய்யப்பட்ட 26 பேரும் ஆண்களே ஆவர். பெண்கள் மற்றும் குழந்தைகள் மீது தாக்குதல் நடத்தப்படவில்லை. சில பெண்களுக்கு இலேசான காயங்கள் மட்டும் ஏற்பட்டுள்ளன.

## மதத்தைக் கேட்டுத் தாக்குதல்
## திருமணமாகி ஆறே நாட்களில் அதிகாரி பலியான சோகம்



காஷ்மீரின் முக்கிய சுற்றுலாத் தலமான பஹல்காம் என்ற இடத்தில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் திருமணமாகி ஆறு நாட்களே ஆன கடற்படை அதிகாரியான 26 வயதேயான லெப்டினன்ட் வினய் நர்வால் பகல்கம் கொல்லப்பட்டுள்ளார்.

ஆறு நாட்களுக்கு முன்புதான் திருமணமாகி தனது மனைவியுடன் தேனிலவு கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்த இந்தியக் கடற்படை அதிகாரியான அவர், நேற்றுமுன்தினம் நடந்த பயங்கரவாத தாக்குதலில் பலியானார்.

அரியானாவின் கர்னாலைச் சேர்ந்த 26 வயதான இந்திய கடற்படை அதிகாரி லெப்டினன்ட் வினய் நர்வால், தனது மனைவியுடன் பஹல்காமுக்கு முதல் பயணத்தை மேற்கொண்டிருந்த போது இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

“நாங்கள் பெல்பூரி சாப்பிட்டுக் கொண்டிருந்தோம்... திடீரென வந்த பயங்கரவாதி என் கணவரைச் சுட்டுக் கொன்றார். துப்பாக்கியுடன் வந்த அவர், என் கணவரின் பெயரைக் கூறச் சொன்னார். பின்னர் அவர் ஒரு முஸ்லிம் அல்ல என்று கூறிவிட்டு, கொடூரமாகச் சுட்டுக் கொன்றார்” - என்று அந்த அதிகாரியின் மனைவி தெரிவித்திருக்கிறார்.

## காஷ்மீர் தாக்குதல் குறித்து மோடி அவசர ஆலோசனை



காஷ்மீரில் பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ள நிலையில், பிரதமர் மோடி தனது சவூதி பயணத்தை பாதியிலேயே முடித்துக்கொண்டு அவசரமாக இந்தியா திரும்பியுள்ளார். இதன்படி நேற்றுமுன்தினம் காலை டில்லி விமான நிலையத்துக்கு பிரதமர் மோடி வந்தடைந்தார்.

இதனைத்தொடர்ந்து பிரதமர் மோடி பாதுகாப்புத்துறை உயரதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். அதில் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் உள்ளிட்டோர் பங்கேற்றனர். டில்லி விமான நிலையத்திலேயே இந்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

பயங்கரவாதத்தை ஒழிக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து முக்கிய ஆலோசனை நடத்தப்பட்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

தாக்குதல் நடத்தப்பட்ட பஹல்காம் பகுதியில் தீவிர தேடுதல் வேட்டையில் இராணுவ வீரர்கள் ஈடுபட்டுள்ளனர். தீவிரவாதத் தாக்குதலால் பஹல்காம் வீதிகள் வெறிச்சோடிக் காணப்படுகின்றன.

பஹல்காம் தாக்குதலைத் தொடர்ந்து உத்தரபிரதேசத்திலும் உச்சகட்டப் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

இதனிடையே பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதல் சம்பவத்தையடுத்து தனது அமெரிக்கா மற்றும் பெரு நாட்டு பயணத்தை இரத்துச்செய்துள்ள மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் நாடு திரும்பியுள்ளார்.

## “என் அப்பாவை சுடும் முன்பு இஸ்லாமிய வாசகத்தை ஓதச் சொன்னார்கள்”
## - பஹல்காம் பயங்கரம் பகிர்ந்த மகள்

“துப்பாக்கிச் சூட்டுக்கு முன்பாக இஸ்லாமிய வாசகத்தை ஓதுமாறு எனது தந்தையை பயங்கரவாதிகள் வற்புறுத்தினர். அவர் மறுத்த காரணத்தால் துப்பாக்கியால் சுட்டனர்” - என்று ஜம்மு காஷ்மீரின் பஹல்காம் தாக்குதல் பயங்கரத்தை இளம்பெண்ணொருவர் விவரித்துள்ளார்.

காஷ்மீருக்கு சுற்றுலா நிமித்தமாகச் சென்றுள்ளது புனேவைச் சேர்ந்த சந்தோஷின் குடும்பம். அக்குடும்பத்தினர் பஹல்காம் பகுதியில் உள்ள பைசரன் பள்ளத்தாக்குக்கு செவ்வாய்க்கிழமை சென்றபோது பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். அப்போது அவர்கள் அந்தப் பகுதியிலிருந்த கூடாரமொன்றில் தஞ்சமடைந்துள்ளனர்.

அங்கு வந்த பயங்கரவாதிகள், பெண்கள் மற்றும் குழந்தைகளை விடுத்து சந்தோஷை வெளிவருமாறு அழைத்துள்ளனர். அவரிடம் இஸ்லாமிய வாசகத்தை ஓதுமாறு தீவிரவாதிகள் வற்புறுத்தியுள்ளனர். அதற்கு அவர் மறுப்புத் தெரிவிக்க தலை, காது மற்றும் முதுகு பகுதிகளில் மூன்று தடவைகள் துப்பாக்கியால் சுட்டுள்ளனர். சந்தோஷின் உறவினர் ஒருவர் மீது துப்பாக்கிச் சூடு நடந்துள்ளதாக கொல்லப்பட்டவரின் மகள் கூறியுள்ளார்.



“எனது பெற்றோருடன் சேர்ந்து நாங்கள் மொத்தம் ஐந்து பேர் காஷ்மீர் வந்திருந்தோம். செவ்வாய்க்கிழமை அன்று நாங்கள் பஹல்காம் பகுதிக்கருகேயுள்ள பைசரன் பள்ளத்தாக்குக்கு வந்தபோது பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். தாக்குதல் நடத்தியவர்கள் உள்ளூரைச் சேர்ந்த காவல் அதிகாரிகளைப் போல சீருடை அணிந்திருந்தனர்.

துப்பாக்கிக் குண்டுகளின் சப்தம் கேட்டதும் நாங்கள் அருகிலிருந்த கூடாரமொன்றில் தஞ்சமடைந்தோம். எங்களுடன் வேறு சில சுற்றுலாப் பயணிகளும் வந்திருந்தனர். முதலில் பயங்கரவாதிகள் மற்றும் பாதுகாப்புப் படையினருக்கிடையில் தாக்குதல் நடக்கிறதென நினைத்தோம். ஆனால், எங்களுக்கருகில் இருந்த கூடாரத்துக்கு வந்த தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர்.

தொடர்ந்து எங்கள் கூடாரத்துக்கு வந்தனர். என் அப்பாவை வெளியில் வருமாறு அழைத்தனர். பிரதமர் மோடிக்கு ஏன் ஆதரவு வழங்குகிறீர்கள் எனப் பழித்தனர். அதன் பின்னர் அப்பாவி மக்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளை காஷ்மீர் தீவிரவாதிகள் கொல்ல மாட்டோம் எனக் கூறினர். பின்னர் இஸ்லாமிய வாசகத்தை ஓதுமாறு என் அப்பாவிடம் கூறினர். அவர் மறுத்த காரணத்தால் மூன்று தடவைகள் அவரை துப்பாக்கியால் சுட்டனர். அவர் அப்படியே சரிந்து விழுந்தார். என்னருகே இருந்த உறவினரையும் பலமுறை சுட்டனர். இந்தத் தாக்குதல் பிற்பகல் 3.30 மணியளவில் நடைபெற்றது. பின்னர் அங்கிருந்து நாங்கள் மீட்கப்பட்டோம். எங்களுக்கு மருத்துவ சோதனை நடத்தப்பட்டது”

-என வேதனையுடன் சந்தோஷின் மகள் அசவரி தெரிவித்துள்ளார். இந்தத் தகவலை தொலைபேசி வழியாக தனியார் செய்தி நிறுவனத்துக்கு அவர் பகிர்ந்தார்.

# பக்தர்களுக்கான பொது வசதிகள் குறித்து கண்டி மாவட்ட செயலாளர் ஆராய்வு



(எம்.ஏ.அமீனுல்லா)

தலதா மாளிகை யாத்திரைக்காக கண்டிக்குச் சென்று புத்த பெருமானின் புனித தந்தத்தைப் பார்வையிட வீதிகளில் காத்திருக்கும் பக்தர்களுக்கான பொதுவான வசதிகள் குறித்து கண்டி மாவட்ட செயலாளர் இந்திக்க உடவத்தவால் நேற்றுமுன்தினம் (22) விசேட கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

புத்தபெருமானின் புனித தந்தத்தைத் தரிசிப்பதற்காக கண்டி கட்டுகஸ்தோட்டை வீதி, கண்டி வாவி சுற்றுவட்ட அவன்கல வீதி மற்றும் கண்டி சங்கராஜ வீதி என்பவற்றினூடாக தலதா மாளிகைக்குச் செல்லலாம்.

அங்கு இரவு வேளைகளில் தங்கியுள்ள பக்தர்களுக்கு வழங்கப்படும் உணவு, மருத்துவம், சுகாதார மற்றும் பாதுகாப்பு வசதிகள் எனபன தொடர்பாக மாவட்ட செயலாளர் நேரில் சென்று பார்வையிட்டார்.

இதன்பின்னர் குறித்த வீதிகளில் தங்கியிருக்கும் பக்தர்களின் நலநோன்புகைக்காக ஸ்ரீ தலதா மாளிகை, மத்திய மாகாண சபை, கண்டி மாவட்ட செயலகம், கண்டி மாநகர சபை, நான்கு தேவாலயங்கள் உள்ளிட்ட பல நிறுவனங்களின் உதவிகள் கிடைக்கப்பெறுவதாகவும் இவை அனைத்தும் அரசாங்கத்தின் முறையான கண்காணிப்பில் உள்ளதாகவும் ஊடகங்களுக்கு அவர் தெரிவித்தார்.

# ரணில் விக்கிரமசிங்க கூறிய விடயத்தையே ஜனாதிபதியும் தலவாக்கலையில் கூறியுள்ளார்

## பாராளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணன்




(எஸ்.கணேசன்)

தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பில் ரணில் விக்கிரமசிங்கவும் இ.தொ.காவினரும் கூறிய விடயத்தைத்தான் ஜனாதிபதியும் தலவாக்கலைக்கு வந்து தற்போது கூறியுள்ளார் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வீ. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

அட்டனில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் பின் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்தே இம்முறை தலவாக்கலையில் மே தினக் கூட்டம் மற்றும் பேரணியை நடத்தவுள்ளோம்.

ஜனாதிபதி மற்றும் பொதுத்தேர்தல்களில் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்றது. உள்ளூராட்சி மன்றங்களையும் கைப்பற்றுவதற்கு தற்போது முழு வீச்சுடன் செயற்படுகின்றது.

ஜனாதிபதி தலவாக்கலைக்கு வருகை தந்திருந்தார். மலையக மக்களுக்கான 10 பேர்ச்சஸ் காணி உரிமை பற்றி எதுவும் பேசவில்லை.

தோட்டத் தொழிலாளர்களுக்கு 1700 ரூபா சம்பள உயர்வு வழங்குவது தொடர்பில் கம்பனிகளுடன் பேச்சு நடத்தப்படும் எனக் கூறியுள்ளார். கடந்த மே தினத்தன்று ரணில் விக்கிரமசிங்கவும் இ.தொ.காவினரும் தலவாக்கலையில் வைத்து விடுத்த அறிவிப்பைதான் ஜனாதிபதியும் தலவாக்கலைக்கு வந்து கூறிவிட்டுச் சென்றுள்ளார்.

மீண்டும் மீண்டும் பொய்யுரைப்பதால் பொய் உண்மையாகப்போவதில்லை. எனவே கம்பனிகளுடன் பேச்சு நடத்துங்கள். இணக்கப்பாட்டை ஏற்படுத்திய பின்னர் மக்களுக்கு உறுதிமொழியை வழங்குங்கள்.

நாட்டில் தற்போது பொருட்களின் விலை அதிகரித்துள்ளது. இது தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும். அதற்கேற்ற வகையில் எமது உறுப்பினர்கள் பிரசாரம் செய்ய வேண்டும்.

மே முதலாம் திகதி நாம் பெருமளவு மக்களை திரட்டி எமது பலத்தை காட்ட வேண்டும்" - என்றார்.

# வாகன விபத்து சாரதி காயம்

(ஜே.எம்.ஹாபீஸ்)

கெசல்கமுவ பகுதியில் வாகனம் ஒன்று பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் சாரதி படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் (22) இடம்பெற்றுள்ளது.

நல்லதண்ணி என்ற இடத்தில் இருந்து கினிகத்தேனை, பொல்பிட்டிய பிரதேசத்துக்குச் செல்லும் வழியில் மேற்படி மோட்டார் வாகனம் பாதையை விட்டு விலகி சுமார் 250 அடி பள்ளத்தில் வீழ்ந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வாகனத்துக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதுடன் சாரதி லக்சபான வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். தொழில்நுட்பக் கோளாறு காரணமாக வாகனம் விபத்துக்குள்ளாகியிருக்கலாம் என நோர்வூட் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# சீதாவக்கபுரவில் மே தின ஊர்வலம்

டி.வசந்த்

இலங்கைத் தோட்ட சேவையாளர் சங்கத்தின் மே தின ஊர்வலமும் பொதுக்கூட்டமும் "உரிமைகளை வெல்லும் உழைப்பின் சக்தி" எனும் தொனிப்பொருளில் சீதாவக்கபுர நகர சபை மண்டபத்தில் இடம்பெறும் என இலங்கை தோட்ட சேவையாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சத்துர சமரசிங்க தெரிவித்தார்.

அவர் இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில், இலங்கைத் தோட்ட சேவையாளர் சங்கத்தின் மே தின ஊர்வலம் மே முதலாம் திகதி காலை 9.00 மணிக்கு அவிசாவளை நகரத்திலுள்ள கைத்தொழில் பேட்டை சந்தியில் ஆரம்பமாகி சீதாவக்கபுர நகர சபை மண்டபத்தை சென்றடைந்ததும் கூட்டம் ஆரம்பிக்கப்படும். இக்கூட்டத்தில் சங்கத்தின் தலைவர் நிசாந்த வன்னியாரச்சி, பொதுச்செயலாளர் சத்துர சமரசிங்க, நிதிச்செயலாளர் எம்.சுதாகர்,பிரதித்தலைவர் ரோகன விஜயரட்ன, உபதலைவர்களான எஸ்.இளையராஜா,நிசாந்த காந்துவ ஆராச்சி ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.

இந்த பேரணியில் பதுளை, நுவரெலியா, தலவாக்கலை, நாவலப்பிட்டி, கண்டி, கேகாலை, அவிசாவளை, இரத்தினபுரி, மத்துகம, காலி மற்றும் மாத்தறை ஆகிய பெருந்தோட்ட பகுதிகளில் சேவையாற்றும் உத்தியோகஸ்தர்கள் கலந்துகொள்ளவுள்ளனர் என்றும் கூறினார்.

# பக்தர்களின் நலன் கருதி ஸ்ரீ தலதா மாளிகைக்கு பலத்த பாதுகாப்பு

(எம்.ஏ.அமீனுல்லா)

ஸ்ரீ தலதா மாளிகையில் புத்த பெருமானின் தந்தத்தை தரிசிக்க கண்டிக்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரிப்பதன் காரணமாக பாதுகாப்பு ஏற்பாடுகளை பலப்படுத்துவதற்காக மேலும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர், புலனாய்வுப் பிரிவினர் மற்றும் முப்படையினரும் நேற்றுமுன்தினம் (22) வரவழைக்கப்பட்டுள்ளனர்

ஸ்ரீ தலதா தரிசனம் ஆரம்பமாகி ஆறு நாட்கள் கடந்துவிட்ட நிலையில் புனித தந்தத்தை தரிசிக்க கண்டி ஸ்ரீ தலதாமாளிகைக்கு பல இலட்சக் கணக்கான பக்தர்கள் வந்துள்ள நிலையிலேயே இவ்வாறு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 16 வருடங்களின் பின்னர் கிடைத்துள்ள இந்த அரிய வாய்ப்பு காரணமாக இந்த ஆண்டு தலதா மாளிகை யாத்திரை முன்னெப்போதும் இல்லாத வகையில் கவனத்தை ஈர்த்துள்ளது.

தலதா மாளிகை யாத்திரை கடந்த 18ஆம் திகதி ஆரம்பமாகவிருந்த போதிலும் 16ஆம் திகதியே தரிசனத்துக்காக வேண்டி முன்கூட்டி இடங்களை ஒதுக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறு பாதுகாப்பு ஏற்பாடுகளை மேலும் பலப்படுத்துவதற்காக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர், புலனாய்வுப் பிரிவினர் மற்றும் முப்படையினர் வரவழைக்கப்பட்டுள்ளனர். 1060 பொலிஸ் உத்தியோகத்தர்கள், புலனாய்வு அதிகாரிகள் மற்றும் முப்படையைச் சேர்ந்தவர்கள் தலதா தந்தத்தை வைத்திருக்கும் மாளிகை வளாகத்தில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ளதாக மத்திய மாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் சுதத் மாசிங்க தெரிவித்துள்ளார்.

தலதா மாளிகை யாத்திரைக்காக வரும் பக்தர்கள் இரண்டு தடவைகள் பொலிஸ் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

மேலும் அவர்கள் கொண்டுவரும் பொருட்களை பாதுகாப்பாக வைக்க மூன்று இடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன் அவற்றின் பாதுகாப்பும் பொலிஸார் மற்றும் முப்படையினரின் பொறுப்பில் உள்ளது.

இத்தனைக்கும் மத்தியில் தலதா மாளிகைக்கு வந்து வழிபட வரும் மாற்றுத்திறனாளிகளுக்கு உதவி செய்து அவர்களுக்குள் இருக்கும் உன்னத மனித நேயத்தை பாதுகாப்புப் பிரிவினர் வெளிக்காட்டிவருகின்றனர்.

# மலையக மக்கள் தேர்தலில் சோரம் போகக்கூடாது

## ஐ. ம. கூட்டணியின் வேட்பாளர் தியாகராஜா கலைச்செல்வன்



எஸ். சதீஸ்

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மலையக மக்கள் பசப்புவார்த்தைகளை நம்பி சோரம் போய்விடக்கூடாதென ஐக்கிய மக்கள் கூட்டணியின் சார்பில் போட்டியிடும் பொகவந்தலாவ,கெர்க்கஸ்வோல்ட் கீழ்வட்டார வேட்பாளர் தியாகராஜா கலைச்செல்வன் தெரிவித்தார்.

பொகவந்தலாவ, கெர்க்கஸ்வோல்ட் கீழ்வட்டாரத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் வாக்குகள் பணத்துக்கு விற்பனை செய்யப்பட்டன. தேர்தல் காலப்பகுதியில் மாத்திரம் பல்வேறு சுயேச்சை குழுவில் போட்டியிடும் வேட்பாளர்கள் மக்கள் மத்தியில் வந்து வாக்கு சேகரிப்பதை வழமைபோல் மேற்கொண்டு வருகிறார்கள்.

மக்களுக்கு கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் வீடமைப்பு முதல் வீதி அபிவிருத்தி, காணி உறுதிப்பத்திரம் வழங்கல், மலையகத்துக்கான அதிகார சபைகள் போன்ற பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதை மக்கள் இன்னும் மறக்கவில்லை என்பது எமக்கு நன்றாக தெரியும். இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் என்பது எமக்கு ஒரு முக்கியமான தேர்தலாகும். இத்தேர்தலில் கடந்த காலங்கள் போல் இல்லாமல் மக்களுக்கான சிறந்த சேவையை முன்னெடுக்கப்பட வேண்டும். கடந்த ஆட்சிக்காலத்தில் பழிவாங்கலுக்கு மத்தியில் உடைத்தெரியப்பட்ட பொகவந்தலாவ டியன்சின் நகரத்தை எமது ஆட்சியின் ஊடாக முன்னெடுப்பதற்கான நடவடிக்கையை நாம் மேற்கொள்ள வேண்டுமானால் நாம் அனைவரும் ஒருமித்த குரலாக ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றார்.

# அதிகரித்து வரும் வெண் ஈ தாக்கத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குக!

## ஜிப்பிரிக்கோ கோரிக்கை



(பு.கஜிந்தன்)

யாழ்ப்பாண மாவட்டத்தின் பல பகுதிகளில் 'வெண் ஈ' தாக்கத்தால் பெருமளவான தென்னை மரங்கள் பாதிப்படைந்துள்ளன. அதேநேரம், குறிப்பாக, வலிகாமம் தென்மேற்கு, சண்டிலிப்பாய் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட சண்டிலிப்பாய் கமநல சேவைகள் நிலையப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் தேர்தல் பிரசாரங்களுக்குச் செல்லும் போது பல தென்னைகள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளமையை அவதானிக்க முடிகின்றதென மானிப்பாய் பிரதேச சபை முன்னாள் உறுப்பினரும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் மானிப்பாய்க் கிளைச் செயலாளருமான அ.ஜோன் ஜிப்பிரிக்கோ தெரிவித்தார்.

# வீதியில் சென்ற இளைஞர்களுடன் மாங்குளம் பொலிஸார் அராஜகம்!

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர்கள் சிலர் நேற்றிரவு (23) காரில் வவுனியா நோக்கிப் பயணித்தனர். இதன்போது மாங்குளம் பொலிஸார் அவர்களை வழிமறித்தனர்.

வழி மறிக்கும்போது டோர்ச் லைட்டின் வெளிச்சத்தைக் கண்களில் பாய்ச்சினர். இதனால் காரில் பயணித்த இளைஞர்கள் நிலைகுலைந்தனர். இந்நிலையில், காரிலிருந்து இறங்கிய இளைஞர்கள் இப்படி வெளிச்சத்தைக் கண்களில் பாய்ச்சி வாகனங்களை மறிக்கக் கூடாதென எடுத்துரைத்தனர்.

இதன்போது குறிக்கிட்ட பொலிஸார், இளைஞர்களை மிரட்டும் வகையில், ''அப்படித்தான் செய்வோம், உங்களால் என்ன செய்ய முடியும்''- எனக் கூறினர். இதன்போது இளைஞர்கள், "பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரியவே இவ்வாறு வாகனங்களை டோர்ச் லைட் வெளிச்சத்தை கண்களில் பாய்ச்சி மறிக்கக்கூடாதென்று உத்தரவிட்டுள்ளார்" - எனக் கூறினர்.

இதன்போது பொலிஸார், அவரது அறிவிப்பு குறித்து எமக்குத் தெரியாதென்று கூறிவிட்டு சிங்களத்தில் பேச ஆரம்பித்தனர். இந்நிலையில், இளைஞர்கள், ''எமக்கு சிங்களம் தெரியாது, தமிழில் பேசுங்கள்''- எனக் கூறிய வேளை, "இது ஸ்ரீலங்கா, நீங்கள் சிங்களம் பேசத்தான் வேண்டும், தமிழில் எல்லாம் பேச முடியாது" - என்று மிரட்டினர்.

குறித்த பொலிஸார் மேல் அங்கியை அணிந்திருந்த நிலையில், அவர்களது தகட்டு இலக்கம் மறைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், ''உங்களது தகட்டு இலக்கத்தைக் கூறுங்கள், நாங்கள் இது குறித்து வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் திலக் தனபாலவிடம் முறையிடுகின்றோம்''- என இளைஞர்கள் கூறினர்.

இதன்போது பொலிஸார், "நீங்கள் அவரிடம் கூறி எதுவும் செய்யப்போவதில்லை. அவராலும் எதுவும் செய்ய முடியாது. தகட்டு இலக்கமும் வழங்க முடியாது''- என மிரட்டி அனுப்பினர். அதன் பின்னர் வந்த வாகனங்களையும் பொலிஸார் டோர்ச் லைட் ஒளி பாய்ச்சியே வழி மறித்தனர்.

அநுர அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் பொலிஸாரின் அராஜகம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

இது குறித்து செய்திகள் வெளியாகிய நிலையிலும் உரிய தரப்பினர் நடவடிக்கை எடுப்பது போல் தெரியவில்லை. எனவே, உரிய அதிகாரிகள் இவ்வாறான சம்பவங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பதே மக்களின் கோரிக்கையாக உள்ளது.

# வவுனியா மாநகர சோலைவரியை ஐந்து சதவீதமாகக் குறைக்கத் தீர்மானம்

## வேட்பாளர் சுந்தரலிங்கம் காண்டீபன் உறுதி



எதிர்வரும் தேர்தலில் நாம் வெற்றி பெறும் பட்சத்தில் மாநகரசபை அறிவித்துள்ள சோலைவரியை 5 சதவீதமாகக் குறைப்போமென்று ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் வவுனியா மாநகரசபை வேட்பாளரும் முன்னாள் நகரசபை உறுப்பினருமான சு.காண்டீபன் தெரிவித்தார்.

வவுனியாவில் இடம்பெற்ற பிரசாரக்கூட்டமொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்,

வவுனியா மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் ஆதன வரி 15 சதவீதமாக அறவிடப்பட்டு வருகின்றது. மாநகரத்தின் அபிவிருத்திக்கு வரி வருமானம் அவசியமாக இருந்தாலும் பொதுமக்கள் பாதிப்படையக் கூடிய வகையில் அதனை அறவிடுவது பொருத்தமற்ற ஒரு செயற்பாடகவே உள்ளது.

குறிப்பாக, போர் மற்றும் பல்வேறு காரணங்களால் வடக்கு மக்கள் பொருளாதார ரீதியாக நலிவடைந்துள்ளனர். இந்நிலையில், மெல்ல மீள் எழுச்சியடைந்து வரும் மக்களின் நிலை அறியாமல் திடீரென வரி அதிகரிப்பை மேற்கொண்டுள்ளமை ஏற்கமுடியாத செயற்பாடு. எனவே, அதனை மீளாய்வு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

அந்தவகையில், எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் எமது ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி மாநகரசபையின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றினால் குறித்த வரி அறவீட்டு நடவடிக்கை நிச்சயமாகத் திருத்தப்படும்.

குறிப்பாக, தற்போது அறவிடப்படும் 15 சதவீத வரி அறவீட்டை 5 சதவீதமாக மாற்றுவதற்கான வலுவான தீர்மானமொன்று என்னால் முன்னெடுக்கப்படும். அது நிச்சயம் அமுல்படுத்தப்படுமென்பதைக் கூறிக்கொள்கிறேன்.

கடந்த காலங்களில் மக்கள் எமக்களித்த ஆணையை திறம்படச் செயற்படுத்தியவர்கள் நாங்கள் என்ற ரீதியில் வட்டாரத்தின் அபிவிருத்திக்காக இம்முறையும் எமது கரங்களை மக்கள் பலப்படுத்த வேண்டுமென்று தெரிவித்தார்.

# யாழில் இரு இளைஞர்கள் ஹெரோயினுடன் கைது!

(பு.கஜிந்தன்)

அராலி வீதி, பொம்மைவெளி பகுதியில் இரண்டு இளைஞர்கள் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டுள்ளனர். இதன்போது அவர்களிடமிருந்து 620 மில்லிகிராம் ஹெரோயின் மீட்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் யாழ்ப்பாணம் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பொலிஸாரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேகநபர்களும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஒளி பாய்ச்சி மீன் பிடித்த இருவர் கடற்படையினரால் கைது

(கஜிந்தன்)

யாழ். வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டில் சட்டவிரோதமாக ஒளி பாய்ச்சி மீன்பிடித்த இருவர் நேற்று முன்தினம் (22) கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். வடமராட்சி கிழக்கு கடற்பகுதிகளில் இடம்பெறும் சட்டவிரோத தொழில் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் வெற்றிலைக்கேணி கடற்படையினர் தொடர் சுற்றி வளைப்புகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நடவடிக்கையின் ஒரு பகுதியாக நேற்றுமுன்தினம் காலை கட்டைக்காட்டு கடற்பரப்பில் மேற்கொண்ட சுற்றி வளைப்பில் சட்டவிரோதமாக ஒளி பாய்ச்சி மீன் பிடித்த இருவர் இரண்டு படகுகளுடன் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக யாழ்ப்பாணம் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# இராமர் பாலத்தின் ஆறு மணல் திட்டுகள் வரை சுற்றுலாப் பயணிகளுக்கான படகுச் சேவை

## மன்னார் அரச அதிபர் கனகேஸ்வரன் தெரிவிப்பு




(ஜோசப் நயன்)

மன்னார், தலைமன்னார் பகுதியில் கடலுக்குள் காணப்படுகின்ற ராமர் பாலத்தின் ஆறு தீடைகள் (மண் திட்டுகள்) வரை சுற்றுலாப் பயணிகள் பார்வையிடுவதற்கு அழைத்துச் செல்லும் படகுச் சவாரித் திட்டத்துக்கு அனுமதி வழங்கப்படவுள்ளதாக மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

இப்படகுச்சேவை தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் (22) மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

கலந்துரையாடலில் வட மாகாண சுற்றுலாப் பணியகத் தலைவர் பத்திநாதன், மன்னார் மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் டபிள்யூ.எம். கீர்த்தி ஸ்ரீ சந்திரரத்ன, பிரதேச செயலாளர், முப்படையினர், பொலிஸார் கலந்து கொண்டனர்.

இதன்போது மே மாதம் 15 ஆம் திகதி இத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார். திட்டத்தை ஆரம்பிப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் மிக விரைவாக மேற்கொள்ளப்படுமென்றும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி வழங்கப்பட்டு நீண்ட காலமாகத் தாமதமான இந்தத் திட்டத்தை வெகு விரைவில் நடைமுறைப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளதென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் குழுவொன்று நிறுவப்பட்டுள்ளது.

அதேநேரம், பாதுகாப்பு ஏற்பாடுகள், பயணிகள் எண்ணிக்கை, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பில் கடற்படையினர் அறிக்கை சமர்ப்பிப்பார்கள் எனவும் கூட்டத்தில் கூறப்பட்டது.

அடுத்த கட்டமாக சுற்றுலாப் பயணிகளிடம் அறவிடப்படும் கட்டணம் தொடர்பில் தீர்மானிப்பதெனவும் கூட்டத்தில் முடிவு எட்டப்பட்டுள்ளது.

# யாழில் கனடா செல்வதற்கு நிதி வசதி இல்லாத இளைஞன் தவறான முடிவெடுத்து உயிர்மாய்ப்பு!

(பு.கஜிந்தன்)

கனடா செல்வதற்கு நிதி வசதி இல்லாத இளைஞனொருவர் நேற்று முன்தினம் (22) தவறான முடிவெடுத்து தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளளார்.

இதன்போது யாழ்ப்பாணம் - வைத்தியசாலை வீதி பகுதியைச் சேர்ந்த லிங்கேஸ்வரன் கிரிஸ்டியன் (வயது 30) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த நபர் கனடா செல்வதற்கு நீண்ட நாட்களாகத் திட்டமிட்டிருந்தார். இருப்பினும், நிதி வசதி இல்லாத காரணத்தால் யாழ்ப்பாணம் - ஆரியகுளம் பகுதிக்கருகிலுள்ள காணியில் உள்ள மரத்தில் தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.




# ஒலிம்பிக் கிரிக்கெட்டில் ஆடப்போகும் அணிகள் எவை?

## அமெரிக்கா நேரடித் தகுதி

2028ஆம் ஆண்டு அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸில் நடைபெறும் ஒலிம்பிக் விளையாட்டில் 128 ஆண்டுகளுக்குப் பிறகு கிரிக்கெட் இடம்பெறவுள்ளது. எனினும் இதில் 06 கிரிக்கெட் அணிகள் மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளன.

ஐ.சி.சியில் முழுநேர உறுப்பினராக 12 அணிகள் இருக்கும் நிலையில் இதில் வெறுமனே 06 அணிகள் மட்டுமே கலந்துகொள்ள வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆண்கள், பெண்கள் பிரிவில் 06 அணிகள் கலந்துகொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளன. ரி20 வடிவில் நடைபெறும் இதில் ஒவ்வொரு அணியிலும் 15 பேர் தெரிவுசெய்யப்பட்டு மொத்தமாக 90 பேர் ஒலிம்பிக்குக்கு தெரிவாக இருக்கிறார்கள்.

2028 ஒலிம்பிக்கை நடத்தும் அமெரிக்க அணி தானாகவே தெரிவானதால் மீதமுள்ள 05 அணிகள் மட்டுமே கலந்துகொள்ள முடியும். இந்த அணிகள் தெரிவு முறைகள் குறித்து தற்போது எந்தத் தகவலும் தெரிவிக்கப்படவில்லை. விரைவில் இது குறித்த அறிவிப்பு வெளியாகுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 2025 பாடசாலை ரக்பி சீசனுக்கு தயாரான கொழும்பு சாஹிரா கல்லூரி



(எம். நஸார்)

நூற்றாண்டுக்கும் மேலான ரக்பி பாரம்பரியத்தைக் கொண்ட சாஹிரா கல்லூரி, 2025 பாடசாலை ரக்பி சீசனில் குறிப்பிடத்தக்கதோர் இடத்தை அடைய துணிச்சலுடன் தயாராகி வருகின்றது. கடந்த இரண்டு ஆண்டுகளில் தொடர்ந்தும் முதல் 06 இடங்களில் தனது இடத்தை தக்கவைத்துக்கொண்ட இவ்வணி புதுப்பிக்கப்பட்ட ஆற்றல், உறுதிப்பாடு மற்றும் இன்னும் உயரத்துக்குச் செல்ல வேண்டும் என்ற தெளிவான இலக்குடன் புதிய போட்டித்தொடரில் நுழைகிறது.

2025 சீசனின் பிரதான அனுசரணையாளர்களான மூஸ் க்ளோதிங் கம்பெனி, டயமண்ட் பெஸ்ட் ஃபுட் மற்றும் ரைட் எனர்ஜி டிரிங்க் ஆகிய நிறுவனங்களின் தாராளமான ஆதரவு அணியின் இலட்சியங்களை வலுப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

பாதுகாப்பு மற்றும் தனிப்பட்ட பாதுகாப்பு உபகரண கூட்டாளராக ஏ.டி.ஏ க்ளோவ்ஸ் சொல்யூஷன்ஸ், வங்கி கூட்டாளராக ஹட்டன் நேஷனல் வங்கி, ஊட்டச்சத்து கூட்டாளராக பைரஹா மற்றும் அதிகாரபூர்வ சுகாதாரப் பாதுகாப்பு கூட்டாளராக ஹேமாஸ் மருத்துவமனை உள்ளிட்ட பல கூட்டாளர்களும் அவர்களுடன் இணைந்துள்ளனர்.

இவ்வாண்டு லுக்மான் நதீம் தலைமையிலான சாஹிரா ரக்பி அணி இலங்கை முன்னாள் சர்வதேச வீரரும் சம்பியன்ஷிப் வென்ற பயிற்சியாளருமான ராதிகா ஹெட்டியாரச்சியின் நிபுணத்துவ வழிகாட்டுதலின் கீழ் களமிறங்கவிருக்கின்றது.

ஸாஹிராவின் 2025ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதி கிண்ண நொக் அவுட் ஆட்டம் வித்யார்த்த கல்லூரியுடனான காலிறுதிக்கு முந்தைய போட்டியுடன் ஏப்ரல் 26ஆம் திகதி தொடங்குகிறது.

# ஐ.பி.எல் சாதனை படைத்த ராகுல்



ஐ.பி.எல். கிரிக்கெட்டில் அதிவேகமாக 05 ஆயிரம் ஓட்டங்களை எட்டிய வீரர் என்ற சாதனையை டெல்லி கெப்பிடல்ஸ் அணியின் கே.எல். ராகுல் படைத்தார். ஐ.பி.எல். தொடரில் லக்னோவில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் லக்னோ சுப்பர் ஜெயன்ட்ஸ் - டெல்லி கெப்பிடல்ஸ் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் 08 விக்கெட்டுகளினால் டெல்லி அணி இலகு வெற்றிபெற்றது. டெல்லி தரப்பில் அதிகபட்சமாக கே.எல்.ராகுல் 57 ஓட்டங்கள் எடுத்தார். ராகுல் 51 ஓட்டங்கள் எடுத்த போது, ஐ.பி.எல். கிரிக்கெட்டில் 05 ஆயிரம் ஓட்டங்களை (130ஆவது இன்னிங்ஸ்) கடந்தார். இந்த மைல்கல்லை அடைந்த 8ஆவது வீரர் ஆவார்.

அதேசமயம் அதிவேகமாக 05 ஆயிரம் ஓட்டங்களை எட்டிய வீரர் என்ற பெருமையை பெற்றார். இதற்கு முன்பு டேவிட் வார்னர் 135 இன்னிங்ஸில் இந்த இலக்கை எட்டியதே அதிவேகமாக இருந்தது. அடுத்து விராட் கோஹ்லி - 157 இன்னிங்ஸ், டி வில்லியர்ஸ் - 161 இன்னிங்ஸ், ஷிகர் தவான் - 168 இன்னிங்ஸ் ஆகியோர் உள்ளனர்.

## விளையாட்டுத் துளிகள்

★ பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் தொடருக்கு முன்னோட்டமாக களிமண் தரை போட்டியான மெட்ரிட் ஓபன் டென்னிஸ் தொடர் ஸ்பெயினில் திங்கட்கிழமை ஆரம்பமானது. எதிர்வரும் மே 04ஆம் திகதிவரை போட்டிகள் நடக்கின்றன. ஆயிரம் தரவரிசை புள்ளிகளை வழங்கும் இந்தப் போட்டிக்கான மொத்த பரிசுத் தொகை 80 ஆயிரத்து 55 ஆயிரம் யூரோக்களாகும். இதில் பல முன்னணி நட்சத்திர வீர, வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

## PSL - 2025

**இன்றைய போட்டி**

போட்டி இல. - 14

லாஹூர் VS பெஷாவர்

லாஹூர் - இரவு 8.30 மணி

**முடிவு**


போட்டி இல. - 12

முல்தான் - 228/5 (20)

லாஹூர் - 195/9 (20)

முல்தான் 33 ஓட்டங்களினால் வெற்றி

# ஆப்கானிஸ்தானுடன் மோதும் இலங்கை ‘ஏ’ டெஸ்ட் அணி அறிவிப்பு


1 TEAM 1 NATION
Sri Lanka Cricket

Media Release

23rd April 2025

The Sri Lanka Cricket Selection Committee has named the following Sri Lanka 'A' squad to participate in the upcoming Four-Day Game against the Afghanistan 'A' Team.

The Four Day Game will be played from 29th April to 2nd May in Abu Dhabi.

The Squad

1.) Pasindu Sooriyabandara - Captain
2.) Lahiru Udara
3.) Ravindu Rasantha
4.) Kamil Mishara
5.) Nuwanidu Fernando
6.) Pavan Rathnayake
7.) Sadeera Samarawickrama
8.) Sonal Dinusha
9.) Tharindu Rathnayake
10.) Wanuja Sahan
11.) Dilum Sudeera
12.) Isitha Wijesundara
13.) Milan Rathnayake
14.) Dilshan Madushanka
15.) Asanka Manoj
16.) Shiran Fernando - Standby

(அகீல் சிஹாப்)

ஆப்கானிஸ்தான் ‘ஏ’ அணியுடன் நடைபெறவுள்ள 04 நாட்கள் கொண்ட டெஸ்ட் போட்டிக்கான இலங்கை ஏ அணி பெயரிடப்பட்டுள்ளது. 15 வீரர்கள் கொண்ட குறித்த அணிக்கு பசிந்து சூரியபண்டார தலைவராக பெயரிடப்பட்டுள்ளார்.

இலங்கை ஏ, ஆப்கானிஸ்தான் ஏ மற்றும் அயர்லாந்து ஏ அணிகள் பங்கேற்கும் முக்கோண ஒருநாள் தொடர் தற்சமயம் ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்று வரும் நிலையில் அடுத்து இலங்கை ஏ அணி மற்றும் ஆப்கானிஸ்தான் ஏ அணிகளுக்கிடையில் 04 நாட்கள் கொண்ட டெஸ்ட் போட்டியொன்று நடைபெற்றது.

அபுதாபியில் எதிர்வரும் 29ஆம் திகதி முதல் மே மாதம் 02ஆம் திகதிவரை குறித்த போட்டி நடைபெறவுள்ளது. இளம் வேகப்பந்து வீச்சாளர் ஷிரான் பெர்னாண்டோ மேலதிக வீரராக அணியில் இடம்பெற்றுள்ளார். தற்சமயம் நடைபெற்றுவரும் முக்கோண ஒருநாள் தொடரின் இறுதிப்போட்டிக்கு இலங்கை ஏ அணி தகுதிபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இறுதிப்போட்டி நாளை (25) அபுதாபியில் நடைபெறவுள்ளது.

## IPL - 2025

**இன்றைய போட்டி**

போட்டி இல. - 42

பெங்களூரு VS ராஜஸ்தான்

பெங்களூரு - இரவு 7.30 மணி

**முடிவு**

போட்டி இல. - 40

லக்னோ - 159/6 (20)

டெல்லி - 161/2 (17.5)

டெல்லி 08 விக்கெட்டுகளினால் வெற்றி

# இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் அதிநவீன நீச்சல் தடாகம் திறந்துவைப்பு



இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினால் கொழும்பு ஆர். பிரேமதாச சர்வதேச கிரிக்கெட் விளையாட்டரங்கில் அமைந்துள்ள தேசிய உயர் செயற்றிறன் நிலையத்தில் அமைக்கப்பட்ட அதிநவீன எட்டு தடங்களைக் கொண்ட நீச்சல் தடாகம் நேற்று முன்தினம் வைபவரீதியாக திறந்துவைக்கப்பட்டது.

தேசிய அணிகள், ஏ அணி, தேசிய வேகப்பந்து மற்றும் சுழல்பந்து வீச்சாளர்கள், வீரர்களின் உடற்தகுதிக்கு உதவுதல், போட்டிக்கு பிந்தைய மீட்சி, காயங்களிலிருந்து மீள்வதற்கான சிகிச்சைகள் ஆகியன அங்கு வழங்கப்படும். அத்துடன் இலங்கைக்கு வருகை தரும் வெளிநாட்டு கிரிக்கெட் அணிகளுக்கும் இந்த நீச்சல் குளத்தைப் பயன்படுத்த முடியும்.

ஆண்கள் மற்றும் பெண்களுக்கான நவீன உடைமாற்று அறைகள், முதலுதவி வசதிகள், வீரர்களின் பராமரிப்பு மற்றும் மீட்சிக்குரிய தொழில்முறை சூழலை உறுதிசெய்யும் அத்தியாவசிய வசதிகள் என்பன நீச்சல் தடாக வளாகத்தில் செய்துகொடுக்கப்பட்டுள்ளது.

பிரதி விளையாட்டுத்துறை அமைச்சர் ஒலிம்பியன் சுகத் திலக்கரட்ன, இலங்கை அணியின் முன்னாள் தலைவரும் தற்போதைய தலைமைப் பயிற்றுநருமான சனத் ஜயசூரிய, இலங்கை மகளிர் அணித் தலைவி சமரி அத்தபத்து ஆகியோர் இணைந்து நீச்சல் தடாகத்தை திறந்து வைத்தனர்.

மாணவர்களின் கல்வி வழிகாட்டியான ஜீனியர் தமிழன் ஏப்ரல் மாத சஞ்சிகைகள்

தற்போது விற்பனையில்...





ரூபா 100/= ரூபா 120/= ரூபா 120/=

- புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்
- வினாத்தாள் I, II வழிகாட்டிகள்
- தமிழ், கணிதம், சுற்றாடல் பாட செயலட்டைகள் (துவணைகளின் அடிப்படையில்)
- திறன் அடிப்படையிலான நுண்ணறிவு விளக்கங்கள்
- தரம் - 5 சுற்றாடல் பாடத்தொகுப்பு - 04, 05
  - இசைக்கருவிகளின் சுற்றாடல்
  - இரு வினாக்களை அடக்கிய ஒரு வினாக்களின் தொகுப்பு
- நுண்ணறிவுத்தொடர் 2 - கட்புலனறிவு
- விஞ்ஞான பரிசோதனைகள்
- சிங்கள, ஆங்கிலப் பாட பயிற்சிகள்
- மாணவர்களின் சித்திரங்கள்
- கதைக்குள் ஒரு கணிதப்புதிர் - 04, குறுக்கெழுத்துப்போட்டி
- சிறுவர் திருக்குறள் சிறுகதை

ஒவ்வொரு சஞ்சிகைக்குள்ளும் இணைக்கப்பட்டுள்ள படத்தாள் ஒன்றினை இலவசமாக பெற்றுக்கொள்ளுங்கள்.

தேர்ச்சிபெற்ற ஆசிரியர்களால் தொகுத்து வெளியிடப்படுகிறது

மேலதிக விபரங்களுக்கு :
011 5 200 900 | 074 1684643 | 0777 983308 | Junior Thamilan

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7